# சொல்லத் துடிக்குது மனசு






இன்பா அலோசியஸ்

www.pustaka.co.in

# சொல்லத் துடிக்குது மனசு





இன்பா அலோசியஸ்

www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# சொல்லத் துடிக்குது மனசு

Solla Thudikkuthu Manasu

Author :

இன்பா அலோசியஸ்

Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

பகுதி – 1

பகுதி – 2

பகுதி – 3

பகுதி – 4

பகுதி – 5

பகுதி – 6

பகுதி – 7

பகுதி – 8

பகுதி – 9

பகுதி – 10

பகுதி - 11

பகுதி – 12

பகுதி – 13

பகுதி – 14

பகுதி – 15

பகுதி – 16

# சொல்லத் துடிக்குது மனசு

## பகுதி – 1

“நூறுவருஷம் இந்த மாப்பிள்ளையும் பொண்ணும்தான்

பேருவிளங்க இங்கே வாழணும்….

சோலைவனத்தில் ஒரு சோடிக்கிளி போலத்தான்

காலம்முழுக்க இங்கே வாழணும்………”.

கல்யாணவீட்டில் ஸ்பீக்கர் அலற, மணமேடையில் அமர்ந்திருந்த முகிலனோ கோபத்தின் கொதிப்பில் இருந்தான். மணமகனுக்கே உரிய பூரிப்போ…, தன்னவளைப் பற்றிய எண்ணமோ…., திருமணத்திற்கே உரிய எதிர்பார்ப்போ…., எதுவும் இல்லாமல், அவன் மனதில் கோபமும், வெறுப்பும் மட்டுமே குடிகொண்டிருந்தது.

அந்தக் கோபத்திற்கும், வெறுப்பிற்கும் காரணம்…, அவனுக்கு மனைவியாகப்போகும், வளர்மதி கிடையாது. பிறகு யார்தான் காரணம் என்றால்…, அவனைப் பெற்ற வேதநாயகமே. அவரைப் பற்றி எண்ணிய உடனே…,

“ஏண்டா  மூஞ்சிய இப்படி  வச்சுக்கிட்டு இருக்க? கொஞ்சம் சிரிச்ச மாதிரிதான் இரேன். சொந்த பந்தம் எல்லாம்..., என்ன என்னன்னு கேட்டு என் உயிரை வாங்குறானுங்க.....”, அவசரமாக அவன் அருகில் மண்டியிட்டவர், அதே அவசரத்தில் மொழிந்துவிட்டு, அங்கிருந்து அகன்றுவிட்டார்.

முகிலனுக்கோ..., எரியும் கொள்ளியில் இன்னும் கொஞ்சம் எண்ணையை ஊற்றியதுபோல், அடிமனம் கபகபவென்று எரிந்தது. ‘ம்..., என் பையனுக்கு விருப்பமில்லாமல் இந்தக் கல்யாணத்தை நடத்துறேன்..., அதான் அவன் மூஞ்சியை இப்படி வச்சுட்டு இருக்கான்னு சொல்ல வேண்டியது தானே...’, ஆத்திரமாக அவன் உரைக்க, அது.. அவர் செவியைத் தீண்டவில்லை.

ஏனென்றால் அதை அவனால் மனதுக்குள் மட்டுமே பொரிய முடிந்தது.

மனதின் கோபம் சுறுசுறுவென ஏற...., ஹோம குண்டத்திலிருந்து எழுந்த புகையால் கண்ணும் எரிந்தது அவனுக்கு. ‘இதெல்லாம் எப்போ முடியும்...’, எழுந்த எரிச்சலை அடக்க முடியாமல் திணறினான்.

அவன் மனநிலை புரியாமல்..., “இந்தப் பூவை ஹோமத்தில் போடுங்கோ...., எண்ணையை ஊத்துங்கோ.....”, ஐயர் அவர் கடமையைச் செவ்வனே செய்ய...,

‘மவனே.... இருக்க கோபத்துக்கு..., உன்னையவே இந்த ஹோமகுண்டத்தில் போட்டு பஸ்பமாக்கிடுவேன் ஆமா....’, உக்கிரமாக அவரை முறைக்க, அவன் எண்ணவோட்டம் புரியாமலேயே..., “நான் சொல்லுவதை அப்படியே திரும்பச் சொல்லுங்கோ....”, அவர் மந்திரங்களைச் சொல்ல,

அவன் அந்த மந்திரங்களைக் கடித்து துப்பியதில் என்ன உணர்ந்தாரோ..., வேகமாக...., “பொண்ணை அழைச்சுட்டு வாங்கோ....”, அவசரமாக குரல் கொடுத்தார்.

அதற்கும் சேர்த்து அவரை முறைக்க..., “மாப்பிள்ளைக்கு ரொம்ப அவசரமோ...”, நேரம்காலம் தெரியாமல் அவர்

வம்பிழுக்க, ஹோமகுண்டத்தையும் பார்த்து, அவரையும் ஒரு பார்வை பார்க்க, அவனது எண்ணம் புரிந்துபோக..., கப்பென தன் வாயை மூடிக் கொண்டார்.

அத்தோடு வேகமாக அவனைவிட்டுச் சற்று தூரமாக அமர்ந்துகொண்டார். அவரது செய்கையில், அந்தச் சூழலிலும் அவன் இதழ்களில் ஒரு மெல்லியப் புன்னகை எட்டிப் பார்த்தது.

அதே நேரம் மேடையின் அருகில் மெல்லியப் பரபரப்புத் தோன்ற, அவசரமாக அங்கே பார்வையைச் செலுத்தினான். பார்த்தவனின் விழிகளில் விழுந்தாள், வளர்மதி.

அடர் பச்சை வண்ணப் பட்டுடுத்தி, வெள்ளிக் கொலுசு சப்திக்க, தலை கவிழ்ந்து, பதுமைப்போல் அன்ன நடையிட்டு வந்தாள். அளவான வளர்த்தி, மெல்லிய தேகம்...., பார்த்தவுடன் அவன் பார்வைக்கு கொஞ்சம் வித்தியாசமாகத் தோன்றினாள்.

அந்த வித்தியாசம் மனதை நெருட, சற்றுக் கூர்மையாக அவளைப் பார்த்தான். மனதில் இருந்த குழப்பத்தினாலோ என்னவோ..., சட்டென அவனால் இனம் காண முடியவில்லை. அவசரமாக மூளையைக் கசக்கினான். அந்த வித்தியாசத்தை சரியாக அடையாளம் காண முடியாமல் சோர்ந்தான்.

மனதில் எவ்வளவு கோபம் இருந்தாலும்..., வளர்மதியின் முகம் அவன் மனத்திரையில் அழுந்தப் பதியவே செய்தது. ‘இது நல்லதற்கல்ல..., இதை வளரவிடக் கூடாது...’, தனக்குத் தானே கடிவாளமிட்டவன், பார்வையை அவளிடமிருந்து திருப்பிக் கொண்டான்.

பார்வையைத் திருப்பிக் கொண்டாலும், நினைவுகள் அவளையே சுற்றியது. கூடவே..., தந்தையின் பிடிவாதத்துக்காக அவள் கழுத்தில் தாலி கட்டவேண்டிய கட்டாயத்தை நினைத்து கோபம் கொண்டான்.

அவன் பார்வை, தந்தையைத் தேட..., அப்பொழுது அவன் எதிரில் வந்து நின்றார். அவர் வந்து நிற்கவும், ஐயர்

தாலியை முகிலனின் கரத்தில் கொடுத்து, “கெட்டிமேளம்..., கெட்டிமேளம்...”, எனச் சொல்லவும் சரியாக இருந்தது.

கரத்தில் தாலியை வாங்கியவன் தந்தையைப் பார்க்க, அவரோ மீசையை முறுக்கியவாறு ‘கட்டுடா..’, என்ற பார்வை பார்க்க, அவர் பார்வையில்..., குறைந்திருந்த அவன் கோபம் தலைக்கேற..., இருக்கையிலிருந்து எழ முயன்றான்.

அப்பொழுது அவர் முதுகின் பின்னால் இருந்து விலகி வெளியே வந்து, அவனைக் கெஞ்சுதலாக ஒரு பார்வை பார்த்த தாயின் பார்வைக்கு இணங்கி..., வேண்டா வெறுப்பாக அவள் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

இதுதான் அவன் பிரச்சனையே...., தந்தையை எல்லா விஷயத்திலும் முழு மூச்சாக எதிர்க்க முடிந்த அவனால்..., தாயின் கண்ணீரின் முன்னால், எதுவும் செய்ய முடிவதில்லை.

முகிலன் ஒன்றும் தந்தையின் கட்டுப்பாட்டில் இருக்கும் விடலைப் பையன் இல்லை. ஆனாலும் அவனுக்கு நிறைய மனக் குறைகள் இருந்தது. முதல் விஷயம், அவனது வயது. இருபத்தைது வயது ஆண்மகன்.

வேலையில் சேர்ந்து ஒரே வருடம்தான் ஆகி இருக்கிறது. வேலையில் தன் திறமையை நிரூபித்துவிட்டு, இன்னும் இரண்டு மூன்று வருடமாவது வாழ்க்கையை இனிமையாக கழித்துவிட்டு திருமணம் முடிக்கலாம் என்று அவன் இருக்க..., அவன் எண்ணத்தைக் கொஞ்சம் கூட மதிக்காமல், பெண் பார்த்து, முடிவுசெய்த பிறகு நிதானமாக அவனிடம் உரைக்க, அவனும் என்னதான் செய்வான்?

“பொண்ணும் மாப்ளயும் பெரியவாகிட்டே ஆசீர்வாதம் வாங்கிக்கோங்கோ....”, அவன் சிந்தையைக் கலைத்தார் ஐயர்.

அவர் சொல்லில் கலைந்தவன், ஒருவித அலுப்புடனும் எரிச்சலுடனும் சென்று, வேண்டா வெறுப்பாக, பெற்றவர்

அருகில் நின்றான். தந்தையின் காலில் விழாமல், தாயின் காலில் விழுந்து ஆசி வாங்கினான். அவனது செய்கையில் தடுமாறிய வளர், சற்று சுதாரித்து, தன் மாமனாரின் காலில் விழுந்தாள்.

அவளது செய்கையில்..., அவர் அவளை மெச்சுதலாக ஒரு பார்வை பார்க்க, மாதவியோ அவளை நன்றிப் பார்வை பார்த்தவர், மகனிடம் ‘என்ன இது...?’, என்பதுபோல் சங்கடமான பார்வையை உதிர்த்தார்.

அதைக் கண்டுகொள்ளாமல் விடுத்தவன் விலகி நின்றான். மாதவி மருமகளை அணைத்தவர், அவளை உச்சி முகர்ந்து..., “நல்லா இருங்க...”, என்று மனமார வாழ்த்தினார்.

அதன்பிறகு யார் காலில் எல்லாம் விழுந்தோம் என்பது அவன் கவனத்தில் பதியவில்லை. அவளது பெற்றோரின் காலில் விழும் வேளையில், அவனது அலுவலக நண்பர்களைக் காணவே, அவனது கவனம் அங்கே செல்ல, வளர் அவளது தாயைக் கட்டிக்கொண்டு அழுவதை ஓரவிழிப் பார்வையில் கண்டவனின்புருவங்கள் முடிச்சிட்டாலும் , அதைக் கண்டுகொள்ளும் நிலையில் அப்பொழுது இருக்கவில்லை.

அதன் பிறகு நேரம் ரெக்கை கட்டிப் பறந்தது. முகில் வரவேற்பு வைக்க மறுத்துவிடவே, சொந்தங்கள், நண்பர்கள் அனைவரும் திருமணத்திற்கே வந்துவிடவே கூட்டம் அலைமோதியது. அனைவரையும் ஒரே நேரம் கவனித்து அனுப்புவதற்குள், வேதநாயகமும், மாதவியும் சற்று திணறித்தான் போனார்கள்.

“உன் பிள்ளை ஏன் இப்படி இருக்கான். என்னைப் பழி வாங்கணும்னே ஒண்ணு ஒண்ணா பாத்துப் பாத்து செய்வான் போல...”, அலைச்சலில் புலம்பினார்.

“நீங்க செய்ததுக்கு, அவன் செய்யிறது எவ்வளவோ பரவாயில்லை...”, நொடித்துக் கொண்டவர், அங்கிருந்து அகன்றார். மகன், திருமண நாளில் மகிழ்ச்சியாக

இல்லாதது அவரை அப்படிப் பேச வைத்ததைப் புரிந்துகொண்டார் நாயகம்.

அடுத்துவந்த மணித்துளிகள் அம்பாகக் கடக்க, மதியம் இரண்டு மணிக்கு சாப்பிட அமர்ந்தார்கள் அனைவரும். சாப்பிட்டு முடித்துவிட்டு அனைவரும் முகிலின் வீட்டிற்கு கிளம்பிச் சென்றார்கள்.

வீட்டிற்குச் சென்றவன், ஆரத்தி சுற்றி முடித்த அடுத்த நொடி..., தன் அறைக்குள் சென்று மறைந்தான். காலையில் எழுந்தது முதல்..., இவ்வளவு நேரம் நின்றது அவனை சோர்வாக்கியிருந்தது. ஒரு குட்டிக் குளியல் போட்டவன்..., களைப்பில், படுத்தவுடன் தூங்கிவிட்டான்.

மகனது செய்கையில் திணறிய மாதவி...., “அவனுக்கு கொஞ்சம் தலைவலின்னு சொன்னான் அதான் வேகமா போய்ட்டான். நீங்க ஒண்ணும் தப்பா நினைக்காதீங்க”, சங்கடமாக உரைத்தார்.

“நாங்க ஒண்ணும் தப்பா நினைக்கலை அண்ணி...”, வளரின் தாய் உரைக்க, அவர்களுக்கு அறையை ஒதுக்கியவர், மருமகளை மற்றொரு அறைக்கு அழைத்துச் சென்றார்.

“கொஞ்சம் தூங்கி ரெஸ்ட் எடு வளர்...., நான் அப்புறமா வந்து உன்னைப் பாக்கேன்...”, அவளை அங்கே விட்டுச் செல்ல முயன்றார்.

“அ...அத்தை..., நான் அம்மாவோடவே இருக்கவா...”, மருண்ட விழிகளோடு நிலம் பார்த்து, தயங்கியவாறு அவள் கேட்க, அவள் தலையை வாஞ்சையாகக் கோதியவர்..., “வயசானவங்க..., அவங்களும் அலுப்பா இருப்பாங்க. இப்போ நீ போனால் அவங்களும் தூங்க மாட்டாங்க. அதான் உன்னைத் தனியா கூட்டி வந்தேன்.

“உனக்குத் தனியா இருக்க பயம்மா இருந்தால்..., நான் வந்து இருக்கேன் சரியா...”, அவளிடம் குழந்தைக்குச் சொல்வதுபோல் சொல்ல, வேகமாகத் தலையை உருட்டினாள்.

அவளது மருட்சியான பார்வையைப் பார்த்தவர், அவளைத் தனியே விட மனமில்லாமல், அவளுடனே இருந்து, நகைகளைக் கழட்ட உதவிசெய்து, அவளைக் குளிக்க அனுப்பிவிட்டே அங்கிருந்து சென்றார்.

‘இப்படிக் குழந்தையாவே இருக்காளே..., என் மகன் அவளைப் புரிஞ்சு நடந்துப்பானா...? ஆண்டவா.... இந்தச் சின்னஞ் சிறுசுங்க வாழ்க்கையைக் காப்பாத்துப்பா...’, மகனைப் பற்றிய பயத்துடனும், அவளைப் புரிந்துகொள்ள வேண்டுமே என்ற வேண்டுதலோடும் இருந்தார் மாதவி.

அதைவிட..., வளர் பற்றிய உண்மையை அவன் அறியும் வேளையில், அவன் என்ன முடிவெடுப்பான் எனக் கவலையானார்.

# பகுதி – 2

திருமணம் முடித்தவுடன் அனைவரும் ஆவலாக எதிர்பார்க்கும் முதலிரவில், எரிச்சலோடு அமர்ந்திருந்தான் முகிலன். தந்தையின் பிடிவாதத்திற்காகத் திருமணம் செய்தாயிற்று, அதே கட்டாயத்துக்காக அவளுடன் குடும்பம் நடத்த முடியாது....

தீர்மானமாக முடிவெடுத்த பிறகுதான் மனதின் எரிச்சல் கொஞ்சம் குறைவதுபோல் இருந்தது. ஆனாலும், தன்னை நம்பி வந்தவளைத் தவிக்க விடுவது சரியா...? என்று மனசாட்சி குரல் கொடுக்க, அதைக் கண்டுகொள்ளும் நிலையில் அவன் இருக்கவில்லை.

எப்படியும், ஒரே நாளில் அவளைத் தனக்குப் பிடிக்கவில்லை என்று உணர்த்திவிட்டால்..., அவளாகவே விலகிவிடுவாள் என்று எண்ணினான். அதற்கு முதல் படியாக...., பெண்களுக்கு என்னவெல்லாம் பிடிக்காது என மனதுக்குள் பட்டியலிட்டான்.

அவன் யோசனையில் பளிச்சிட்டது...., தண்ணியடிப்பது, புகை பிடிப்பது. ஆனால் இவை இரண்டுமே அவனுக்கு அலர்ஜி. எப்பொழுதாவது தந்தையை

வெறுப்பேற்றவேண்டும் என்று தோன்றினால்…., இரவு தாமதமாக வரும் வேளையில்…, ஒரு பாட்டில் பீர் வாங்கி தன் சட்டை முழுவதும் ஊற்றிக் கொண்டு வருவான்.

வாசலில் வைத்தே அவன் தந்தை வழிமறித்தால்….,
“இப்போ நான் வீட்டுக்குள் போகவா…, இல்லை இப்படியே வெளியே போகவா…”, தெனாவெட்டாக அவன் கேட்கும்போது, அவன் தந்தை அவனை வீட்டை விட்டுச் செல்லவே சொல்வார்.

அப்படிச் சொன்னாலும்…., நீ என்னச் சொல்வது…, நான் என்னக் கேட்பது என்பதுபோல் அவரை முறைத்துக் கொண்டே வீட்டுக்குள் செல்வான். இந்த யுத்தம் அவர்களுக்குள் இன்று நேற்றுத் துவங்கியது இல்லை. முகிலன் எட்டாம் வகுப்பு சென்ற பொழுதே அவர்களுக்குள் இந்தப் போராட்டம் துவங்கிவிட்டது.

அவனது யோசனைகள், எங்கே சுற்றினாலும், இறுதியில் அவன் தந்தையிடம் வந்தே நிறைவு பெற்றது. காலையிலிருந்து அவன் மூளை முழுவதும் யோசனைகள் மட்டுமே குடிகொண்டிருக்க, தலை விண் விண்ணெனத் தெறிக்கத் துவங்கியது.

எழுந்து வெளியே சென்று மாத்திரை வாங்கலாம் என்றால்…, இருக்கும் சூழல் தடுக்க, வெட்டவெளியை வெறித்தவாறு பால்க்கனியில் நின்றிருந்தான்.

அதே நேரம் கொஞ்சம் புகைத்தால் நன்றாக இருக்கும்போல் இருக்க, டேபிள் டிராயரில் வைத்திருந்த சிகரெட் ஒன்றை எடுத்து பற்ற வைத்து இழுத்தான். பழக்கமில்லாத புகை நெஞ்சை அடைக்க, கண் எரிந்து…, குபுக்கென இருமல் எட்டிப் பார்த்தது.

கண்ணீர் வரும்வரை இருமியவன்…, இறுதியில் சிகரட்டைத் தூக்கி தூரே எறிந்தான். ஆனாலும் இருமல் நிற்கவில்லை. தொடர்ந்து இருமவே…, திடீரென அவன் முன்னால் ஒரு வளைக்கரம் ஒரு டம்ப்ளரை நீட்டியது.

அந்த நேரம் எதையாவது குடித்தால்தான் அந்த இருமல் அடங்கும் என்று தோன்றவே, வேகமாக அதை வாங்கி, குடித்தான்.

அத்தோடு நில்லாமல்..., "உங்களுக்கு சளி புடிச்சுருக்கா.... அதான் காலையில் இருந்து ஒரு மாதிரியா இருக்கீங்களா மச்சான்....", எனக் கிள்ளை மொழியில் அவள் வினவ...., அவளது 'மச்சான்' என்ற அழைப்பில்..., குடித்த பால் புரைக்கேறி...., இன்னும் அதிகம் இருமினான்.

ஒரு வழியாகத் தன்னைக் கட்டுப்படுத்தியவன்...., "இப்போ என்ன சொன்ன...?", அதிர்ச்சி விலகாமல் கேட்டான்.

அவனது அதிர்வை உணர்ந்தவள்...., "இல்ல...., உங்களுக்கு சளி....", "ம்ச்..., அது இல்லை....", அவன் கடுப்பாக...,

"அதனால்தான் காலையில்....", "அதெல்லாம் இல்லை...., கடைசியா என்னமோ சொன்னியே....", அவன் கையை ஆட்டி வினவ..., புரியாமல் மருண்டு விழித்தாள்.

அவள் பார்வையில் என்ன உணர்ந்தானோ..., தன்னை நிதானத்துக்கு கொண்டுவந்தவன்...., "அதென்ன மச்சான்....?", புருவம் சுருக்கி அவன் கேள்வியாக வினவ....,

"இல்ல...., எங்க அம்மா, ஐயாவை அப்படித்தான்....", அவள் இழுக்க...,

அவளைக் கை காட்டித் தடுத்தவன்..., "ஆமா...,அது யார் ஐயா....?", அவன் இடைப் புகுந்தான்.

"என்னோட அப்பாரு..., இல்ல அப்பா..., மாமா அப்படித்தான் சொல்லணும்னு சொன்னாக..., நாந்தே...., நான்தான் மறந்துட்டேன்...", ஏதோ தவறு செய்த சிறுமியாகத் தட்டுத் தடுமாறினாள்.

முகிலனுக்கு அனைத்தும் புதுமையாக இருந்தது. அவள் தனது தந்தையை 'ஐயா' என்று அழைப்பது...., அவளது நாட்டுப்புறப் பேச்சு. அதை மாற்றிப் பேச முயல்வது, என...., அனைத்தும் குழப்பமாக இருந்தது.

அதிலும் இறுதியில்..., ‘மாமா’ என்று அவள் சொன்னது தன் தந்தையைத்தான் என்பது புரிய..., இறங்கியிருந்த கோபம் மெல்ல ஏறத் துவங்கியது.

ஆனாலும் தன் சந்தேகத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டு..., “இப்போ நீ மாமான்னு சொன்னியே..., அது என் அப்பாவையா...?”, அவன் கேட்க...,

“பின்ன வேற யாரை நான் அம்புட்டு உரிமையா மாமான்னுசொல்லுவேன். உங்க ஐயாவைத்தான் சொன்னேன்...”, அவள் வெள்ளந்தியாக மொழிய..., எங்கேயாவது சுவரில் முட்டிக்கொள்ளலாமா என்று வந்தது அவனுக்கு.

தந்தைமேல் இருந்த கோபம்..., அவளது அழைப்பு..., பேச்சு..., அனைத்தும் கிளறப்பட..., “இதோபார்..., நான் முதலும் கடைசியுமா சொல்லுறேன்..., என்னை இந்த மாமன்..., மச்சான்..., அப்படின்னு சொன்ன..., அறைஞ்சு பல்லு கில்லெல்லாம் கழட்டிடுவேன்.

“சரியான பட்டிக்காடா இருப்பா போல..., என் ரசனைக்கு ஏற்பப் பொண்ணு பாக்காமல்..., அவரு ரசனைக்கு பொண்ணு பாத்துவச்சிருக்கார் பாரு...”, தன் தலையிலேயே அறைந்துகொண்டான்.

“நீங்க கோச்சுக்காதீங்க..., உங்களுக்கு, நான் அப்படிக் கூப்பிடுவது பிடிக்கலன்னா..., நான் உங்களை ‘அத்தான்’னு வேண்ணா சொல்லவா...”, அவள் வேகமாகத் தன்னைத் திருத்திக்கொள்ள முயல...., தன் கோபத்தையும், வெறுப்பையும் அவள் கண்டுகொள்ளாதது ஒரு விதத்தில் அவனை பாதித்தது.

அவனது கோபத்துக்கு எதிர் விளைவாக அவள் கோபப்பட்டிருந்தாலோ, அவனைவிட்டு விலகியிருந்தாலோ அவன் எப்படி நடந்துகொண்டிருப்பானோ...., ஆனால் அவளது இந்த அணுகுமுறை, வெள்ளைப் பேச்சு அவனைத் தேக்கியது.

ஆனாலும் தன் மனதை அவளிடம் வெளிப்படுத்தாமல்...., “நீ எதுவுமே சொல்ல வேண்டாம்னு சொன்னேன்...., முதல்ல இங்கே இருந்து போ...”, தன் மனம் இளகுவது பொறுக்காமல், அவளிடம் எரிந்து விழுந்தான்.

அவன் கோபத்தில் மருண்டவள்..., “நீங்க கோபமா இருக்கீங்கன்னு தெரியுது. ஆனா ஏன்னு புரியல..., சரி எதுக்கும் நான் உள்ளாரப் போறேன்..”, தயங்கித் தயங்கி, தலையை ஆட்டிச் சொன்னவள்..., அவன் பதிலை எதிர்பாராமல் உள்ளே சென்றாள்.

செல்லும் அவளையே வியப்பாய் பார்த்தான். முதிராத பேச்சு, குழந்தைமுகம் மாறாத பொலிவு..., அப்பழுக்கற்ற மனம்..., அவள் தன்னிடம் நடந்துகொண்ட முறையில், அவளைப் பற்றி அவன் கணித்தது இவை.

‘இவளை எப்படி விலக்கிவைக்க....’, இறங்கியிருந்த தலைவலி அவனுக்கு ஏறத் துவங்கியது.

ஒரு பத்து நிமிடம் தன்னை நிலைப்படுத்தியவன்..., அறைக்குள் செல்ல..., அலங்கரிக்கப்பட்ட கட்டிலின் நுனியில் கூட அமராமல்...., நகம் கடித்தவாறு..., அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“இப்போ என்ன...?”, அவளிடம் வினவ...

“இல்ல..., உள்ளார வந்த உடனே..., உங்க கால்ல விழுகச் சொன்னாக...., நான் மறந்துட்டேன். அதான்...”, தவறுசெய்த குழந்தையாக அவள் கூற..., அவளது தோற்றம் அவனைப் புரட்டிப் போட்டது.

அதை மறைத்தவாறே...., “ஏன் அதை மட்டும்தான் சொன்னாங்களா..., வேற எதையும் சொல்லி அனுப்பலையா...?”, கேட்டவன் அவளையே கூர்மையாகப் பார்த்தான்.

“ம் சொன்னாக..., உங்க மனசு கோணாமல் நடந்துக்கணும்னு சொன்னாங்க. அப்புறம்...., அம்மாதா..., நான் ரூமுல இருக்கும்போது.... வந்து..., என்னமோ கத்தக்

கூடாது..., சத்தம் போடக் கூடாதுன்னு சொல்லி அனுப்பிச்சாங்க...,

“நான் எதுக்கும்மா கத்தப் போறேன்னு கேட்டேன்..., அதுக்கு எங்க அம்மா... இங்கே வந்தா தெரிஞ்சிடும்னு சொன்னாங்க... வேற...”, அவள் புருவம் சுருக்கி யோசிக்க..., அவனுக்குத்தான் ஐயோ என்று இருந்தது.

அவளை மேலும் யோசிக்க விடாமல்...., “போதும் போதும்....”, கிட்டத்தட்ட கத்தியவன்...., அவள் தெரிந்து சொல்கிறாளா...., இல்லை எதார்த்தமாகப் பேசுகிறாளா என்பதை அறிய அவளையே ஊடுருவினான்.

அவன் பார்வையின் பொருள் விளங்காமல் அவனையே பார்த்திருந்தாள். அவளது அசையாத பார்வையை உணர்ந்தவன்..., இதற்குமேல் அவளோடு பேசினால்..., இந்த இரவையும் யோசித்தே கழிக்கவேண்டி இருக்கும் என்பது புரிய....,

“நீ இதுக்குமேல எதையுமே சொல்ல வேணாம்..., பேசாம படு....”, சொல்லிவிட்டு, உடை மாற்றச்சென்றுவிட்டான். சென்று திரும்பியவன்..., அவள் இன்னும் அசையாமல் இருப்பதைப் பார்த்தவன்..., “அதான் படுன்னு சொன்னேன்ல...”, அவளிடம் எரிச்சல் பட...,

அவளோ அதைக் கண்டுகொள்ளாமல்...., “இல்ல..., எங்க படுக்கன்னு...”, அவள் தடுமாற...,

“ஏன்..., இவ்வளவு பெரிய ரூம்ல உனக்குப் படுக்க இடமா இல்ல...., அதான் இவ்வளவு பெரிய கட்டில் இருக்கே..., அந்த ஓரமா படு...”, இப்போதைய அவனது கத்தலில்.., ஓடிச் சென்றுப் படுத்தவள்..., தன் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

‘இவ வேணும்னே செய்யிறாளா...., இல்ல மூளை வளர்ச்சி இல்லாதவளா.., இல்லன்னா வெகுளியா...?”, யோசனையோடே அவள் அருகில் சென்று படுத்தான்.

படுத்தவன், அவளுக்கு முதுகு காட்டிப் படுத்திருக்க..., அவளோ உறங்காமல் பிரண்டுப் பிரண்டுப் படுக்கவே..., அவனால் உறங்க முடியவில்லை. அவளது பேச்சுக்கும்..., செய்கைக்கும் சம்பந்தம் இல்லாததுபோல் தோன்ற..., ‘இவ என்கிட்டேயே நடிக்கிறாளா...?’, கோபம் ஊசி முனையாய் அவனைத் தாக்க,

“இப்போ என்னத்துக்கு இப்படி உருண்டுக்கிட்டு வாற..., உனக்கு என்னதான் வேணும்?...., சும்மா பச்சப் புள்ளை மாதிரி என்கிட்டேயே வேஷம் போடுறியா?..., அதானே பாத்தேன்...., என்னடா நாம ஒண்ணு சொன்னா..., இவ புரியாத மாதிரியே வேற ஒண்ணு பேசுறாளேன்னு பாத்தேன்....,

“என்ன சொல்லணுமோ..., கேக்கணுமோ கேட்டுடு....”, ஆத்திரமாகக் கத்தினான்.

“எ..., எ...துக்கு இம்புட்டு....”, அவள் திக்கித் திணற...,

“ஏய்..., நீ என்ன கேக்க வந்தியோ அதை மட்டும் கேளுடி...”, கண்ணை உருட்டி மிரட்டினான்.

“நீ..., நீங்க..., நாளைக்கு நியூஸ்பேப்பர் வாங்குவீங்களா....?”, சம்பந்தமே இல்லாமல் அவள் வினவ..., குழம்பிப் போனான் அவன்.

‘இந்த நேரத்தில் எதுக்கு இதைக் கேக்கா....’, மூளை கேள்வி எழுப்பினாலும்..., “ஆமா..., அதுக்கென்ன இப்போ...”, வாய் அவள் கேட்டதுக்கான பதிலை உரைத்தது.

“இல்ல...., நாளைக்கு எனக்கு பத்தாப்பு ரிசல்ட் வருது அதான்....”, அவள் ஆர்வமாகச் சொல்ல...,

“என்னது...?”, தலையில் இடி இறங்கிய அளவு அதிர்ந்து கத்தினான் முகில்.

## பகுதி – 3

வனது கத்தலில் மிரண்டவள்..., அவனைப் புரியாத பார்வை பார்த்தாள். முகிலனோ..., அதிர்ச்சியின் உச்சத்தில்

அ இருந்தான். தன் தந்தை, தனக்கு இருபத்திஐந்து வயதில் திருமணம் செய்து வைத்ததையே ஜீரணிக்க முடியாமல் இருந்தவன்,

மேலும்  தனக்கு, மேஜர் ஆகாத ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வைத்திருக்கிறார் என்பதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. அவளை, பெண் என்றுகூட சொல்ல முடியாது..., சிறுமி என்று சொல்ல வேண்டுமோ..., அந்த நிலையிலும் இதையும் சிந்தித்தான்.

“இப்போ என்ன சொன்ன..., பத்தாவது ரிசல்ட்டா..., உன் வயசு என்ன...?”, அதிர்ச்சி விலகாமலே கேட்டான்.

“பதினேழு..., வேகமாகச் சொன்னவள்..., நாக்கை கடித்துவிட்டு..., இல்ல இல்ல..., பதினெட்டு...”, வேகமாகச் சொன்னாள்.

“என்ன... இதையும் உன் மாமனார் சொல்லிக் கொடுத்தாரா...?”, அவன் நக்கலாக வினவ..., அவன் கேலி புரிந்தும் புரியாத பாவனையில்..., தலையை எல்லாப் பக்கமும் அசைத்தாள்.

அவளது இந்தச் செய்கையை ரசித்தவன்..., அடுத்த நொடியே தன்னை மீட்டுக் கொண்டான். ‘இது தப்பு....’, அவன் புத்தி உரைக்க, தெளிந்தான்.

இந்த நொடியே அறையை விட்டு வெளியேறி..., தன் தந்தையை எழுப்பி நாக்கைப் பிடுங்குவது போலக் கேள்வி கேட்கவேண்டும் என்ற வெறியே எழுந்தது. ஆனால் நள்ளிரவைத் தாண்டிய இந்த வேளையில், அவர்களை எழுப்பத் தயங்கினான்.

அதற்குதான் தயங்கினானே தவிர..., மேலே வாழ்க்கையைப் பற்றி என்ன முடிவு எடுப்பது என்பதை யோசிக்கத் தயங்கவில்லை. தாடை இறுக, தன் கோபத்தைக் கட்டுப்படுத்தும் வழித் தெரியாமல்..., கண்களை இறுக மூடியவன், இடக்கரத்தால் நெற்றியை அழுந்தத் தடவிக் கொடுத்தான்.

அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது..., காலைமுதல் அவளிடம் தெரிந்த வித்தியாசம் என்னவென்று இப்பொழுது பளிச்சென புரிய..., விழி திறந்து அவளைப் பார்த்தான்.

முதிராத குழந்தையின் முகமாக இருந்தது அவள் முகம். ஆனால் உடல் வளர்ச்சியில்..., வயதுக்கு மீறிய வளர்த்தியும்..., கண்களில் டீனேஜ் பருவத்துக்கே உரிய அலைப்புறுதலும், எதிராளி மனதில் என்ன நினைக்கிறான் என்பதை கணிக்கத் தெரியாத வெள்ளைப் பார்வையுடனும் இருப்பதை உணர்ந்தான்.

‘இவள் என் மனைவியா...? குழந்தையா...?’, சத்தியமாக அவனால், அவளை மனைவி என்னும் கண்ணோட்டத்தில் பார்க்க முடியவில்லை. இதற்கு ஒரு முடிவெடுத்தே ஆக வேண்டும்..., அவன் தன்சிந்தையிலேயே மூழ்கி இருக்க,

வளரோ, அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் கோபத்தை அடக்க சிரமப்படுவதை, அவனுக்குத் தலைவலி எனக் கருதியவள், அவன் தன்னையே பார்ப்பதை உணர்ந்து..., “இப்போ தலை வலிக்குதா...? நான் வேண்ணா தைலம் ஏதாவது தேய்ச்சு விடவா...?”, தன் கேள்வியை மறந்தவள், அவனிடம் அக்கறையாகக் கேட்டாள்.

‘ஹையோ...., ஒரு சின்னப் பொண்ணுக்கு கொடுக்க வேண்டிய பொறுப்புக்களா இவை....’, அவன்தான் நொந்து போனான்.

ஆனால் அவளோ..., தனக்குத் திருமணம் முடிந்ததிலோ..., ஒரு ஆணுடன் தான் தனித்திருக்கிறோம் என்ற பயம் இல்லாமலும்...., எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் தன்னுடன் உரையாடுவதை வியப்பாய் பார்த்தான்.

“உனக்கு இப்போவே கல்யாணம் நடந்ததில் வருத்தம் இல்லையா...”, தன் மனதின் கேள்வியை அடக்க முடியாமல் அவளிடம் கேட்டுவிட்டான். கேட்ட பிறகுதான்..., அவளது முடிவை அவள் எடுக்கும் பருவ முதிர்ச்சியோ, பக்குவமோ அவளுக்கு இல்லை என்பதை அவன் உணர்ந்தான்.

அவனது கேள்வியை உணர்ந்தவள்...., புருவம் சுருக்கி அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் கவரப்பட்டான் அவன். “அது இல்லாம இருக்குமா. ஆனா ஐயா ஆசையை என்னால மறுக்க முடியலை. அம்மாவும் சொன்னாக....”, அவள் வழமைபோல் இழுக்க....,

சுள்ளென்ற கோபத்தில்..., “அவங்க கிணத்தில் விழுந்து சாவச் சொன்னால் செத்துப் போய்டுவியா....”, அவளிடம் எரிந்து விழுந்தான்.

“அப்படியெல்லாம் சொல்ல மாட்டாக...., அப்படியே சாவச் சொன்னாவன்னா..., அதில் ஏதாவது விஷயம் இருக்குமில்ல..., அப்போ நான் செத்துப் போவேன்...”, ரோசத்தோடு அவள் சொல்ல..., அவனுக்குத்தான் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

எப்படியும் அவளை இந்தத் திருமணத்தில் இருந்து பின்திருப்ப வேண்டும் என்ற எண்ணத்தில்...., “என்ன செத்துப்போவேன்.....”, அவளிடம் கடுகடுத்தவன்...., “இப்போ என்னைப்பத்தி என்ன தெரியும்...? நான் ஒரு காட்டுமிராண்டியா இருந்து....., இப்போ உன்னை ஏதாவது செய்தால் என்ன செய்வ....? ஊன்னு... மூலையில் உக்காந்து அழத்தான் தெரியும். வேற என்ன செய்வ...?’, ஆத்திரம் குறையாமலே கேட்டான்.

“அப்படியெல்லாம் சொல்லாதீக...., உங்களைப் பத்திவேண்ணா எனக்கு தெரியாமல் இருக்கலாம். என் ஐயா.., அம்மா, மாமா, அத்தை..., எல்லாரையும் தெரியும் இல்ல. அவங்க எனக்கு நல்லதுதான் செய்வாங்க..”, அவளது பதிலில் மனதுக்குள் ஒரு இதமும், மெல்லியக் கோபமும் எழுந்தது.

“உன்னையெல்லாம் என்ன செய்ய...?”, அவளிடம் கூறியவன், தந்தைமேல் இருந்த கோபம் இன்னும் அதிகரிப்பதை உணர்ந்தான்.

அதைவிட, தான் எவ்வளவு கோபப்பட்டாலும், எரிச்சல் பட்டாலும்..., அதை அவள் கண்டுகொள்ளாமல், நிதானமாக

இருப்பதும், தன்னைக் கண்டு பயப்படாமல் இயல்பாக இருப்பதையும் எண்ணி வியந்தான்.

அந்த வியப்பை மறையாமல்..., “உனக்கு என்னைப் பார்த்தால் பயம்மா இல்லையா...?”, அவன் நிதானமாக வினவ...

“எதுக்கு...?”, எனக் கேட்டு அவனை அசரடித்தாள். அத்தோடு நிறுத்தாமல்..., “நீங்க என்னை நல்லா பாத்துப்பீங்கன்னு எங்க ஐயா சொன்னாங்க..., எங்க ஐயா சொன்னால் அது சரியாத்தான் இருக்கும்...?”, அவனது எந்த முகமும் அவளை பயமுறுத்தவில்லை.

மாறாக,‘இதுதான் என் வாழ்க்கை’ என்பதை அவள் மனதளவில் ஏற்றுக் கொண்டதை உணர்ந்தான். பட்டாம்பூச்சியாய் சிறகடிக்க வேண்டிய வயதில்..., குருவியின் தலையில் பனங்காயாகத் திருமணத்தை செய்து வைத்துவிட்டார்களே...,

அவளது தந்தைமற்றும் தன் தந்தையின்மேல் கொலை வெறியே எழுந்தது. நாளைக் காலையில் முதல் வேலையாக..., அவளை அவள் பெற்றோரோடு ஊருக்கு அனுப்பிவிட்டுத்தான் மறுவேலை பார்க்க வேண்டும் என எண்ணினான்.

அத்தோடு, அவர்கள் நாக்கைப் பிடுங்கும்வண்ணம் கேள்வி கேட்காமல் விடக் கூடாது..., எண்ணியவன் அவளிடம்..., “நீ படுத்துக்க. காலையிலேயே பேப்பர் வந்துடும்....”, சொல்லிவிட்டு அவளைப் படுக்கச் சொன்னான்.

படுத்தவள் நொடியில் உறங்கிவிட..., விடிவிளக்கின் ஒளியில் அவள் குழந்தை முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தவன்..., எப்பொழுது உறங்கினோம் என்றே தெரியாமல் உறங்கினான்.

## பகுதி – 4

காலையில் யாரோ தன்னை தட்டி எழுப்பும் உணர்வில் லேசாக விழித்தவன், “என்னம்மா இது...., எட்டு

மணிக்கு எழுப்புங்க...”, என்று சொல்லிவிட்டு போர்வையை இழுத்து, தலைவரை மூடிக்கொண்டு உறக்கத்தைத் தொடர்ந்தான்.

“எ....ன்னங்க..., மணி பத்தாச்சு....”, அவள் சொல்ல..., புதிதாக கேட்டப் பெண் குரலில் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தான்.

வளரைப் பார்த்த பிறகுதான்..., தனக்குத் திருமணமே முடிந்துவிட்டது என்ற எண்ணமே எழுந்தது. அவன் கண்விழித்து எழுந்து அமர்ந்ததைப் பார்த்தவள், அவன் கையில் காஃபியைக் கொடுத்தாள், மறுக்காமல் வாங்கிக் குடித்தவன், அவள் முகம் பார்க்க,

அவள் எதையோ சொல்லத் தயங்குவதாகப் பட்டது. அதைவிட, அவள் கண்களில் தெரிந்த எதிர்பார்ப்பு கலந்த ஆர்வம்...., அவனைச் சற்று யோசிக்க வைக்க..., சட்டென நினைவு வந்தவனாக..., “ரிசல்ட் வந்துடுச்சா...”, நிஜமான ஆர்வத்துடன் கேட்டான்.

“ஆமா... பாசாயிட்டேன்..., எத்தன மார்க்குன்னுதான் தெரியலை. மார்க்லிஸ்ட் வேற வாங்கணும்..., வேகமாகச் சொன்னவள்..., இனிமேல் வாங்கி என்ன செய்ய...”, எவ்வளவு முயன்றும் அவள் குரலில் சிறிது வருத்தம் எட்டிப் பார்த்தது.

அவள் வருந்துவது பிடிக்காமல்..., அவள் கரத்தை ஆதரவாகப் பற்றி அழுத்தினான். அவன் தன் கரத்தைப் பிடிக்கவே..., முதல் முறையாகத் தலை குனிந்து, அவன் கரங்களைப் பார்த்தவள்..., மெல்லியதாக வெட்கப்பட்டாள்.

அவளது அந்த வெட்கத்தில் தன்னிலை தெளிந்தவன்..., இரவு எடுத்த சபதம் நினைவுக்கு வர..., வேகமாக எழுந்து வெளியே செல்ல முயன்றான். “குளிச்சுட்டுப் போங்க...”, அவள் குரல் முதுகின் பின்னால் கேட்க, அவள் குரலைக் கேட்டவன்..., மறுக்காமல் குளிக்கச் சென்றான்.

உள்ளே அனைத்தும் தயாராக இருப்பதைப் பார்த்தவன்...., சிறு பெருமூச்சை வெளியிட்டுவிட்டு குளிக்கத்

துவங்கினான். அவனது சோப்பின் அருகில் இருந்த ஒரு மஞ்சள் துண்டை எடுத்துப் பார்த்தவன்..., 'இது என்னது...?', யோசித்தவன்..., ஏதோ ஒண்ணு..., என்று சொல்லிக்கொண்டு குளியலைத் தொடர்ந்தான்.

அந்த குளியலறையில் இருந்த மஞ்சள் கலந்த சோப்பின் வாசனை..., புதிதாக பக்கெட்டில் இருந்த பெண்களுக்கான உடை..., எதையுமே தேடாமல், அனைத்துமே தனக்குத் தயாராக இருந்த விதம்..., என அவன் மனம்.., அவனை அறியாமல் விரும்பவே செய்தது.

கிராமத்து வாசனையே தெரியாத அவனுக்கு..., மஞ்சள் கிழங்கைப் பற்றி என்ன தெரியும்?

குளித்து முடித்தவன்..., ஒருவிதப் புது மனநிலையிலேயே இறங்கி வந்தான். ஹாலில் அவனது தந்தையோடு இருந்த வயதான தாத்தாவை, தாயுடன் இருந்த பாட்டியை, அறிமுகமற்றப் பார்வை பார்த்தவன்..., சாப்பாட்டு மேசைக்குச் சென்றான்.

"இந்தக் காலத்து பசங்களையே நம்ப முடியாது..., எல்லாம் வேணாம் வேணாம்னு பாவ்லா பண்ணுவானுங்க..., எல்லாம் நடிப்பு...", அவன் மனநிலை புரியாமல், தன் மீசையை நீவியவாறு அவர் பேச..., மனதில் கொஞ்சம் மறைந்திருந்த அவனது கோபம் கிளர்ந்து மேலே எழுந்தது.

அவரும் என்னதான் செய்வார்..., மகன் காலையில் என்னப் பிரச்சனையை கிளப்பப் போகிறானோ என்று அவர் இரவு முழுவதும் கவலைப்பட்டிருக்க, காலையில் எழுந்துவந்த மருமகள் தன்னைப் பார்த்து தயங்கிச் செல்ல..., மகன் காலையில் தாமதமாக எழுந்து வர..., அவர்கள் சந்தோசமாக இருந்ததாக அவர் எண்ணியதில் வியப்பேது!

அவர் பேச்சில்.., வளர் பரிமாறிய இட்லியை பிட்டு, வாயில் வைக்கப்போன சாப்பாட்டைத் தட்டிலேயே போட்டவன்..., "ஏய் வளர்..., இங்கவா...", அவன் போட்டக் கத்தலில்..., என்னவோ ஏதோஎன்று, கையில் வைத்திருந்த

பாத்திரத்தோடு ஓடி வந்தவள்..., அவன் அருகில் சென்று நின்றாள்.

அவன் கோப முகத்தைப் பார்த்தவள்.., பதட்டத்தோடு..., “என்னங்க...., இட்லி நல்லா இல்லையா..., நான் வேண்ணா தோசை ஊத்தவா...”, அவன் அதற்காகத்தான் கத்தினானோ என்று அவள் கேட்க,

தந்தையைக் குரோதமாகப் பார்த்தவன்..., “பட்டிக்காடு..., பட்டிக்காடு..., இங்கே என்ன நடக்குதுன்னே தெரியாமல்..., தோச ஊத்தப் போறியா நீ...”, அவள் கையில் இருந்த பாத்திரத்தை அவன் தட்டிவிட..., அந்தப் பாத்திரம் உருண்டோடி ஓசையைக் கிளப்பியது.

அதன் ஓசை அடங்கும்வரை அங்கே வேறு எந்த அரவமும் இருக்கவில்லை. அது அடங்கியதும்..., “என்னடா இது...?”, நாயகம் சண்டைக்கு வர.., அதை அலட்சியப்படுத்தியவன்...., “உன் அப்பன் எங்கடி..., அவனுக்குப் போனைப் போட்டு உடனே வரச் சொல்லுடி.

“உன்னை என் கழுத்தில் கட்டிவிட்டதும், கடமை முடிஞ்சதுன்னு கிளம்பிட்டானா...? பச்சப் புள்ளையை கல்யாணம் செஞ்சு வச்சிருக்கான். வெளியே தெரிஞ்சால் என்னைத் தூக்கி உள்ளார வச்சுடுவானுங்க. என்னை ஜெயிலுக்கு அனுப்பத்தான் உன்னை எனக்கு கட்டி வச்சானா...?

“என்னடி, சொல்லிகிட்டே இருக்கேன் மரம் மாதிரி நிக்கிற..., இப்போ போனைப் போடப்போறியா இல்லையா...?”, அவளிடம் கேட்டவன்..., அவள் அசையாமல் இருப்பதைப் பார்த்து இன்னும் ஆத்திரமாக..., தன் அலைபேசியை அவள் கையில் கொடுத்தவன், அவள் போன் செய்யாமல்..., விக்கித்து நிற்பதைப் பார்த்து, அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டான்.

“முகி...”, “டேய்...”, மாப்பிள....”, விதம் விதமான அழைப்புக்கள் அவனைத் தேக்கியது. அதிலும்..., எதற்கென்றே தெரியாமல் தண்டனை வாங்கிய வளர்

மலங்க விழிப்பதைப் பார்த்து, தன் செய்கையை வெறுக்க வைத்தது.

அவளை இறுக அணைத்து..., இந்த அடி உனக்கு கொடுக்க வேண்டியது இல்லடி செல்லம்..., என் அப்பனுக்கு கொடுக்க வேண்டியது. அது முடியாமல்த்தான் உன்னை அடிச்சுட்டு..., என்று ஆறுதல் சொல்ல அவன் உள்ளமும்.., மனமும் துடித்தது.

அந்தச் சிந்தையில்..., அந்த வயதானப் பெரியவர்..., அவனை ‘மாப்பிள்ளை’ என்று அழைத்ததை அவன் கவனிக்க மறந்துவிட்டான். வளரின் கண்ணில் இருந்து வழிந்த கண்ணீர் துளிகளில் அவன் மனம் சிதறிவிழ..., ஒரு நிமிடம் அசையாமல் நின்றுவிட்டான்.

அவனைக் கலைக்கவென்றே ஒலித்தது அந்தக் குரல்..., “மாப்ள...., உங்களுக்கு என்கிட்டேதானே பேசணும்..., நான் இங்கனதான் இருக்கேன். எம் பொண்ணு வாழறதைப் பாக்காமல் இங்கே இருந்து போய்டுவேனா...”, ஒலித்த அவர் குரலில்..., என் பொண்ணு எப்படி வாழுறான்னு பாத்துட்டேன்.., என்ற வேதனை ஒளிந்திருந்ததைக் கண்டுகொண்டான்.

அதைவிட..., அந்த குடுகுடு கிழவர் தான் வளரின் அப்பா என்பதை அவனால் நம்ப முடியவில்லை. ‘இவரா என் வளரின் அப்பா...? இவ்வளவு பேச முன்னாடியே அவருக்கு மூச்சு வாங்குதே..., அப்படின்னா...’, அவர்கள் ஏன் வளருக்குத் திருமணம் செய்து வைத்தார்கள் என்பது அவனுக்கு நொடியில் புரிந்து போனது.

தன் நினைவுகளிலேயே மூழ்கி இருந்ததால்..., அவர்கள் யார் என்பதைக் கூட கவனிக்காமல் இருந்ததை எண்ணி அந்த நிலையிலும் வருந்தினான்.

இவர்களிடம் எப்படி உங்கள் மகளை அழைத்துக்கொண்டு சென்று விடுங்கள் என்று சொல்வது...., உள்ளத்து தவிப்பை வெளிக்காட்டாமல்..., தந்தையை வெட்டும் பார்வை பார்த்தவன்..., “ஓ.... மேஜர் ஆகாத பொண்ணுக்கு

கல்யாணம் செஞ்சுவச்ச புண்ணியவான் நீங்கதானா...?”, அவன் தெனாவெட்டாக கேட்க...,

“முகி..., அவரைக் கேள்விகேட்கும் உரிமையை உனக்கு யார் கொடுத்தது? என் மருமகளை கை நீட்டியதுக்கே.., உங்கன்னத்தை என் கரம் பதம் பாத்திருக்கும்..., ஆனா பெரியவங்க முகத்துக்காகப் பாக்குறேன்...”, அவரது பேச்சில்...., அவர்கள் உன்னைவிட வயதில் பெரியவர்கள் என்ற செய்தி ஒளிந்திருந்தது.

மகனது செய்கையிலே..., அவனைத் தான் தூண்டிவிட்டுவிட்டோம் என்பது புரிய..., மனைவியை அவர் சங்கடமாகப் பார்க்க..., அவர் பார்வையோ அவரைச் சுட்டெரித்துக் கொண்டு இருந்தது.

‘இது எல்லாம் உங்களால்தான்....’, அவர் கண்கள் உரைக்க..., மகனை இப்பொழுது கண்டிக்க முடியாத சூழ்நிலைக் கைதியாகிப் போனார் அவர். அவர் இப்பொழுது வாயைத் திறந்தால்..., அது எதிர் விளைவுகளையே கொடுக்கும் என்பது அவருக்குப் புரிந்து போனது.

“இல்ல தங்கச்சி...., மாப்ள ஏதோ சொல்லப் பிரியப்படுறார். அதை என்னன்னு கேட்டுடுறேன்...”, மாதவியிடம் சொன்னவர், அவனிடம் திரும்பினார்.

“சொல்லுங்க மாப்ள...”, அவர் கெஞ்சுவதுபோல் கேட்க, பார்வையோ மகளை வருடியது. அதை உணர்ந்தவள், தந்தையிடம் ஆதரவாகப் புன்னகைத்தாள். அதில் இருந்த வலியை உணர்ந்தவரின் உள்ளம் துடித்தது.

“உங்கப் பொண்ணை உங்களோடவே கூட்டிப் போய்டுங்க....”, அவன் கொஞ்சம் கூட இளக்கமே இல்லாமல் சொல்ல..., பெரியவர்கள் அனைவரும் ஸ்தம்பித்துப் போனார்கள்.

## பகுதி – 5

முகிலிடமிருந்து இப்படி ஒரு செய்தியை எதிர்பார்க்காத அவர்கள் திகைத்திருக்க..., வளரின் தாய் வேக அடியெடுத்து அவனை நெருங்கியவர், “என்ன மாப்ள சொல்லுதிய..., வளரைக் கூட்டிப் போறதா...? அவ இப்போ எங்க மக இல்லை..., உங்க பொண்டாட்டி...”, அவர் குரலில் அதிர்ச்சியை வெளிப்படுத்தியவர்..., அவனுக்கு, வளர் யார் என்பதை நினைவுபடுத்தினார்.

“வெளியே யார்கிட்டேயும் சொல்லிடாதீங்க. பத்தாப்பு பரீட்சை எழுதியிருக்கும் என் பொண்ணுக்கு இவன்தான் மாப்பிள்ளைன்னு...., தூக்கி உள்ளார வச்சுடப் போறானுங்க...”, அவன் குரலில் அலட்சியத்தை கொண்டுவர முயன்றான்.

“அவ பத்தாப்பு எழுதி இருக்கலாம்..., ஆனா அவ வயசு பதினஞ்சு கிடையாது. பதினேழு...”, அவர் ஒரு வேகத்தில் சொல்ல..., விநாயகம் தலையில் கைவைத்துக் கொண்டார்.

‘பயபுள்ளைகளுக்கு பொய் சொல்லக்கூட தெரியலையே..., எம்புட்டு சொன்னேன்...’, அவர் பரிதாபமாக மனைவியைப் பார்க்க, இப்பொழுதோ..., ‘நல்லா அனுபவிங்க...’, என அவர் பார்வை பதில் சொன்னது.

அவரது பதிலிலேயே அந்த கிராமத்து மனுஷியின் வெள்ளை மனம் புரிய..., தந்தைமேல் இருந்த கோபம் அவனை இளக விடவில்லை.

“ஆமா ஆமா...., அவ ரொம்பப் பெரிய மனுஷிதான்...”, ஏளனத்தைக் குரலில் கலக்க முயன்று தோற்றவன்..., “இப்போ அவளை உங்களோடவே கூட்டிப்போங்க..., பதினெட்டு முடிஞ்ச பிறகு நான் கூட்டி வாரேன்...”, அவள் இங்கேயே , தேவையில்லாமல் தந்தைமேல் தான் கொண்டிருக்கும் கோபத்தை அவள்மேல் காட்டிவிடுவோமோ என்று மனதுக்குள் அஞ்சினான்.

அவளை அனுப்பிவிடும் முடிவில் இருக்கும் நீ..., எந்த உரிமையில் அவளை அடித்தாய்’, என்ற மனசாட்சியின் கேள்விக்கு அவனால் பதில் சொல்லவே முடியவில்லை.

அவளது மருண்ட தோற்றம் அடிமனதை பிசைந்தது. ‘அவ குழந்தைடா….’, தனக்குத் தானே சொல்லிக் கொண்டவனுக்கு, அவளை வருத்தப்படுத்திவிடுவோமோ என்ற கவலை அதிகம் இருந்தது. வளரின் பெற்றவர்களின் வயதை எண்ணி கொஞ்சம் இறங்கினாலும்…., அவளை அனுப்புவதில் குறியாக இருந்தான்.

“ஹையோ என்ன பேசுறீங்க….? கல்யாணம் முடிஞ்ச அடுத்த நாளே என் பொண்ணை வீட்டுக்கு கூட்டிப் போறதா…? அதுக்கு நீங்களே அவளுக்கு விஷத்தை வாங்கிக் கொடுத்துக் கொன்னுடலாம்.

“இவ எங்க மனுஷங்க வாயில் விழுந்து அரை பட்டு, கொஞ்சம் கொஞ்சமா சாவுறதுக்கு இது எவ்வளவோ பரவாயில்லை…”, அவர் சொல்ல…, தவித்துப் போனான் முகில்.

‘என் பொண்டாட்டியை நானே கொல்லுறதா…?’, அவனது மனம் துடித்தது. ஆனாலும் கீழிறங்க அவன் பிடிவாதம் விடவில்லை. நாயகம் வாயைத் திறக்கப் போகையில்….., மனைவியின் கோபப்பார்வை அவரைத் தடுத்தது.

“உங்க கால்ல விழுந்து கேக்குறோம்…., அவளைக் கைவிட்டுடாதீங்க மாப்ள….”, அவன் அமைதியாகிவிட்ட அந்த நொடியில்…, வளரின் தந்தை அவன் காலில் விழப் போனார்.

அவரை அதைச் செய்ய விடாமல் கைநீட்டித் தடுத்தவன்…, அப்பொழுதும் தந்தையைத்தான் முறைத்தான். வளர் தன் கிளர்ந்த விம்மலை சேலை முந்தானையில் அடக்க…, அவளது அழுகை அவனை பலமாய்த் தாக்கியது. இவ்வளவு குழப்பத்திலும்…, தாய் தந்தையிடம் அவள்,‘இந்த வாழ்க்கை தனக்கு வேண்டாம்’ என்று கெஞ்சவில்லை.

அதை அவன் அதிர்வாக உணரும் வேளையிலேயே…, “மாப்ள…., எனக்கு இதயநோய்…, எந்த நேரம் வேண்ணா போய்ச் சேந்துடுவேன். இப்போ நீங்க வளரை….”, மேலே சொல்ல முடியாமல் அவர் திணற…, அவரைத் தாங்கியவன்

வேகமாக அங்கிருந்த சோபாவில் படுக்க வைத்தான் முகிலன்.

“ஐயா...., நீங்க வெசனப் படாதீங்க...., அவங்க ஏதோ கோபத்தில் பேசுறாங்க. நீங்க மனசை விட்டுடாதீங்க....”, சொன்னவள்..., ஓடிச் சென்று அவர்கள் பையில் இருந்து ஏதோ ஒரு மருந்தைக் கொண்டுவந்து கொடுக்க, முகிலின் தாய் தண்ணீர் கொடுக்க..., அதை விழுங்கியவரின் மூச்சிறைப்பு குறையத் துவங்கியது.

“முகி..., இனிமேல் ஒரு வார்த்தை பேசின..., உன்னை என்ன செய்வேன்னு எனக்குத் தெரியாது. அவரு உசுரைப் பிடிச்சு வைக்க நடந்த கல்யாணத்தாலேயே அவர் உயிரை போக வச்சுடாதே...”, முன்னதைச் சத்தமாகச் சொன்னவர்..., பின்னதை அவன் காதில் முணுமுணுத்தார்.

தாயை அவன் வேதனையும் தவிப்பும் கலந்த பார்வை பார்க்க, தன் கோபத்தைக் கொஞ்சம் தணித்துக் கொண்டார். அவருக்குத் தன் மகனைப் பற்றி தெரியாதா? அவன் வீம்பு, தந்தையிடம் மட்டுமே என்பதைப் புரிந்தவர் ஆயிற்றே.

அவர் கண்கள் அவனிடம் எச்சரிக்கையோடு வேண்ட..., அவர் பார்வையின் பொருள் உணர்ந்தாலும் அங்கிருந்து அசையாமலே நின்றான்.

“மாப்ள...”, அவர் மகளின் வாழ்வை யாசிக்க..., அது தந்த வேதனையில் கண்களை மூடியவன்..., “எனக்கு யோசிக்க டைம் வேணும். ஆனாலும் என்னால் உறுதியா சொல்ல முடியாது. நீங்க என்னதான் காரணம் சொன்னாலும்...., உங்களையெல்லாம் பாக்கும்போது....”, கையை இறுக மூடி, தன் உணர்வை அவன் அடக்க,

“எங்களை விடுங்க மாப்ள..., எங்க பொண்ணை மட்டும் நீங்க பாத்துக்கிட்டா போதும். அவ உங்களோட இருக்கா என்ற விஷயமே எனக்கு யானை பலத்தைக் கொடுக்கும். உங்களோட இந்தக் கோபம் கூட..., சின்னப் புள்ளையைக்

கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டோம் என்ற கோபம் தானே....

“எனக்கும் புரிஞ்சுக்க முடியுது மாப்ள. இனிமேல் அவளுக்கு ஆயி.., அப்பன்..., எல்லாம் நீங்கதான். எங்கப் புள்ளையை விட..., உங்கப் பொண்டாட்டியை நீங்க நல்லா பாத்துப்பீங்கன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு.

“நாங்க இப்போவே ஊருக்குக் கிளம்புறோம்...”, சொன்னவர்..., அவர்களை மறு வீட்டுக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்பதைக் கூடச் செய்யாமல்..., எங்கே அழைத்துச் சென்றால்... மகளை அங்கேயே விட்டுவிட்டு வந்துவிடுவாரோ என்ற பயத்திலேயே...., மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு கிளம்பிவிட்டார்.

அவரால் முடிந்த விஷயம்..., வளரின் தாயால் முடியவில்லை. மகளைக் கட்டிக்கொண்டு அழுதார். “உன்னை மாப்பிள்ளை வீட்டில் விட்டுட்டு போறோம்னு சந்தோசப் படுறதா...., உறவை அத்துட்டுப் போறோமேன்னு வருத்தப்படுறதா....?”, அவர் ஒப்பாரி வைக்க, வளரும் உடன் அழுதாள்.

அவர்கள் அறையில் நடந்த சம்பாஷணை ஹாலில் கேட்க, மகனை முறைக்க கூட பயந்தவராய் அடங்கி அமர்ந்திருந்தார் நாயகம். சிறிது அழுதவர்கள்..., முதலில் தேறிய வளர்...., “அம்மா நீங்க ஒண்ணும் வெசனப் படாதீய..., அவுக என்னை நல்லாத்தான் பாத்துப்பாக.

“நேத்து ரவைக்கு(இரவில்) கூட...., அவக என்கிட்டே பதமாத்தான் நடந்துக்கிட்டாக. காலையில் கூட ரிசல்ட் வந்துடுச்சான்னு ஞாபகமா கேட்டாகத் தெரியுமா...., இப்போ ஏதோ கோபம்..., எல்லாம் சரியாப் போய்டும்...”, அவள் தாய்க்கு தைரியம் சொன்னதை சகிக்க முடியாமல் அங்கிருந்து எழுந்துவிட்டான்.

தங்கள் அறைக்குச் செல்லலாம் என மாடிப்படியில் கால் வைக்க, அதன் அருகில் இருந்த அவர்களின் அறைவழியே..., “ஏந்தாயி..., நேத்து நீ நிசமாவே சந்தோசமா

இருந்தியா...?”, அவளது தாய், சின்னக் குரலில் கேட்க, அடுத்த அடி வைக்க முடியாமல் தடுமாறி நின்றுவிட்டான்.

அதற்கு வளரின் பதிலை அறிந்தே ஆகவேண்டும்போல் இருந்தது. “என்னம்மா..., நான் இம்புட்டு சொல்லுதேன்..., நீங்க இப்படி கேக்குதியளே?.., காலைல கூட...”, அவள் முகம் சிவக்க..., அவன் தன் கைப்பிடித்து அழுத்தியதை நினைத்து நிதானிக்க..., சிவகாமி வேகமாக அவளுக்கு நெட்டி முறிப்பது கேட்டது.

அதற்குமேல் அங்கே நிற்க முடியாமல் தன் அறைக்கு விரைந்துவிட்டான். தன் மனைவியை நினைத்து சந்தோசப்படுவதா..., வருத்தப்படுவதா என்பது தெரியவில்லை.

ஆனாலும் அவளது பதிலில் அவனது உள்ளம் தடுமாறிப் போனது என்னவோ உண்மை. தான் என்ன செய்தாலும்..., பேசினாலும் தன்னிடம் அன்பை மட்டுமே விதைக்கும் அவளை எண்ணியவாறு அசையாமல் நின்றான்.

## பகுதி – 6

முகிலனின் மாமனார் மாமியார் ஊருக்குக் கிளம்பிச் சென்று இரண்டு நாட்கள் ஆகிவிட்டது. வளரிடம் மனம் விட்டுப் பேசவோ..., நெருங்கவோ தயங்கினான். அவள்மேல் ஆசை எழுந்தாலும்..., அவள் சின்னப்பெண் என்பதில் உறுதியாக இருந்தான்.

வளரோ எதையுமே முகத்தில் காட்டாமல்..., வழக்கமான அவளது வேலைகளையும், அவனை கவனிப்பதையும் சரியாகச் செய்துகொண்டிருந்தாள். அவளிடம் மனம் விட்டுப் பேச மனம் விழைந்தாலும்.., ஏதோ ஒரு தயக்கம் அவனைக் கட்டுப்படுத்தியது.

சில நேரங்களில் ‘இவ இப்போ இதையெல்லாம் செஞ்சே ஆகணுமா...?’, என்ற எண்ணம் எழும் வேளைகளில்..., தன்னை மீறி அவளைக் கடிந்துகொள்வான். அப்படி அவன்

கடிந்துகொள்ளும் வேளையில் கூட, சிரித்த முகமாகவே அவனிடமிருந்து விலகிச் செல்வாள்.

அவளது அந்த சிரித்த முகம் கனவில் வந்து இம்சிக்கும். அவனது வயதுக்கு உரிய தேவைகள்..., அவளை நாடச் சொல்லும். அதை.., மனைவியாக அவள் அருகிருக்கும் வேளையிலும்..., நிறைவேற்ற முடியாத தன் நிலையை அறவே வெறுத்தான்.

இல்லாமல் இருப்பதென்பது வேறு..., இருந்தும் இல்லாமல் இருப்பதென்பது வேறாயிற்றே. அந்த வெறுப்பு அவன் தந்தையிடமும்..., அவளிடமும் திரும்பும்.

அன்றும் அப்படித்தான்..., அவன் அவளிடம் எதையோ கேட்க..., அவன் தன்னிடம் பேசிவிட்ட சந்தோசத்தில்..., எதையெதையோ அவனிடம் சளசளத்தாள். அவள் பேச்சு மனதை வருடினாலும்..., அவன் மனதில் சிறு ரசனை குடிகொள்ள..., அதை அடக்கியவன்..., வேகமாக அறையிலிருந்து வெளியேறினான்.

பாதிப் பேச்சில் எழுந்து செல்லும் அவனை..., புரியாத திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் திட்டுவதையும்..., கத்துவதையும் கூட சாதாரணமாக அணுக முடியும் அவளால்..., ஏனோ அவனது மௌனத்தை மட்டும் தாங்கிக் கொள்ளவே முடிவதில்லை.

வீட்டைவிட்டு வெளியே சென்றவனோ...., திருமண லீவை கேன்ஸல் செய்துவிட்டு..., வேலையில் சேர முடிவெடுத்துவிட்டு திரும்பி வந்தான். மனதுக்குள் ஏதோ சஞ்சலம் அழுத்தியவாறே இருந்தது.

எதற்கெடுத்தாலும், கோபமும் வெறுப்பும் மட்டுமே முதலில் எழுந்தது.

அவனது சஞ்சலத்தை முதலில் உணர்ந்தவள் வளர்தான். ஆனால் அவனிடம் என்னவென்று கேட்டபொழுது..., “உன் வேலையைப் பாத்துட்டு போடி....”, என எரிந்து விழுந்தான்.

அவளுக்கு அதற்குமேல் அவனை எப்படி நெருங்கவென்று தெரியவில்லை. முதல் நெருக்கத்தை கணவன் ஏற்படுத்தினால் தானே, அவளால் மேலும் நெருங்க முடியும். அவனோ அவளை விலக்கியே வைத்திருக்க..., 'இதுதான் திருமணமா...? வாழ்க்கை முழுவதும் இப்படித்தான் போகுமா...?', என கவலைப் பட்டது அந்த இளம் குருத்து.

அவனது மனக் குழப்பத்தை வளர் தன் மாமியாரிடம் சொல்ல..., அவளது கூற்றிலேயே மனம் கலங்கிப் போனார். 'ஐயோ..., புள்ளைங்க ரெண்டும் வாழறதுக்கு தடுமாறுதுங்களே..., நான் என்ன செய்யப் போறேன்...', அவரது மன வருத்தம் அதிகரித்தது.

இதைப்பற்றி கணவனிடம் பேசவும் முடியாது. அப்படிப் பேசினால்..., அவர் உடனடியாக முகிலிடம் கேட்க..., பிரச்சனை வேறு விதத்தில் பூதாகாரமாகும் என்பது புரியவே..., தானே மகனிடம் பேசுவதென்று முடிவெடுத்தார்.

மறுநாள் வேலைக்குப் போகவேண்டும் என்ற பரபரப்பில்..., தனது பொருட்களை அவன் அடுக்கிக் கொண்டிருக்க..., அறைக்கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தார். அப்பொழுது வளர் கிச்சனில் வேலையாக இருப்பதை உறுதிசெய்துவிட்டே மாடியேறினார்.

"என்னம்மா...?", கேள்வியாக புருவம் உயர்த்திய மகனை..., ஆதூரமாகப் பார்த்தார்.

அவர் பார்வையை உணர்ந்தவன்..., தாயை அமர்த்தி.., அவர் மடியில் தலை வைத்துக் கொண்டான்.

அவனது செய்கையில் அவரது மனதைப் போலவே.., கண்களும் கலங்கியது. "என்னமுகி..., நாளைக்கே வேலைக்குப் போகணுமா...? கல்யாணமாகி ஒரு வாரம் கூட முடியலை....", அவர் இழுக்க...,

"வீட்டில் இருந்தால் என்னவோ வெறுப்பா இருக்கும்மா. இயல்பாவே இருக்க முடியலை. என்னவோ ஒரு கட்டுப்பாட்டோட இருக்கவேண்டி இருக்க மாதிரி இருக்கு...",

இதற்குமேல் தன் உணர்வுகளை அவருடன் எப்படிப் பகிர்வது என்பது தெரியாமல் அமைதியாகிவிட்டான்.

மாதவி அவன் தலையை வாஞ்சையாகக் கோதினார். முகிலுக்கு நண்பர்கள் வட்டமே கிடையாது. அப்படி இருந்தாலாவது அவர்களிடம் தன் மனதைப் பகிர்ந்திருப்பான். ஆனால் அவனது தந்தைக்கு நட்பு என்பதே பிடிக்காமல் போக..., அவன் தன் மனதை குறிப்பிட்ட வயதுவரை தாயிடம் பகிர்ந்தான்.

வயது வந்த பிறகு..., அவரிடம் இருந்த நெருக்கத்தையும் குறைத்துக்கொள்ள.., தான் உண்டு.., தன் வேலையுண்டு என மாறிப் போனான். எப்படி இருந்தாலும்..., அவன் தந்தையை வெறுப்பேற்றிப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

அங்கே கனமான மௌனம் நிலவியது. “ஏம்மா அப்பா இப்படி இருக்கார்...?என் வாழ்க்கையை ஏன் இப்படி செஞ்சார்...? என் வீட்டிலேயே நான் தவிப்பா உலாவுற மாதிரி..., என்னைப் பற்றியே நான் ஒரு முடிவுக்கு வராத போது...., கல்யாணம் வேற....,

“அதுவும் சின்னப் பொண்ணை...., நான் என்னம்மா செய்யட்டும்..., உங்களுக்குப் புரியுதா...?”, தன் குழப்பங்களை எப்படி வார்த்தையில் வடிக்கவென்றும் தெரியாமல் குழம்பித் தவித்தான்.

தன் மகன் இவ்வளவு குழம்பி, அவர் பார்த்ததே இல்லை. தவித்துப் போனார். “இப்போ என்ன ஆச்சு முகில்...? எதுக்கு இவ்வளவு குழப்பம்...? உங்கப்பா என்னைத் திருமணம் செய்யும்போது எனக்கு வயசு பதினஞ்சுதான்.

“பதினாறு வயசில் நீ என் கையில் இருந்த...”, அவனைத் தேற்ற முயன்றார்.

“அப்போ அவருக்கு வயசு முப்பது. வாழ்க்கையை எப்படி வாழணும்..., அமைச்சுக்கணும் என்ற தெளிவு அவர்கிட்டே இருந்துது. இங்கே....”, அவன் கண்கள் தடுமாறியது.

‘ஒரு ஆண்மகன் இப்படித் தடுமாறக் கூடாதே...., அதுவும் ஒரு கணவன்....’, மனதுக்குள் எண்ணமிட்டவர்...,

“நீ ஒண்ணும் பத்து வயசு பையன் கிடையாது முகி. இருபத்தைந்து வயசாச்சு. ஒரு நல்ல பொறுப்பான வேலையில் இருக்க. கை நிறைய சம்பாதிக்கிற. உன்னால் உன் மனைவியின் தேவைகளையும்..., உன் தேவைகளையும் உன் வருமானத்திலேயே சமாளிக்க முடியும்.

“தங்க வீடு இருக்கு..., உன்னால் உன் காலில் நிக்கமுடியும். பிறகு என்ன...?”, வாழ்க்கையின் அடிப்படைத் தேவை என்ன என்பதை விளக்கினார்.

அவன் பதில் சொல்லாமல் அமைதியாகவே இருந்தான். “அவ சின்னப் பொண்ணு..., மேஜர் இல்லை..., எல்லாம் சரிதான். ஆனா இப்போ அவ உன் மனைவி. ஒரு கணவனுக்குரிய எல்லா கடமையையும்..., உரிமையையும் நீ அவளுக்கு கொடுத்தே ஆகணும்.

“ஆனா அது எப்போ, எப்படி என்பதை முடிவுசெய்யும் அதிகாரம் உனக்கு இருக்கு. இந்த ஜென்மத்தில் அவதான் உன் மனைவி..., அதை யாராலும் மாத்த முடியாது. உன்னோட தடுமாற்றமும், தயக்கமும் தேவையில்லாதது.

“உன் வாழ்க்கையைத் துவங்கணும்னு நீ முடிவெடுத்தால்..., அதை இப்போவே ஆரம்பி. இல்லையா..., விலகியிருக்கணும்னு முடிவெடுத்தால் அதில் உறுதியா இரு. அதை விட்டுட்டு உன் மனசை அலைபாய விட்டுட்டு..., அதைக் கட்டுப்படுத்த முடியாமல்..., எதுக்கு வெளியே உன் கோபத்தை காட்டுற...?

“அந்த அளவுக்கு கட்டுப்பாடு இல்லாமலா நான் உன்னை வளர்த்திருக்கேன்....?”, தாய் கேட்க..., தன்னைக் குறித்தே வெட்கமாக இருந்தது அவனுக்கு.

தாய் சொல்வது சரிதானே.... அவன் முடிவில் உறுதியாக இருக்க முடியாமல்..., தடுமாறுவது அவன்தானே. அதை விடுத்து எதற்காக வளரின்மேல் கோபப்பட வேண்டும்...?’,

சிந்தித்தவனின் முகம் தெளிவடைய..., அதைப் பார்த்த தாயின் மனமும் நிறைந்தது.

ஆனாலும், மகன் மனைவியோடு வாழவேண்டும் என்ற முடிவெடுத்தால் நன்றாக இருக்குமென்று அவர் உள்ளம் விரும்ப..., அவரது மகனோ அதற்கு எதிரான முடிவெடுத்தான்.

## பகுதி – 7

முகில், தாயுடன் பேசிய அடுத்த நாளே வேலைக்குக் கிளம்பிவிட்டான். மகன் ஹனிமூன் செல்வான் என அவர் எதிர்ப்பார்க்க, வேலைக்குச் சென்ற மகனை முகம் மாறாமல் அனுப்பி வைத்தார்.

ஆனால் அவன் வேலைக்குச் சென்ற பிறகு..., நாயகம் மாதவியிடம் சாடினார். அதற்கு அவர்..., "உங்க சொல்படி அவன் தாலி கட்டிட்டான். ஆனா அவன் வாழ்க்கையை எப்படி வாழணும்ன்னு அவனுக்குத் தெரியும். அதில் நாம தலையிடக் கூடாது. இதுக்குமேல நீங்க ஏதாவது பேசினால்..., நான் பேசுவதை நிறுத்த வேண்டியிருக்கும் ஆமா...", அவர் கண்டிப்புடன் சொல்ல..., நாயகம்தான் தணிந்து போகவேண்டி இருந்தது.

அவன் வேலைக்குச் சென்ற பிறகு வளருக்குத்தான், தனிமையில் இருப்பதுபோல் இருந்தது. அவன் வீட்டில் இருந்த நாள்வரை..., அவன் காலையில் எழுந்ததும் காபி கொடுப்பதுமுதல்...., டிபன், பதினோரு மணிக்கு ஜூஸ்...., ஒரு மணிக்கு சாப்பாடு..., அதன் பிறகு குட்டித் தூக்கம்,

மாலையில் சிறிதாக சிற்றுண்டி..., காபி..., இரவு எட்டு மணிக்கு இரவு உணவு..., அதன்பிறகு சிறிதுநேரம் ஏதாவது படம் பார்ப்பது என அவளது நாட்கள் அவனைச் சுற்றி அழகாக நகர்ந்ததாகத் தோன்றியது.

இப்பொழுதெல்லாம் அவன் இல்லாமல்..., எதையோ இழந்ததாக உணர்ந்தாள். தினமும் அவனுக்குத் தன் கையால் பரிமாறி..., அவன் பசியாற்றியவளுக்கு...,

அலுவலகத்தில் அவன் என்ன சாப்பிடுவான்..? சாப்பிட்டானா என்ற கவலையே பிரதானமாக இருந்தது.

நேரத்தை நெட்டித்தள்ள படாத பாடு பட்டாள். இரவில் அவன் அவளை நாடியிருந்தால்..., அந்த இனிய நினைவிலாவது திளைத்திருப்பாள். இங்கே அதற்கும் வழியில்லாமல் போனது.

முந்தினநாள் அவன் தந்துவிட்டுச் சென்ற அவனது அலுவலக எண்ணுக்குத் தொடர்பு கொள்வோமா... வேண்டாமா என மனதுக்குள் பட்டிமன்றம் நடத்திச் சோர்ந்தாள்.

இறுதியில் இந்தத் தவிப்பைத் தாங்குவதற்கு..., பேசாமல் அவனுக்கே பேசிவிடலாம் என்று தோன்ற..., தங்கள் அறையில் இருந்த தொலைப்பேசி வழியாக அவனது அலுவலகத் தொலைப்பேசிக்கு அழைப்பு விடுத்தாள்.

ரிங் ஆகும்வரை இருந்த தைரியம்...., ரிங் போன சத்தம் கேட்டவுடன் நடுக்கமாக மாற..., தொலைப்பேசியை வைத்துவிட்டாள். அவனது அலைபேசிக்கு அழைத்தால்...., அவர்கள் வீட்டு எண்ணைக் கண்டுபிடித்துவிடுவான் என்பதாலேயே அலுவலகத் தொலைப்பேசிக்கு அழைத்தாள்.

இரண்டு மூன்றுமுறை இவ்வாறே செய்தவள்..., நான்காம் முறை டயல் செய்யக் கையை கொண்டுசெல்லவும்..., அலைபேசி ஒலிக்கவும் சரியாக இருந்தது. திடுக்கிட்டவள்..., கீழே இருக்கும் மாமனார்..., மாமியார் விழிக்கும் முன்பு எடுத்துவிடுவோம் என..., தன் நடுக்கத்தை மறைத்தவள், வேகமாக எடுத்தாள்.

“ஹல்லோ..”, அவள் தயங்கியவாறு குரல் கொடுக்க..., “ஒரு போன் கூட ஒழுங்கா செய்யத் தெரியாதா...? பத்து தடவை கட் பண்ணுற...?”, அவன்குரல், கோபமா..., குழைவா என்று தெரியாத விதத்தில் ஒலிக்க..., இங்கே அவள் திகைத்துப் போனாள்.

“உங்களுக்கு நான்தான் செஞ்சேன்னு எப்படித் தெரிஞ்சுது….?”, சிறுபிள்ளைத் தனமாக அவள் வினவ…, ‘ஓ…, அம்மையார், நான் கண்டுபிடிக்க மாட்டேன்னுதான் இத்தனை தடவை கால் செய்தாளா…?’, இதழில் ஒரு சிறு புன்னகை ஒட்டிக் கொண்டது.

“இது காலர் ஐடி இருக்கும் போன். நம்ம வீட்டு நம்பர் இதில் தெரியும்…”, அவன் விளக்கம் சொல்ல…, அவளுக்கு தன் செயலை நினைத்து வெட்கமாக இருந்தது.

அதை மறைத்தவள்…, “அப்போ நான் வைக்கிறேன்…”, சொல்லிவிட்டு வைக்கப் போனாள்.

“ஏய்…, உங்க ஊர்ல இப்படித்தான் போன் பேசுவீங்களா…?”, அவளிடம் பேச ஆர்வம் கொண்டான்.

“ஊர்ல யாருக்கு நான் போன் பண்ணப் போறேனாம்…?”, செல்லமாக சிணுங்கினாள். அவள் சிணுங்கும்போது எப்படி இருப்பாள் என்று எண்ணியவனின் கண்களில் மெல்லிய மயக்கம்.

“சரி இப்போ எதுக்கு போன் பண்ணுன…, அதைச் சொல்லு…?”, மென்மையாக அதட்டினான்.

‘அதட்டல் போடாம இவருக்கு பேசவே தெரியாதே…’, மனதுக்குள் நொடித்தவள்…., “இல்ல…., நேரமாச்சே…, நீங்க சாப்ட்டீங்களான்னு….”, ஒரு ஒரு வார்த்தையாக அவள் கோர்த்து முடிக்க…, காதில் இருந்த போனை எடுத்து…, அதில் அவள்முகம் தெரிகிறதா என உற்று பார்த்தான்.

அவள் அக்கறையில் உள்ளம் நனைந்தது. அவனது தாயும் அவன்மேல் உயிராக இருப்பார்தான்…, அவன் சாப்பிடவில்லை என்றால் வருந்துவார்தான். ஆனாலும்…, ‘இவளுக்காக நான் இதுவரை எதுவுமே செய்ததில்லை, ஒரு முழம் மல்லிகைப் பூ கூட வாங்கிச் சென்றதில்லை. அப்படியிருக்கும்போது…., ஒரு மஞ்சள் கயிற்றை அவள் கழுத்தில் கட்டியதற்காகவா என்மேல் இவ்வளவு அக்கறை….’, எண்ணியவன் அந்த தருணத்தை ரசித்தான்.

“நேரமாச்சுன்னு உனக்கே தெரியும்போது எனக்குத் தெரியாதா...? இங்கே கேன்டீன்ல சப்பாத்தி என்ற பெயரில் ஒரு வரட்டியைப் போட்டானுங்க..., அதைத் தின்னேன்...”, தன் இருக்கையில் ரிலாக்ஸ்டாக சாய்ந்தவாறு அவளிடம் சொன்னான்.

“அச்சோ..., அப்போ சாப்பாடு பிடிக்கலையா...? நான் வேண்ணா சாப்பாடு எடுத்துட்டு வரவா...?”, படபடப்பாகக் கேட்டாள்.

“எப்படிக் கொண்டு வருவியாம்....”, அவன் சரசமாகக் கேட்க,

“அதெல்லாம் நொடியில் கொண்டாந்துருவேன். எங்க ஐயா களத்துமேட்டில் இருக்கும்போது தாமதமாச்சுன்னா...., நாந்தான் சாப்பாடு கொண்டு வெரசா போவேன்...”, அவள் ரோசமாகச் சொன்னாள்.

“உங்க ஊர் களத்துமேடும்...., எண்ணூர் தொழிற்பேட்டையும் உனக்கு ஒண்ணா....?”, அவன் கேட்ட பிறகுதான்...., தன் தவறை உணர்ந்தாள்.

“பசிக்குதா....?”, என்னவோ அவன் பசியை உணர்ந்தவள்போல் அவள் கேட்க...., உண்மையாகவே அவனுக்கு உருகிற்று.

அவளைப் பதினேழு வயது சின்னப் பெண்ணாக அவனால் நம்பவே முடியவில்லை. அவளது பொறுமையும், அமைதியும், பொறுப்பும்..., அக்கறையும்..., அவள் வேலை செய்யும் பாங்கும்...., அவளை முதிர்ந்த பெண்ணாகவே அவனுக்கு நினைக்க வைத்தது.

‘இது எப்படி சாத்தியம்...? கிராமத்து வீட்டின் ஒரே செல்ல மகள்..., அவளுக்குள் எப்படி இவ்வளவு பொறுப்பும், பொறுமையும் இருக்க முடியும்?’, வியந்தான்.

அவனுக்குத் தெரியவில்லை. அவளைப் பெற்றவர்கள்..., முதிர்ந்த வயதில் திருமணம் ஆனவர்கள். அதன் பிறகும் பல வருடங்கள் பிள்ளை இல்லாமல்...., தவமிருந்து அவளைப் பெற்றார்கள். அவர்களது முதுமை அவர்களை

பயமுறுத்தியது. தாங்கள் எந்த நேரத்திலும் அவளை விட்டுப் பிரிந்துவிடுவோம் என்பதை உணர்ந்ததால்...,

சிறு வயதிலேயே அவளை, தன் காலில் நிற்கவேண்டும் என்று சொல்லி வளர்த்தார்கள். எந்தச் சூழலிலும் பொருந்திக்கொள்ள வேண்டும் எனவும்..., வீட்டு வேலை முதல் அனைத்து வேலைகளையும் கற்றுக் கொடுத்தார்கள். அவள் வயதுக்கு வந்த உடனேயே அவளை அமர வைத்து, தங்கள் தள்ளாமையையும், அவளது எதிர்காலம் பற்றியும், தாங்கள் அவளுக்குத் திருமணம் செய்துவைக்க இருக்கும் முடிவையும் கூறினார்கள்.

வளருக்கும் மற்ற பெண்களைப்போல் படிக்க ஆசைப்பட்டாள் தான். ஆனால் பெற்றோரின் நிலையையும், அவர்கள் பயத்தையும் உணர்ந்தவள், திருமணத்திற்குச் சம்மதித்தாள். ஆனாலும் அவன் எப்படி இருப்பான்....? என்ற அவளது பயத்தை அவர்களிடம் தெரிவித்தபொழுது...,

தங்கள்மேல் நம்பிக்கை வைக்குமாறு கூறினார்கள். அத்தோடு..., அவன் எப்படி இருந்தாலும்..., அவளது பொறுமையும்..., அன்பும் அவனை மாற்றும் என்று அவளுக்கு அறிவுறுத்த..., சிறு வயதுமுதல் அவர்கள் பேச்சைக் கேட்டு வளர்ந்தவள்..., இதையும் அப்படியே ஏற்றாள்.

அதைவிட...., அவளுக்கு மணாளனாக...., முகிலனின் புகைப்படத்தை அவளிடம் காட்டியபொழுது...., சிறிது ஆச்சரியப்பட்டுப் போனாள். தங்கள் ஊரில் கொஞ்சம் முரட்டு ஆண்களையே பார்த்துப் பழகியவளுக்கு, மாநிறத்தில்..., மெல்லிய மீசையோடு..., அளவான உடல்வாகில் இருந்த அவனை ஒற்றைப் பார்வையில் அவளுக்குப் பிடித்துப் போனது.

அப்பொழுதே அவளுக்கு அவன் உயிராகிப் போனான். கண்மூடித்தனமான அன்பை அவன்மீது வைத்துவிட்டாள். எனவேதான் அவனது கோபம், சிடுசிடுப்பு..., அனைத்தையும் அவள் பெரிதுபடுத்தவே இல்லை.

இதையெல்லாம் அவனுக்கு யார் சொல்லிப் புரிய வைப்பது.

“என்னங்க...., நான் பேசுறது கேக்கலையா...?”, நீண்டநேரமாக அவன் அமைதியாக இருக்கவே..., சத்தமாகக் கத்தினாள்.

அவளது கத்தலில் கலைந்தவன்..., “அந்த வரட்டி செரிமானம் ஆக எப்படியும் நாலு அஞ்சு மணிநேரமாகும்...., இதில் எங்கே பசிக்கிறது...”, சொல்லிவிட்டு அவன் மெல்லிதாக சிரித்தான்.

இதற்கு என்ன பேசுவதென்று தெரியாமல் அமைதியாக இருந்தாள். அதை உணர்ந்தவன்போல்..., “அது இருக்கட்டும், நீ சாப்பிட்டியா...?”, அவன் கேட்க.., அப்பொழுதும் அவள் பதில் மௌனமாகவே இருந்தது.

அவளது அமைதியிலே அவள் இன்னும் சாப்பிடவில்லை என்பதை உணர்ந்தவன்..., “வளர்..., முதல்ல போய் சாப்பிடு...”, சொன்னவன்..., “என்ன... வீட்டில் போர் அடிக்குதா...?”, அக்கறையாகக் கேட்டான்.

“ம்...”, தயங்காமல் தன் மனதில் இருப்பதைச் சொன்னாள்.

‘இவளால் மட்டும் எப்படி இப்படி இருக்க முடியுது...?’, வியந்தவன்..., இதற்கு ஒரு முடிவெடுத்தே ஆகவேண்டும் என எண்ணினான். சிறிதுநேரம் அவளிடம் பேசிவிட்டு வைத்துவிட்டான்.

அவனது அந்த முடிவு ஆட்டம் காணப்போவது அறியாமலே போனான்.

# பகுதி –8

நாட்கள் நீரோடையாய் கடக்க..., வளர்மதியை, தனித்தேர்வாக பன்னிரண்டாம் வகுப்பு எழுத வைத்தான். வளரின் பத்தாம்வகுப்பு மார்க் லிஸ்ட்டை வாங்குவதற்குக் கூட அவளது பெற்றோர் அவளை கிராமத்திற்கு அழைக்கவில்லை.

அதற்கு மாற்றாக..., முகிலே அவளது புகைப்படம் ஒட்டிய அனுமதி கடிதத்தை எழுதவைத்து..., அவர்களின் கிராமத்திற்கு அனுப்பி, அதை வாங்கினான்.

அவளை மேலே படிக்கவைக்கும் முடிவிற்கு அனைவருமே ஆதரவு அளித்தார்கள். ஆனால் நாயகம் மட்டும் சில நேரம் மனைவியிடம் புலம்பினார்.

வளரின் பெற்றோர் வயதானவர்கள்..., அதிலும் அவளது தந்தை இறுதி நாளை என்றைக்கு எட்டுவார் என்பது தெரியாத அளவுக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார். எனவே முகிலிடம், முதல் குழந்தையையாவது உடனே பெற்றுக்கொள்ளச் சொல்லுமாறு மனைவியை வற்புறுத்தினார்.

ஆனால் அதை மகனிடம் சொல்ல அவர் மறுத்துவிட்டார். இது எதையும் அறியாமலேயே இளையவர்கள் தங்கள் நடவடிக்கைகளில் மூழ்கி இருந்தார்கள். தாயின் பேச்சுக்குப் பிறகு தன் உணர்வுகளை மறக்கப் பழகிக் கொண்டான் முகில்.

அவளைத் தனது நெருங்கிய தோழி என்று தன் மனதுக்கு அறிவுறுத்தினான். அவள்மேல் ரசனையாகப் படியத்துடிக்கும் விழிகளை, அவள் முகத்தைவிட்டு நகர்த்தாமல் இருக்க பழகினான்.

வளர்மதியை டுட்டோரியல் கல்லூரியில் சேர்ப்பதாகச் சொன்னவன்...., அவர்கள் அனுமதியையோ சம்மதத்தையோ எதிர்பார்க்கவில்லை. ‘இவள் என் மனைவி...., இவளைப் பற்றிய முடிவுகளை நான்தான் எடுப்பேன்’ எனச் செயல்பட்டான்.

காலையில் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்துவிடும் வளர்..., மதிய சாப்பாடுவரை தயார் செய்பவள்..., அவனுக்கும் தனக்கும் டிபன் பாக்ஸில் எடுத்து வைத்துவிட்டு, குளித்துக் கிளம்புவாள்.

அன்று கொஞ்சம் தாமதமாகிவிடவே..., அவசரமாக குளிக்கச் சென்றவள், வாசலில் கால் வைத்தவள்,

சட்டெனத் திரும்பி தன் கணவனைப் பார்த்தாள். அதே நேரம் அவனும் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்வையில் தெரிந்த ஆர்வத்திலும், அவன் ஒற்றை புருவம் ஏற்றி இறக்கி என்னவென்று கேட்டதிலும் தன்னைத் தொலைத்தவள்..., அன்றொருநாள் நடந்த நிகழ்வை எண்ணி, கன்னம் சிவக்க பாத்ரூமினுள் சென்று மறைந்தாள்.

சென்றவள் மறக்காமல் கதவைத் தாழ்போட்டுக் கொண்டு, கதவில் சாய்ந்து நின்றாள். நினைவுகள் அந்த நாளைச் சுற்றி வந்தது.

அப்பொழுது அவள் டுட்டோரியல் கல்லூரியில் சேர்ந்திருக்கவில்லை. காலையில் அவன் அலுவலகத்திற்குத் தாமதமாகிவிட்டது என்று அவசரமாகக் கிளம்பிச் சென்றிருக்க...., சென்றவன்..., அப்பொழுதுதான் தன் மேஜை டிராயரின் சாவியை வீட்டிலேயே மறந்துவிட்டதை உணர்ந்தான்.

எனவே சென்ற வேகத்தில் திரும்பியவன்...., வேகமாக மாடியேறினான். அறைக்கு நுழையும் முன்னர்..., “வளர்...”, என அவன் அழைத்த அழைப்பைக் கேட்டவள்..., என்னவோ ஏதோ என்று பதறியவாறு..., பாதிக் குளியலில் பாத்ரூமில் இருந்து ஓடி வந்தாள்.

ஓடி வந்தவள்..., பாலன்ஸ் இல்லாமல் கால் வழுக்கி கீழே விழப் போகவே..., அவளைத் தாவிப் பிடித்து நிறுத்தினான். திருமணம் முடிந்த இந்த மூன்று மாதங்களில்...., அவள்மேல் சிறு சலனப்பட்டிருந்தாலும்..., அவளைத் தொட அவன் முயன்றதில்லை.

அதிலும், தாயுடன் அன்று பேசிய பிறகு...., அவளைத் தன் உடன் இருக்கும் தோழியாக தன் மனதுக்குப் பழக்கப்படுத்தினான். அதன் பிறகே அவனால் அவளுடன் சலனமில்லாமல் ஒரே படுக்கையறையில் இருக்க முடிந்தது.

ஆனால் இன்றோ..., முழுதாக ஈரம் சொட்டச் சொட்ட, பாவாடையை அவள் மார்புக்குக் குறுக்காகக் கட்டியிருந்த அவளது தோற்றமும்..., மஞ்சள் பூசிய முகமும்..., கிழங்கு மஞ்சள் என்பதால்..., அதற்கே உரிய தனி வாசனையும்....

கீழே விழப்போன அதிர்வால்..., பிடிப்புக்காக அவனை அழுந்தப் பற்றியிருந்த அவளது அணைப்பும்..., தான் ஒரு ஆண்மகன் என்பதையும், அவளது கணவன் என்பதையும் அவனுக்கு நினைவூட்டியது.

தன் கைகளுக்குள் அடங்கியிருந்த அவள் மேனியில் நடுக்கத்தை உணர்ந்தவனின் அணைப்பு இன்னும் இறுகியது. அவளோ நடுங்கியவாறு அவன் கரங்களுக்குள் அடங்கிக் கொண்டாள்.

முகிலின் உணர்வுகள் அவன்வசம் இருக்கவில்லை. அவன் நெஞ்சில் புதைந்திருந்த அவள் முகத்தை நிமிர்த்தி, அந்த மதி முகத்திலிருந்து எழுந்த மஞ்சள் வாசனையை நுகர்ந்தவன்..., குளிரில் நடுங்கிய அவள் இதழ்களைப் பார்த்தவன்..., அதன் நடுக்கத்தைப் போக்கும் விதமாக..., தன் வெம்மையான இதழ்களை அவள் இதழ்களில் பொருத்தினான்.

அவனது இதழ் முத்தத்தை எதிர்பார்க்காத வளரின் கால்கள் தள்ளாட..., விழுந்துவிடாமல் இருக்க அவனை இறுகப் பற்றிக் கொண்டாள். அவள் கண்கள் அதிர்ச்சியில், சீசாவின் அளவு விரிந்தது..., நொடியில் அது கிறக்கத்துக்குச் சென்று விழி மூடிக் கொண்டாள்.

முகிலனோ அவளைவிட்டு விலக முடியாமல் தவிக்க..., ஒரு கட்டத்தில் அவள் மூச்சுக் காற்றுக்கு ஏங்குவது புரிய..., நிதானமாக அவளை விலக்கினான். அவளோ விழி மூடி கிறக்கத்தில் இருந்தாள். அவளை அவன் விலக்க முயல..., அவளோ தள்ளாடித் தடுமாறினாள்.

அவள் தடுமாறவே..., கையணைப்பிலேயே அவளைப் படுக்கையில் அமர வைத்தான். அமர்த்தியவன் அவளைவிட்டு விலக..., அவளோ மருண்ட பார்வையும்...,

மேலும் எதையோ எதிர்பார்க்கும் ஒரு எதிர்பார்ப்புடனும் அவனைப் பார்த்தாள்.

அவள் பார்வையில் தன்னையே திட்டிக் கொண்டவன்..., இப்படி அவசரப்பட்டுவிட்டோமே எனத் தன்னையே நொந்துகொண்டான். அவளோ அவன் முகம் பார்க்க மறுத்து நிலம் பார்த்தவண்ணம் இருந்தாள். அவன்முன் தான் இருக்கும் கோலம் அவள் நினைவிற்கு வரவே இல்லை.

அவளை உரிமையோடு நாடத் துடித்த கண்களையும், உணர்வுகளையும் நொடியில் கட்டுப்படுத்தியவன்..., அவளை திசை திருப்பும் பொருட்டு..., “இதென்ன பழக்கம்...., பாதி குளியலில் ஓடி வாறது...., அதுசரி..., இதென்ன காஸ்ட்யூம்...?”, கண்களால் அவளை அளந்தவன்....,

“இப்படித்தான் பாத்ரூம் கதவைத் தாழ் போடாமல் குளிப்பாங்களா...?”, அவளைக் கடிந்துகொண்டான்.

அவனை சங்கடமாகப் பார்த்தவள்...., “இல்ல, ஊர்ல இப்படி மூடுன ரூமுக்குள்ளே குளிச்சு எனக்குப் பழக்கமில்லை. எப்பவும் இப்படிப் பாவாடை கட்டிக்கிட்டுதான் குளிப்பேன்...., இன்னைக்குதான் நீங்க வந்துட்டீங்க....”, அவன் சட்டைப் பட்டனைத் திருகியவாறு அவள் பதில் சொல்லவே...., அவளை அந்த முத்தத்தில் இருந்து வெளிக் கொண்டு வந்துவிட்டோம், என எண்ணினான்.

ஆனால் அவள் அதைவிட்டு வெளிவரவில்லை என்பதை மறுநாளே நிரூபித்தாள். அத்தோடு நில்லாமல்..., அவளுக்கு எதையாவது உடனடியாக செய்தே ஆகவேண்டும் என்ற முடிவிற்கு அவனையும் தள்ளினாள்.

மறுநாள் அவன் அவசரமாக அலுவலகம் கிளம்பிக் கொண்டிருக்கும்போது, அவன் அலைபேசிக்கு ஒரு அழைப்புவர..., அதை செவிமடுத்தவன், வளர்மதியை அழைத்து அவள் கரத்தில் கொடுத்தான்.

கேள்வியாக நோக்கியவளிடம்...., “அத்தைதான்....”, அவளுக்குமட்டும் கேட்குமாறு கூறினான். அதைக் கேட்டு நொடியில் மலர்ந்தவள்..., “அம்மா..., எப்படி இருக்கீங்க...? ஐயா எப்படி இருக்காங்க...? ஐயாவுக்கு உடம்புக்கு எப்படி இருக்கு....? நான் ரொம்ப நல்லா இருக்கேன்....,

“என்னைப்பத்தி கவலைப் படாதீங்க..., ஆமா நான் சந்தோசமாத்தான் இருக்கேன்..., ம்..., என்னது...., சந்தோசமான செய்தியா...?”, அவளது இந்தப் பேச்சு காதில் விழவே..., தன் காதைக் கூர்மையாக்கிக் கொண்டான்.

“கூடிய சீக்கிரம் சொல்லுறேம்மா...., ம்... சந்தோசமாத்தான் இருக்கேம்மா”, கிசுகிசுப்பாக, அழுத்தி அவள் சொல்ல..., அவனுக்குத்தான் திக்கென்று இருந்தது. அவள் பொய் சொல்கிறாளே என்று, அவள் முகத்தில் வேதனையின் சாயல் தெரிகிறதா என ஆராய..., அவளோ முகத்தில் வெட்கச் சிவப்புடன் பேசிக் கொண்டிருந்தாள்.

அவன்தான் குழம்பிப் போனான். ஒரு வழியாக அவள் பேசி முடித்துவிட்டு வர..., அவளைத் தடுத்து நிறுத்தியவன்..., “என்னவாம்...?”, ஒற்றை வார்த்தையில் கேட்டான்.

அவனுக்கு இப்படிக் கேட்பது அநாகரீகமாகத் தோன்றியது. ஆனால் வேறு வழி அவனுக்கு இருக்கவில்லை. எனவேதான் அப்படிக் கேட்டான்.

ஆனால் அவளுக்கு, அவன் கேட்டதில் எந்தவிதமான வருத்தமோ..., தயக்கமோ இருக்கவில்லை. மாறாக...., “இல்ல சும்மாதான்...”, இதைச் சொல்லவே திணறியவளை வித்தியாசமாகப் பார்த்தான்.

“இல்லையே..., என் காதில் வேற என்னவோ விழுந்துதே...”, அவளைத் தூண்ட....

“அது...., அவங்களுக்கு விசேஷம் சொல்லணுமாம்..., அதான் கூடிய சீக்கிரம் சொல்லுறேன்னு....”, முகம் குங்குமமாய் சிவக்க...., கண்கள் அவனைச் சந்திக்க மறுக்க..., தவிப்பாய்ச் சொன்னாள்.

இதைக் கேட்டு அவனுக்குத்தான் திக்கென்று இருந்தது. ‘ஐயோ..., தூக்கக் கலக்கத்தில் எதையாவது செய்துத் தொலச்சுட்டனா....? இருக்காதே..., இதுக்குன்னே கைலி கட்டாமல்..., பெர்முடாஸ் போட்டுத் தூங்குறேன்..., ஒரு நாள் கூட....’, வேகமாகச் சிந்தித்தவன்..., தான் தினமும் காலையில் ஒழுங்காகத்தான் எழுந்தோம் என்பதை உறுதி செய்த பிறகே நிம்மதியாக மூச்சுவிட்டான்.

ஆனாலும் அவளது வெட்க முகமும், தவிப்பும், தயக்கமும் அவனைச் சிதைக்க...., “விசேஷமா...? அதெப்படி சொல்லுவ...?”, இதைக் கேட்கும் முன்னர் அவனுக்கு காற்றுதான் வெளியே வந்தது.

“போங்கத்தான்..., அதான் நேத்து நடந்துச்சே....”, சொன்னவள் முகத்தை மூடிக்கொள்ள..., அவன்தான் ‘ஞே’, என விழித்தான்.

“நேத்தா....?”, அதைச் சொல்லும்போதே..., குரல் கட்டைக்குரலாகவும்..., காற்றாகவும் மாறி மாறி வெளிவந்தது. அவனால் அவள் சொன்ன செய்தியை நம்ப முடியவில்லை. இரவில் அப்படி எதுவும் தவறாக நடக்கவில்லை என்பதை இருநூறு சதவீதம் நம்பியவன்...,

“நீ எதைச் சொல்லுற...?”, அதிர்ச்சியாகக் கேட்டான்.

“போங்கத்தான்..., உங்களுக்கு குறும்பு...”, அழகாக வெட்கப்பட்டாள். கொலைவெறியானான் அவன்.

அவள் கொடுக்கும் மற்ற அதிர்ச்சியில்..., அவள் ‘அத்தான்’ என்று சொல்வதைக் கூட அவன் கவனிக்கவில்லை.

“ஏய் பட்டிக்காடு..., வெறுப்பேத்தாமல் எப்போன்னு..., என்னன்னு சொல்லப்போறியா இல்லையா...?”, கடுப்பானான்.

அவன் கோபத்தை உணர்ந்தவள்..., “அதான் நேத்துக் காலையில்....”, “காலையில்...”, “உம்மா கொடுத்தீங்களே....”, அவள் சொல்ல..., உலகம் அவனுக்குத் தட்டாமாலை சுற்றியது.

“உம்மா கொடுத்தா....?”, இதற்குமேல் அதிர முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டவன்...., கையை நெஞ்சில் வைத்துகொண்டு கேட்க…

“உம்மா கொடுத்தா பாப்பா பொறக்கும்ல...., அதான் சொன்னேன்…”, அவள் தயக்கம் விலகி வெடுக்கென சொல்ல…, அவனுக்குள் கொஞ்சம் நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த நம்பிக்கையும் தகர்ந்து தரைமட்டமானது.

அவள் சொன்னதன் தாக்கம் குறையாமலும்…, அது ஏற்படுத்திய அதிர்ச்சி குறையாமலும் அவன் இருக்க…, “உங்களுக்கு ஒண்ணுமே தெரியலை…”, என அவனை மேலும் அசரடித்தாள்.

“போதும்...., போதும்…, இதுக்குமேல ஒரு வார்த்தை பேசுன…, நான் தாங்கமாட்டேன்...., தயவுசெய்து போய்டு…”, அவன் கை கூப்பிச் சொல்ல…, அவன் தன்னிடம் விளையாடுவதாகக் கருதியவள்…, “போங்கத்தான்…”, என சொல்லிவிட்டு ஓடி மறைந்தாள்.

‘இவளுக்கு ஒண்ணுமே தெரியாதா…? குடும்பம்…, தாம்பத்யம்…? ஆண்டவா…, அவளுக்கு ஏ டு இசட் நான்தான் சொல்லிக் கொடுக்கணுமா…?”, தலையில் கை வைத்துக் கொண்டான்.

அப்பொழுது முடிவெடுத்தான்…, அவளுக்கு இந்த உலகத்தையும்…, வெளி உலகையும் அறிமுகப்படுத்திய பிறகுதான், எல்லாம் என்று.

## பகுதி – 9

மறுநாளே அவளை டுட்டோரியல் கல்லூரியில் சேர்த்துவிட்டான். முதல்நாள் மட்டுமே அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். மறுநாள் முதல்…, அவளைப் பேருந்தில் போகச் சொல்ல…, மிரண்டு விழித்தவளைக் கண்டு இரக்கம் எழுந்தாலும்...., வெளி உலகம் அவளுக்குத் தெரியவேண்டும் என்பதால் இளகாமல் அப்படியே இருந்தான்.

“அத்தான்...., சும்மாதானே சொல்லுறீங்க....”, கலங்கிய குரலில் அவள் வினவ...,

“முதல்ல இந்த அத்தான் பொத்தானை விடு...., நீ வாயைத் தொறந்தாலே பட்டிக்காடுன்னு கண்டு பிடிச்சுடுவாங்க....”, அவன் எரிந்துவிழ..., அதைக் கண்டுகொள்ளாமல்....

“எனக்கு பயம்மா இருக்குத்தான்....”.

“எதுக்கு பயம்..., இங்கே பஸ்ஸில் போறவங்க எல்லாம் மனுஷங்கதான்....”, சொல்லிவிட்டு பேச்சை வளர்க்காமல், அங்கிருந்து சென்றுவிட்டான்.

ஆனால் அடுத்தநாள் முதல்..., அவளுக்குத் தெரியாமலேயே..., அவளது டுட்டோரியல் கல்லூரியில், அவள்  இறங்கும்வரை பின்தொடர்ந்தான் முகில்.

விளையாட்டுப் போக்கில் நாட்கள் நகர.., அவளது பன்னிரண்டாம் வகுப்பு பரீட்சைகள் அனைத்தும் முடிந்து..., மேற்கொண்டு என்ன செய்வது என்ற சிந்தையில் இறங்கியிருந்தான்.

அவளைக் கல்லூரியில் சேர்க்கப் போகிறேன் என்று அவன் சொன்னபொழுது..., அவ்வளவுநாள் வாய் மூடியிருந்த நாயகம் வாய் திறந்தார்.

“உன் மனசில் நீ என்னதான் நினைச்சுட்டு இருக்கடா...?”, அவனை நிறுத்தி அவர் கேள்விகேட்க,

“நான் என்ன நினைத்தால் உங்களுக்கென்ன...?”, வெடுக்கெனக் கேட்டான்.

“எனக்கு என்னவா...? வம்சம் வளரணும்னு ஏதாவது நினைப்பிருக்கா..? நானும், இதெல்லாம் கொஞ்ச நாளைக்குன்னு பாத்தா...., இப்போ என்னமோ அவளைக் காலேஜுக்கு அனுப்புறேன்னு சொல்லுற.
எங்களுக்கெல்லாம் வயசு திரும்புதா, இல்ல...”, அவர் எகிற...

“போதும்…, இதுவரை என் வாழ்க்கைக்குள் நீங்க செஞ்சக் குழப்பம் எல்லாம் போதும். இது என்னோட வாழ்க்கை…, அவ என்னோட மனைவி…, எங்க வாழ்க்கை எப்படி இருக்கணும்னு நாங்க தீர்மானிச்சுக்கறோம்…”, அவனும் விட்டுகொடுக்கத் தயாராக இல்லை.

“உன் இஷ்டப்படிதான் இருப்பேன்னு சொன்னால்…, இது ஒண்ணும் சத்திரம் இல்லை…, குடும்பம். அப்போ நாலுபேரை அனுசரிச்சுதான் போகணும்…”, அவர் சொல்ல…,

“அப்படி இருக்க முடியாதுன்னு சொன்னால் என்ன செய்வீங்களாம்…?”, பட்டெனக் கேட்டான்.

“இது என் வீடு…, இதில் இருப்பவர்கள், என் பேச்சைக் கேட்டுதான் நடக்கணும். அப்படி நடக்க முடியாதுன்னா…., அது…, இந்தப் படிக்கு வெளியேதான் நடக்ணும்…”, எப்படியாவது அவனைத் தன் கட்டுப்பாட்டில் இருத்திவிடும் வேகம் அவரிடம் இருந்தது.

“அப்படின்னா என் வாழ்க்கையை இந்தப் படிக்கு வெளியிலேயே நான் வாழ்ந்துக்கறேன்…”, சொன்னவன்…, வளர்மதியை ஒரு பார்வை பார்க்க…, அவளோ அவனைக் கெஞ்சும் பார்வை பார்த்தாள் .

இந்த வாக்குவாதத்தில் மாதவியும் பார்வையாளராக மாறிவிட…, அவராலும் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எப்பொழுதும் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் சமரசம் செய்பவர்…, இன்று தன் மகனுக்காக, அவன் வாழ்க்கைக்காக, தன் மனதை இரும்பாக்கிக் கொண்டார்.

வளரை அழைத்துக்கொண்டு மாடியேறியவன்…, அடுத்த இரண்டு நாட்களில் வீட்டை விட்டு வெளியேறினான். வளரோ கலங்கிய விழிகளோடு தன் மாமா, அத்தையிடம் கைகூப்பி மன்னிப்பு வேண்டிவிட்டு வெளியேறினாள்.

எங்கே போகிறோம்…? என்ன செய்யப் போகிறோம்….? என்ற எந்தக் கேள்வியும் அவனிடம் கேட்கவில்லை. அவன்

அடி ஒற்றி அவன் பின்னால் சென்றாள். அவள் எதையாவது கேட்பாள்... இல்லையென்றால் கலங்கவாவது செய்வாள் என அவன் எதிர்பார்க்க...,

அவளோ வீட்டைப் பிரிந்த வருத்தத்தை மட்டுமே முகத்தில் தேக்கி..., அவன் பின்னால் சென்றாள்.

முதல் நாள் ஆகையால் வீட்டில் பால் மட்டுமே காய்ச்சினார்கள். அவளை அழைத்துக்கொண்டு ஹோட்டலுக்குள் சென்றான். அவளோ அந்த ஹோட்டலை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அத்தோடு..., முதல்முறையாக அவனோடு வெளியே வந்த மகிழ்ச்சியும் அவள் முகத்தில் தெரிந்தது. அவனோடான தனிமையை, இனிமையை, அந்த தருணத்தை மனதுக்குள் விரும்பினாள்.

அவளது செய்கையில் வியந்தவன்...., “வீட்டை விட்டு வெளியே வந்துட்டோம்...., இனிமேல் என்ன செய்யப் போறோம்னு ஏதாவது நினைப்பிருக்கா...?”, அவளிடம் கேட்க,

அவளோ..., “அதான் நீங்க இருக்கீங்களே..., எல்லாம் நீங்களே பாத்துப்பீங்கன்னு எனக்குத் தெரியும்...”, பட்டென பதில் கொடுத்துவிட்டு வேடிக்கை பார்ப்பதைத் தொடர்ந்தாள்.

அவளது நம்பிக்கையை நினைத்து மகிழவோ..., இல்லையென்றால் அவள் உலகமே தன்னைச் சுற்றி சுழல்கிறது என்பதில் சந்தோசப் படவோ முடியாமல்...., நான் இல்லையென்றால் என்ன செய்வாள்...? என்ற எண்ணமே அவனைத் தாக்கியது.

அவள் இப்படி இருக்கக் கூடாது. வாழ்க்கை என்றால் என்னவென்று அவளுக்குத் தெரியவேண்டும். இந்த உலகம் என்னைச் சுற்றி மட்டும் இல்லை. அவளுக்கென்று தனிப்பட்ட வாழ்க்கை, தனிப்பட்ட விருப்பம், ஆசை, கனவு இப்படி பல இருக்கிறது, என்பதை அவள் உணர வேண்டுமே என அவன் கவலைப்பட்டான்.

உணவு உண்டு முடித்தவர்கள்...., வீட்டிற்குச் சென்று தங்கள் பொருட்களை அடுக்கி வைத்தார்கள். அதே நேரம் ஒரு பேப்பரில் அவன் கையெழுத்து கேட்க, அது என்னவென்று கூடக் கேட்காமல் கையெழுத்து போட்டாள்.

“ஏய்..., இப்படித்தான் என்னன்னு கூடப் பார்க்காமல் கையெழுத்து போடுவியா...?”, அவன் கடிந்துகொண்டான்.

“இப்போ என்ன..., என் பேர்ல இருக்க சொத்தையா எழுதி வாங்கிடுவீங்க..? அப்படியே வாங்கினாலும் எனக்கொண்ணும் பிரச்சனை இல்லை...”, அவள் இலகுவாகச் சொல்லிவிட..., அவனுக்குத்தான், தான் எவ்வாறு உணர்கிறோம் என்பதே புரியாமல் போனது.

“உன் சொத்தை எழுதி வாங்க மாட்டேன்..., உன் வாழ்க்கையவே புடுங்கிடுவேன்”, அவன் சொல்ல...

“விளையாடாதீங்க...”, அவள் சிணுங்கினாள்.

அவளது சிணுங்கலில் தன்னைத் தொலைத்தவன்....,
“இனிமேல் இப்படி எதிலும் கையெழுத்து போடக் கூடாது. நானே சில நேரம் விவாகரத்து பத்திரத்தில் கையெழுத்து வாங்கினால் என்ன செய்வியாம்...?”, அவளுக்கு எதார்த்தத்தைப் புரிய வைக்க முயன்றான்.

“உங்களுக்கு உதாரணம் சொல்ல வேற விஷயமே கிடைக்கலையா...?”, சலித்துக் கொண்டவள்..., வேலையைப் பார்க்கச் சென்றாள்.

அவனது விளையாட்டுப் பேச்சுக்களே பின்னாளில் விவகாரமாகப் போவது தெரியாமலே போனான்.

அவள் சென்ற பிறகு...., இப்படி வெள்ளை மனம் கொண்ட மனைவி கிடைக்க என்ன தவம் செய்தோமோ என்று எண்ணினான்.

அடுத்த ஒரு மாதத்தில், அவளுக்கு கல்லூரித் துவங்கவிருந்தது. கல்லூரி வாழ்க்கை என்பது தனக்கு கனவில் கூட கிடைக்காது என்று தன்னையே சமாதானம்

செய்துகொண்டிருந்தவளுக்கு, தானும் கல்லூரிக்குச் செல்லப்போகிறோம் என்ற நினைவே தித்தித்தது.

கல்லூரியில், பாடத்தை மட்டுமல்லாமல்..., வாழ்க்கைப் பாடத்தையும் சேர்த்து பயிலப்போகிறோம் என்பதை அவள் உணர்ந்தால்......

# பகுதி – 10

முதல்நாள் கல்லூரி வாசலில் அடியெடுத்து வைக்கும்போழுதே, படபடப்பாய் உணர்ந்தாள். பிஎஸ்சி கணிதப் பாடப்பிரிவில் அவள் சேர்ந்திருந்தாள். அவளுக்கு கணிதத்தில் இருக்கும் ஆர்வத்தை அவன் உணர்ந்ததாலேயே அவளை அந்தப் பிரிவில் சேர்த்தான்.

கல்லூரி என்றால் அங்கே ராகிங் இருக்குமென்றும், அதைப் பற்றியும் கொஞ்சம் சொல்லியிருந்தான். அதைக் கேட்டதுமுதல்..., மனதுக்குள் திக்கென்று இருந்தது. எனவே முதல்நாளே கல்லூரிக்குச் செல்ல வேண்டுமா...?

இரண்டு மூன்று நாள் கழித்து செல்லட்டுமா என அவள் தயங்கியவாறே கேட்க..., அவளை முறைத்தவன்..., “எதில் இருந்தும் ஓடி ஒளிஞ்சுக்கலாம்னு நினைக்காமல்..., அதை எதிர்கொள்ளப் பழகு...”, அவன் கண்டிப்புடன் சொல்லவே அரை மனதாகச் சம்மதித்தாள்.

ஆனால் அந்த பயத்தை பின்தள்ளவைத்து...., கல்லூரிக்குச் செல்லும் நேரத்தை ரசிக்க வைத்தது..., அவனோடான பைக் பயணம். அவள் இதுவரை யாருடனும் இருசக்கர வாகனத்தில் பயணித்தது இல்லை.

எனவே தன் கணவனோடு முதல் முறையாகப் பயணிப்பது..., அதிலும் இந்த நெருக்கமான பயணம் அவளுக்குள் லட்சம் பூக்கள் மனதுக்குள் பூக்க வைத்தது. வீட்டில் இவர்கள் மட்டுமே தனித்திருந்தாலும்...., அன்றைய ஒரு நாள் தவிர..., இடைவெளி விட்டே அவன் பழகினான்.

அவள் கல்லூரிக்குள் அடியெடுத்து வைத்தாலும்..., இன்னும் டீனேஜை அவள் தாண்டவில்லை.

அப்படியிருக்கையில் ஒரு ஆண்மகனோடான அவளது நெருக்கம்..., ஒருவித கிளர்ச்சியை அவளுக்கு அளித்தது.

கொஞ்சம் தயங்கியவாறே அவன் இடையில் கை கோர்த்து அவள் அமர..., அவள் கையில் நடுக்கத்தை உணர்ந்தவன்..., தன் வயிற்றோடு அவள் கரத்தை அழுத்தி வைத்து..., தன் சம்மதத்தை, ஆதரவை அவளுக்குத் தெரிவித்தான்.

அவன் முதுகோடு அவள் ஒன்றிக் கொள்ள..., அதே நேரம் கல்லூரி வந்து சேர்ந்தார்கள். ஒரு முறைக்கு இரு முறை அவளிடம் பத்திரம் சொல்லி, தைரியம் சொல்லி அனுப்பினான். அவர்கள் வந்து இறங்கியதை..., ஒரு கும்பல் பார்த்துக் கொண்டிருந்தது.

அவனுக்குத் தலையசைவில் விடைகொடுத்தவாறே அவள் தயங்கி நிற்க..., பள்ளீரெனப் புன்னகைத்து அவளை அனுப்பி வைத்தான். அவன் கண்ணிலிருந்து மறையும்வரை அவள் பார்க்க, பைக்கின் ரியர் வியு மிரர்  வழியாக அவனும் பார்த்துக் கொண்டே சென்றான்.

வளர் அந்த கும்பலைக் கடக்கும் வேளையில்..., அவளை சொடக்கு போட்டு ஒருத்தி அழைத்தாள். அது பெண்கள் கல்லூரியாகையால், அங்கே பெண்கள் மட்டுமே இருந்தார்கள்.

அவர்கள் அழைக்கவே...., முகில் சொன்ன ரேகிங் செய்யத்தான் இவர்கள் அழைக்கிறார்கள் என்பதை நொடியில் புரிந்துகொண்டாள். அன்ன நடையிட்டு அவர்கள் முன்னால் போய் நிற்க, “என்னம்மா, சீனியர்ஸ் எல்லாம் இருக்கோம்....,  நீ பாட்டுக்குப் போனால் என்ன அர்த்தம்...? ஒரு வணக்கம் சொல்லுறது கிடையாது....”, ஒருத்தி கேட்டாள்.

“ஹேய், அவ நம்மளை விட சீனியர்டி....”, மற்றவள் கலாய்த்தாள்.

“எதை வச்சுடி சொல்லுற...?”.

“அதான் கால்ல மெட்டி...., நெற்றி வகிட்டில் குங்குமம்..., இவகிட்டே நல்ல கேள்வியா கேளுடி...”, சொல்லிவிட்டு அவள் கிளுக்கிச் சிரிக்க..., அந்தக் கும்பலோ கொல்லென சிரித்தது.

அவர்கள் எதற்காக சிரிக்கிறார்கள் என்று தெரியாமல் குழம்பியவள்..., அவர்களைப் புரியாத பார்வை பார்த்தாள்.

அவள் பார்வையை உணர்ந்தவர்கள்...., “இப்படிப் பார்த்தால் உன்னை விட்டுடுவோமா...? புதுசா கல்யாணமான மாதிரி இருக்கு. முக்கியமான பாடம் படிக்கவேண்டிய நேரத்தில்..., இங்கே என்ன செய்யிற...?”, ஆளுக்கொரு கேள்வியாகக் கேட்டு அவளைத் திணறடித்தார்கள்.

பொதுவாக எதையாவது செய்யச்சொல்லித் திணறடிப்பவர்கள், இன்று இவள் சிக்கவே..., அவளைக் கேலி செய்தே காலி செய்தார்கள். அவர்கள் தன்னைக் கேலி செய்கிறார்கள் என்பதைப் புரிய முடிந்த அவளால், அவர்கள் சொல்வதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

“என்னக்கா சொல்லுறீங்க....?”, அப்பாவியாக அவள் வினவ...

“என்னது அக்காவா....?”, அனைவரும் ஒரே நேரம் அலறியவர்கள்..., “இப்போ நீ யாரை அக்கான்னு சொன்னன்னு தெரிஞ்சே ஆகணும்..”, அவளிடம் எகிறினார்கள்.

அவர்கள் அனைவருமே அவள்மேல் பாயத் தயாராகிய வேளையில்..., அங்கே பிரசன்னமானார் ப்ரொபசர் பிரேமா. பிரேமாவை அந்த நேரம் அங்கே எதிர்பார்க்காதவர்கள் திகைத்தார்கள்.

“என்ன நடக்குது இங்கே...? என்ன ராகிங்கா...”, அவர் அதிகாரமாகக் கேட்க...,

“ஹையோ அப்படியெல்லாம் எதுவும் இல்லை மேம்...”, அனைவரும் ஒரே நேரம் அலறினார்கள்.

அதேநேரம் வளரிடம் இறைஞ்சுதல் பார்வை செலுத்தவும் மறக்கவில்லை. அவர்களை விளங்காத பார்வை பார்த்தவள்...., பிரேமாவை சிநேகமாகப் பார்த்துப் புன்னகைத்தாள்.

அவளது புன்னகையைப் பார்த்த மாணவிகளும், பிரேமாவும் திகைத்தார்கள். அந்தக் கல்லூரியில் பிரேமா என்றாலே சிம்ம சொப்பனம் தான். அவர்தான் அந்தக் கல்லூரியின் விளையாட்டுத்துறை தலைவி. அந்தக் கல்லூரி, வட்டெறிதல், குண்டெறிதல்..., ஈட்டி, எறிதல் என அனைத்து தனிநபர் விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கும் கல்லூரி.

அதற்குக் காரணம் அவரது தனிப்பட்ட கவனிப்பே. அதே நேரம், கல்லூரி கட்டுப்பாட்டுடன் இயங்கவும், அவரது கண்காணிப்பே காரணம். மாணவிகள் செய்யும் தவறுகளை உடனடியாகச் சரிசெய்துவிடுவார். அது தண்டனையாகவும் இருக்கலாம்....., அபராதமாகவும் இருக்கலாம்.

அப்படிப்பட்டவரைக் கண்டால் கல்லூரியே அலறும். அப்படியிருக்க அவரைப் பார்த்து புன்னகைத்தால் அவரும்தான் என்ன செய்வார். ஆனால் அவருக்கு வளரை மிகவும் பிடித்திருந்தது. அவளிடம் திரும்பியவர்..., “என்னம்மா உன்னை ராகிங் பண்ணுறாங்களா...?”, அவளிடம் நேரடியாகக் கேட்டார்.

“இல்ல..., அப்படியெல்லாம் எதுவும் இல்லை...”, வளரின் இந்த பதிலில்தான் பிடித்துவைத்திருந்த மூச்சை வெளியிட்டார்கள் அனைவரும். வளர் அத்தோடு நிறுத்தாமல்..., “சும்மா கேலி பண்ணுறாங்க..., அவங்களைவிட நான்தான் சீனியராம்...”, சொல்லிவிட்டு அவள் சிரிக்க, மறுபடியும் மூச்சை இழுத்துப் பிடித்தார்கள் அவர்கள்.

சீனியர் மாணவிகளை முறைத்தவர்..., அந்த நேரம் அவர்களைக் கடந்து செல்லப்போன ஒரு மாணவியை

அழைத்து..., வளரின் வகுப்பில் அவளை விடச் சொல்ல..., அவளை உடன் அழைத்துக்கொண்டு சென்றாள்நூர்.

உடன் சென்ற வளரோ...., ஒப்படைத்த பிரேமாவோ அறிந்திருக்கவில்லை..., தாங்கள் ஒரு சிறந்த தோழியின் கரங்களில் அவளை ஒப்படைத்தோம் என்று.....

# பகுதி - 11

கல்லூரி முடிந்து வந்ததுமுதல்..., வாய் ஓயாமல் பேசிக்கொண்டிருந்தாள் வளர். அவள் பேசுவதையே மெல்லியச் சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான் முகில். வாய் பேசிக்கொண்டு இருந்தாலும்..., அவள் கரங்களோ அவனுக்கு பஜ்ஜியைப் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தன.

வளரின் வழக்கம் இதுதான்..., மாலை மூன்று முப்பது மணிக்கு அவள் வீட்டில் இருப்பாள். முகிலோ மாலை ஆறு மணிக்குத்தான் வருவான். அவன் வருவதற்கு முன்பு வேலைகள் அனைத்தையும் செய்து முடிப்பவள்.., அவன் வந்ததவுடன், அன்றைய கல்லூரியின் நடப்புகளை ஒன்று விடாமல் விளக்கிவிடுவாள்.

அப்படி அவனிடம் சொல்லவில்லை என்றால் அவளுக்கு எதுவுமே ஓடாது. அதிலும் அவளது பேச்சில் நூர்ஜஹானே நிறைந்திருப்பாள். அவள் இன்று என்ன சொன்னாள்...., வகுப்பில் அவள் செய்த கலாட்டா..., சக மாணவிகள் அவளைக் கேலிசெய்ய முயன்ற பொழுது அவர்களை எப்படித் தடுத்தாள்..., இப்படியாக இருக்கும் அவளது பேச்சு.

கல்லூரி துவங்கிய இந்த இரண்டு மாதங்களில் இருவரும் நெருக்கமான தோழிகளாக மாறி இருந்தார்கள். வளர் அன்றைய நிகழ்வுகளை அடுக்க, அவனது எண்ணங்களோ..., முதல்நாள் அவர்கள் சந்தித்ததை சுற்றி வந்தது.

ப்ரொபசர் பிரேமா வளரை ஒரு மாணவியுடன் அனுப்ப, அவளுடன் சென்ற வளர்..., “அக்கா நீங்க எந்த கிளாஸ்...?”,

கொஞ்சம் தயங்கியவாறே கேட்டாள்.

“அக்காவா....? வியந்தவள்..., “நானும் பஸ்ட்இயர்தான். என்னைப் பேர் சொல்லியே கூப்பிடு...., என் பேர் நூர்ஜஹான்...”, சிநேகமாகச் சொல்லிச் சிரித்தாள்.

“அப்படியா நூரக்கா..., இனிமேல் அப்படியே சொல்லுறேன். என் பேர் வளர்..., இங்கே கணக்குப் பிரிவில் சேர்ந்திருக்கேன்..., என்னமோ எனக்கும் இந்த காலேஜுக்கும் ஒட்டாத மாதிரியே இருந்தது. இப்போ உங்ககிட்டே பேசுன பிறகுதான் பரவாயில்லை.

“அங்க கொஞ்சபேர் என்னென்னவோ சொல்லி கேலி செய்தாங்க..., ஒண்ணுமே புரியலை. அப்போ நமக்கு பாடம் எடுக்கப்போற லெக்ச்சரர் வந்தாங்களோ, உங்களோட நான் தப்பிச்சனோ..., அக்கான்னு சொன்னேன்னு, அதுக்கு அம்புட்டு கோபப்பட்டாங்க...

“ஏன் நூரக்கா..., அக்கான்னு சொல்லுறது அம்புட்டுத் தப்பா...? எங்க ஊர்ல எல்லாம் அக்கான்னு சொல்லிட்டா...., அம்புட்டு அனுசரணையா பேசுவாங்க. இங்கே என்னன்னா....?

“என்னவோ போங்க...., எனக்கு எப்படி இங்கே மூணு வருஷம் படிக்கப் போறேன்னு நினைச்சாலே பயம்மா இருக்கு. என் வீட்டுக்காரர் சொன்னது மாதிரியேதான் ஆயிப்போச்சு...., நல்லவேளை என்னைக் காப்பாத்த எங்க குலதெய்வம் மாதிரி நீங்க வந்தீங்க....”, அவள் வாய் ஓயாமல் பேச..., வளரை வித்தியாசமாகப் பார்த்தாள் நூர்ஜஹான்.

“என்னக்கா அப்படிப் பாக்கீங்க...?”, அவள் அதற்கும் விளக்கம் கேட்க, வாய்விட்டு சிரித்தாள் நூர்.

“நீ எப்பவுமே இப்படித்தானா...? தொறந்த வாயை மூடவே மாட்டேங்குற. சரி விடு, நானும் உன் கிளாஸ் தான்...., இப்போ, நான் உன்னை காப்பாத்தலை..., நீதான் என்னைக் காப்பாத்தி இருக்க. எங்கே அவங்ககிட்டே சிக்கி

சின்னாபின்னமாயிடுவேனோன்னு பயந்துட்டு, நானே தயங்கிட்டு இருந்தேன்.

“அந்த நேரம் நீயும் வந்த..., உன்னை சாக்கா வச்சு..., நானும் தப்பிச்சுட்டு வந்துட்டேன். அதே மாதிரி இங்கே யாருக்கும், அக்கா தங்கைன்னு சொன்னால் பிடிக்காது..., நம்மளை விட வயசானவங்களைக் கூட, பேர் சொல்லித்தான் கூப்பிடணும்.

“அதுசரி..., அதென்ன யாரைப் பாத்தாலும் அக்கா..., நான் இப்போ நூரக்கா ஆயிட்டேன். எப்போ இருநூறு அக்கா ஆவேன்னு தெரியலை. சரி உனக்கு கல்யாணம் ஆனதை இப்படித்தான் டமாரம் போட்டுச் சொல்லணுமா? அதைச் சொன்னாலே, சும்மா இருக்குறவங்களுக்கே உன்னைக் கேலி செய்யணும்னு தோணும்.

“இதில் அவங்கல்லாம், என்ன கிடைக்கும்னு அலையிறவங்க..., அவங்ககிட்டே போய் மாட்டிகிட்டா சும்மாவா விடுவாங்க..? இனிமேல் யார்கிட்டேயும் சொல்லக்கூடாது புரியுதா...? அதிலும், நீ கொஞ்சம் விவரமானவன்னா பரவாயில்லை...,

“விவரம்ன்னா கிலோ என்ன விலைன்னு கேப்ப போல..., அவங்க எல்லாம், விஷயத்தை இத்தோட விடணுமேன்னு நானே கவலைப் பட்டுக்கிட்டு இருக்கேன். இதில், நான் இவளைக் காப்பாத்திட்டேனாம்..., சந்தோசம் வேற...”, தலையிலடிக்காத குறையாக அவளை அழைத்துச் சென்றாள்.

அன்று மாலை இதை அவனிடம் சொன்னபொழுது..., நூர்ஜஹான் சொல்வதில் உண்மை இருப்பதை அவனும் உணர்ந்தான். அதனால் இப்பொழுது என்ன பிரச்சனை வந்தாலும்..., நூர்ஜஹான் இவளோடு இருப்பாள் என்பதில் நிம்மதியாக அவன் உணர்ந்தான்.

அடுத்த நாளே..., நூர்ஜஹான் எச்சரித்தது போலவே நடந்தது.

அவளது வகுப்பிற்குத் தேடி வந்தவர்கள்..., வளரைச் சுற்றி வளைத்தார்கள். நூர்ஜஹான் இதை எதிர்பார்த்திருந்ததால்...., வளருக்கு ஆதரவாக அவளோடு இருந்தாள்.

நூர்ஜஹானை விலகிப் போகச்சொல்ல..., வளரின்மேல் கொண்ட மெல்லிய நட்பின் காரணமாகவும்..., அவள் வெள்ளைமனம் உணர்ந்ததாலும்.., அவளைவிட்டு விலகாமல் இருந்தாள்.

“ஹேய் உன் பேர் என்ன...?”, “ஆமா..., கல்யாணம் ஆகி எவ்வளவு நாள் ஆகுது...?”, “என்னது..., ஒரு வருஷம் ஆகப் போகுதா...? உன்னைப் பார்த்தால் அப்படித் தெரியலையே....”, “ஏய்..., யாருக்காவது அப்படித் தெரியுதாடி...?”, “அதெல்லாம் இருக்கட்டும்..., நைட் புல்லா வேலை பாத்தும்..., காலையில் எப்படி இவ்வளவு பிரெஷ்ஷா இருக்க...?”, விதவிதமானக் கேள்விக் கணைகளும்..., மறைமுகமான கேலியும் அவளைத் தொடர்ந்தது.

அவர்கள் கேலி செய்வதால் ஏற்பட்ட படபடப்பை விட..., அவர்கள் கேள்வியை ஆராயத் துடித்த தவிப்பே அவளிடம் அதிகம் இருந்தது. அதிலும் அவர்கள் சொன்ன..., ‘நைட் புல்லா வேலை பார்த்தும்...’, என்பதிலேயே நிலைத்திருந்தது.

அதைவிட..., ஒரு முத்தம் கொடுக்க நைட் முழுக்க ஆகுமா....? இதுதான் அவள் மண்டையைக் குடைந்தது. சிலநேரம், தயக்கத்திலேயே முத்தம் கொடுக்க அவ்வளவு நேரம் ஆகுமோ....? இருந்தாலும் நைட் முழுக்க என்பது கொஞ்சம் அதிகபடியான நேரம்தான் இல்ல...

தனக்குத் தானே யோசனையில் இருந்தாள். அவள் யோசனையைப் பார்த்தவர்கள்...., “ஏய்..., அவ நேத்து நடந்ததையே நினைக்கிறா போல இருக்குடி...., ஆளு இங்கேயே இல்லை...”, ஒருத்தி சொல்ல...,

“ஓ.....”, அனைவரின் கோரஸ் அந்த அறையையே அதிர வைத்தது. அது மகளிர் கல்லூரி ஆகையால் பேச்சில் வரைமுறை என்பது இருக்கவில்லை. கட்டுப்பாடு என்பதும் வகுப்புக்கு வெளியேதான் இருந்தது. எனவே இப்படியான பேச்சுக்கள் அங்கே சர்வ சாதாரணமாக உலவியது.

“இல்ல... அது என்னன்னா...?”, வளர் எதையோ சொல்லத் துவங்கவே..., அவள் கையை அழுத்தி நூர்ஜஹான் சொல்லவேண்டாம் என்று செய்கை செய்ய..., எதற்கென்று காரணம் புரியவில்லை என்றாலும்..., அவள் பேச்சிற்கு மதிப்பளித்து அமைதியாக இருந்தாள்.

அவர்கள் மேலும் எதையோ சொல்லத் துவங்கும் வேளையில்...., “ஏய் லேடி டான் வருது....”, ஒருத்தி அறிவிக்க, அந்தப் பட்டாளமே நொடியில் காலியானது.

“வளர்..., அவங்கதான் கேலி பண்ணுறாங்கன்னு தெரியுதுல்ல. பிறகு எதுக்கு அவங்க கிட்டேயே விளக்கம் கேக்கப் போற..., இப்போ உனக்கு என்ன சந்தேகம்..., என்கிட்டே கேளு...”, பல்லைக் கடித்தவாறு அவளிடம் கேட்டாள்.

“இப்போ எதுக்கு இவ்வளவு கோபம் நூர்...., அவங்க எல்லாம் எனக்குப் புரியாத மாதிரியே பேசிட்டு இருந்தாங்க. அதான் என் சந்தேகத்தை தீத்துக்கலாம்னு...”, அவள் இழுக்க...

“அதுசரி..., உனக்கு சந்தேகத்தை தீத்துக்க வேற ஆளே கிடைக்கலையா. நல்ல ஆளுங்களைப் பாத்த போ....”, அவளிடம் நொடித்துக் கொண்டாள்.

“அவங்களும் நம்ம கூடப் படிக்கிறவங்கதானே..., பின்ன என்ன...?”, அவள் புரியாமல் கேட்க, ‘நிஜமாகவே இவளுக்கு எதுவும் புரியவில்லையா..., இல்லை புரியாதவள்போல் நடிக்கிறாளா என்று அவளைக் கூர்மையாகப் பார்த்தாள்.

அவளது பார்வையைப் பார்த்த வளரோ..., “என்ன நூர்..., இப்படிப் பாக்குற...? கல்யாணம் ஆனவங்களை எதுக்கு இந்த அளவுக்கு கேலி செய்யணும்...? அதுவும்

என்னவோ...., ராத்திரி பூரா...", அவள் கேள்வியைத் தடை செய்தது ஆசிரியரின் வருகை.

அவள் கேள்வியைப் பாதியில் நிறுத்தினாலும்..., அவள் கேட்க வந்ததை முழுதாகப் புரிந்த நூரோ..., திக்கென அதிர்ந்தாள். இதைப்பற்றி இவளிடம் எப்படிக் கேட்க..., கேட்பது நாகரீகமா..., அதிலும் கல்லூரி வந்த இரண்டாம் நாளே அவளின் தனிப்பட்ட வாழ்க்கைக்குள் மூக்கை நுழைப்பது அவளுக்குச் சரியாகத் தோன்றவில்லை. எனவே அமைதியாகிவிட்டாள்.

அதை அன்று வந்து சொன்னபொழுது முகிலே ஒரு நிமிடம் திகைத்து விட்டான். வளருக்கு உலக நடப்பு புரியவேண்டும் என்று அவன் விரும்பினான்தான். ஆனால் அதற்காக, கல்லூரி சென்ற ஒரே நாளிலேயே அவள், குடும்பம்..., தாம்பத்யம் என்பதைப் பற்றி அறிவதை, அவன் அவ்வளவு விரும்பவில்லை.

எங்கே அடுத்தநாளே அதைப்பற்றி அறிந்துகொண்டு வந்துவிடுவாளோ..., நூர்ஜஹான் எந்த அளவு இதை எடுத்துக் கொள்வாள்...? அப்படியே அவள் சொல்வதை..., வளர் எவ்வளவு புரிந்துகொள்வாள் என்பதே அவனது பிரதான கவலையாக இருந்தது.

ஆனால் இந்த இரண்டு மாதங்களில் அப்படி ஒரு சூழலில் அவள் சிக்கவில்லை என்பதை எண்ணியவனுக்கு, அவனை அறியாமலே ஒரு பெருமூச்சு எழுந்தது. அந்த நிம்மதி அடுத்தநாளில் இருந்து தொலையப் போவது தெரிந்திருந்தால் சந்தோசப்பட்டிருக்க மாட்டானோ....

அவனது மூச்சை கவனித்தவள்..., "என்னங்க..., உங்களுக்கும் நான் சொன்ன கணக்கை கேட்டு மலைப்பா இருக்குல்ல..., எனக்கும் அப்படித்தாங்க இருந்துது. ஆனா இந்த நூர்ஜஹான் என்ன செய்தா தெரியுமா...? ஒரே நிமிஷத்தில் எனக்கு அதைப் புரிய வச்சுட்டா.

அவள் வியந்து சொல்ல..., அவளது பேச்சை கவனிக்காத அவனோ..., திருதிருத்து சிரித்து மழுப்பினான்.

# பகுதி – 12

வீட்டிலும் கல்லூரியிலும் தெளிந்த நீரோடையாக அவள் வாழ்க்கை நகர, முகிலுக்குத்தான் நாட்கள் சத்திய சோதனைகளை அளித்தது. அவனது பெற்றோருடன் இருந்தவரை, வளரை விலக்கி வைப்பதில் அவனுக்கு அவ்வளவு துன்பமில்லை.

ஆனால் தனியாக வந்த பிறகோ...., வீட்டில் இருக்கும் நேரம் முழுவதையும் அவளோடு செலவழிக்க வேண்டி இருந்தது. மூன்றாம் மனிதரின் முகத்தைப் பார்க்கும் வாய்ப்பும் குறைவாகவே இருந்தது. மாலை வேளைகளில் வெளியே செல்லலாம் என்றால்..., படிக்கும் அவளைத் தொல்லை செய்யவும் அவனுக்கு மனமில்லை.

அவளோ அவன் உடன் இருந்தால் தான் ஆயிற்று என்ற நிலையில் இருந்தாள். "எனக்குத் தனியா இருக்க ஒரு மாதிரி இருக்குங்க...", புருவம் சுருக்கி..., சின்னக் குழந்தையென அவள் கூற..., அவளைத் தனியே விட மனமில்லாமல்..., அவளுடனே இருந்தான்.

அவன் இன்ஜினியரிங் முடித்திருப்பதால்...., அவளது கணக்குகள் அவனுக்குச் சுலபமாக இருக்கவே..., அவனை உடனிருத்திக்கொண்டு, கணக்குப் பாடம் படித்தாள்.

அவனுடனான நெருக்கம் அவளுக்குள் சிறு படபடப்பை ஏற்படுத்தினாலும், இப்பொழுதெல்லாம் இடையிடையே அவர்களுக்குள் நடக்கும் முத்தப் பரிமாற்றம் அவளை அமைதிப்படுத்தியது.

ஆனால் அவளை வெறும் முத்தத்தோடு விட்டுப் பிரிவது அவனுக்குத்தான் மரண அவஸ்த்தையாக இருந்தது. அவளை எடுத்துக்கொள்ளச் சொல்லி, அவன் உணர்வுகள் அவனைப் பாடாய்ப் படுத்த, அவற்றைக் கட்டுப்படுத்துவதே அவனுக்குப் பெரும் பாடாக இருந்தது.

அதிலும், அவளுக்கு தாம்பத்தியத்தைப் பற்றி எதுவும் அறியாமல் இருக்கும் வேளையில்.., அவளை அணுகுவது

அவனுக்கு முடியாத ஒன்றாக இருந்தது.

படிக்கும் அவளை சஞ்சலப்படுத்தவும் அவன் விரும்பவில்லை. ஆனால் அவனது இளமையின் தேவைகள், எதையாவது செய்...., எனத் தூண்ட..., அவள் கவனத்தைக் கவராத வகையில் அவளுடனான தன் நெருக்கத்தை அதிகரித்தான்.

கிச்சனில் அவள் வேலை வேலை செய்யும்பொழுது துவங்கும் அவனது கண்ணாமூச்சி ஆட்டம். “நீங்க எதுக்குங்க கஷ்டப் படுறீங்க...? நீங்க போய் நிம்மதியா தூங்குங்க”, அவள் சொல்லவதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல்...., அவளுடன் கிச்சனில் சென்று நின்றுகொண்டான்.

அவளுக்கு காய் வெட்டிக் கொடுக்கிறேன் என்பதாக பெயர் பண்ணிக் கொண்டு, வேண்டுமென்றே கையை லேசாகக் கீறிக் கொண்டு, மிகுந்த அழுத்தம் கொடுத்து அமுக்கிவிட்டு, வெளியேறிய ரத்தத் துளியைத் திருப்தியாகப் பார்த்தவன்,

“ஸ்..., ஆ...”, வேண்டுமென்றே சத்தமாக அலற..., “ஹையோ என்ன ஆச்சு..., கையை வெட்டிகிட்டீங்களா.....? இதுக்குதான் சொன்னேன்...”, நொடியில் பதட்டமானவள்..., அவன் விரலை வாய்க்குள் வைத்து ரத்தத்தை உறிஞ்சினாள்.

தன் விரல் வழியே உணரும்..., வெம்மையை ரசித்துக் கொண்டிருந்தான் அவன். அவளோ...., “என்னங்க..., இப்படி..., சின்னப் புள்ளை மாதிரி கையை வெட்டிகிட்டு....”, என்னவோ அருவாமணையில் அவன் கையை வெட்டிக் கொண்டதைப்போல்...., துடித்துப் போனாள்.

“ஹேய்..., அது சின்னக் காயம்தான். வெங்காயம் வச்சா சரியாப் போய்டும். அதுக்கு ஏன் இவ்வளவு எமோஷனல் ஆகுற....”, அவள் இடையில் கைப்போட்டு, தன்னருகில் இழுத்து அணைத்தவாறு அவன் சொல்ல, அவன் நெருக்கத்தை உணரும் நிலையில் அவள் இருக்கவில்லை.

மாறாக..., "என்னது வெங்காயமா....? அதெல்லாம் வேண்டாம், எரியும்... நீங்க பேன்ட் எய்டு போட்டுக்கோங்க..., நான்வேண்ணா இன்னைக்கு லீவ் போட்டுடவா. நீங்களும் இன்னைக்கு ஆபீஸ் போக வேண்டாம்... எல்லாம் என்னால் தான்..., உங்களை நான் காய் வெட்டவே விட்டிருக்கக் கூடாது...",

என்னவோ அவனுக்குப் பெரிய அடிபட்டுவிட்டதைபோல் அவள் புலம்ப, அவளை எப்படிச் சமாதானப் படுத்துவது என்பதுதான் அவனுக்குத் தெரியாமல் போனது.

அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல்..., அவள் குளிக்கும் வேளையில்..., அவளை ஏதாவது சாக்குச் சொல்லி ரசிப்பதற்காகவே...., "எனக்கு இந்த சட்டை நல்லா இருக்குமா..., இல்லை இதுவா...?" கேள்வி என்னவோ அவளிடம் என்றாலும், பார்வை அவளை மொய்க்கும்.

அவளோ தனது வழக்கமான உடையுடன் குளித்துக் கொண்டிருப்பாள். அவன் பார்வையின் வில்லங்கம் எதுவும் அவளுக்குப் புரிவதில்லை. அதைவிட..., அதை கவனிக்கவும் நேரம் இருப்பதில்லை. அவள் கவனம் முழுவதும் குளிப்பதிலேயே இருக்கும்.

அதேபோல் மாலை வேளைகளில், அவளுக்கு கணக்குச் சொல்லித்தருகிறேன் பேர்வழி என்று...., அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டு, அரை குறையாக கணக்குச் சொல்லிக் கொடுக்க, அவன் சொல்லிக் கொடுப்பதை ஸ்ரத்தையாகக் கற்றுக் கொள்வாள் அவள்.

அவனோ அவள் காலையில் சூடிச் சென்ற வாடிய மல்லிகையில் வாசம் பிடித்துக் கொண்டிருப்பான். சில வேளைகளில், அழுத்தமாக அவனது மீசை ரோமம் அவள் கழுத்தில் உராயும் வேளைகளில், சட்டென அவள் திரும்பிப் பார்த்தால்..., உணர்வுகளை வெளியிடாத முக பாவத்துடன்..., அவள் நோட்டையே வெறிக்கும் அவன் பார்வை.

அவனது அந்த செய்கையில்..., அவளுக்குத்தான்..., தான் உணர்ந்த ஸ்பரிசம் பொய்யோ என்று தோன்றிவிடும். இந்த நடவடிக்கைகளையும், அவன் தொடர்ச்சியாக மேற்கொள்ளாததால்..., அவளது சந்தேகப் பார்வையில் அவன் விழவே இல்லை.

நாட்கள் இப்படியே நகர்ந்தால் ஒரு சுவாரசியம் இருக்காது என்று எண்ணியதோ என்னவோ..., அதன் ஆட்டத்தைத் துவங்கியது விதி.

நடுவில் சில நாட்கள் சீனியர்களின் தொல்லை இல்லாமல் இருக்க, முதல் செமஸ்டர் முடிந்து, இரண்டாம் செமஸ்டர் துவங்கிய வேளையில்..., மீண்டும் அவர்களின் பார்வையில்  விழுந்தாள் வளர்.

கல்லூரியின் துவக்கத்தில் அவர்களால் முளைவிடத் துடித்த ஆர்வம்..., நூர்ஜஹானின் ஜாக்கிரதையால் அவளை நெருங்காமலே இருந்தது. ஆனால் அன்று நூர்ஜஹான் ஏதோ அவசர வேலையின் காரணமாக கல்லூரி வந்திருக்கவில்லை.

அவர்களிடம் தனியாகச் சிக்கிக் கொண்டாள் அவள். “ஏய் அக்கா...., உன்னைத்தான் ரொம்பநாளா தேடிட்டு இருக்கோம். கண்ணில் சிக்காமல் ஆட்டம் காட்டிட்டே இருக்க. ஓ.., எங்கே உன் உயிர் தோழியைக் காணோம்..., அதான் சிக்குனியா...”, அவர்கள் ஒரு மாதிரிக் குரலில் கேட்க இவளுக்குத்தான் திக்கென்று இருந்தது.

காலையில் சீக்கிரம் கல்லூரிக்கு வந்தால்..., மரத்தடியில் அமரச்சொல்லிவிட்டு, பெல் அடித்த பிறகு வகுப்பறைக்கு நூர் அழைத்து வருவதன் மர்மமும், மதியம் சாப்பிட்டவுடன் ரெஸ்ட் ரூம் போக விடாமல் அவள் தடுக்கும் மர்மத்துக்கும் விடை கிடைக்க, அவளது அக்கறையை நினைத்துக் கண் கலங்கியது.

அவள் கலங்குவதைக் கண்டவர்கள்..., “என்னடி இவ..., சின்னப் புள்ளை மாதிரி கண்ணெல்லாம் கலங்கிட்டு இருக்கா. இதுவரை அரசல் புரசலா கேள்விப் பட்டதை....,

அனுபவம் உள்ளவ.., இவ வாயால் கேக்கலாம்ன்னா.., ரொம்பத்தான் சீன் போடுறா…”, அவர்கள் கையடித்துச் சிரிக்க, முதல்முறையாக அவளுக்கு, எதுவோ சரியில்லை என்று தோன்றியது.

அவள் புரியாத பார்வையை இப்பொழுதும் பார்க்க…, “ஆ… ஊ…. ன்னா…, இப்படி பச்சைப் புள்ளை மாதிரி பாரு. நீ இப்படியிருந்தால் உன் ஆளுக்கு ரொம்பக் கஷ்டமாச்சே. உன்னைக் கட்டிக்கிட்டு…, அவரு ரொம்பப் பாவம்தான்….”, அவர்கள் போலியாக பெருமூச்சுவிட, அவர்கள் பேச்சில் முதல் முறையாக அவளுக்கு கோபம் வந்தது.

“அதெல்லாம் நான் என் அத்தானை நல்லா பாத்துப்பேனாக்கும். அவங்களை ஒரு வேலை செய்ய விடமாட்டேன். சாப்பாடு கூட அம்புட்டு ருசியா சமைப்பேனாக்கும்….”, அவள் ரோசமாக அடுக்க,

“நிப்பாட்டு…, நிப்பாட்டு…., நாங்க முக்கியமான மேட்டர் பத்திக் கேட்டா…, நீ சைடு அயிட்டமா சொல்லுற…, கில்லாடிதான்…நாங்க கூட என்னவோன்னு நினைச்சோம்….”, ஒருவரோடு ஒருவர் பார்வையாலேயே அவளைச் சுட்டிக்காட்டி சொல்ல, வளருக்குக் கண்ணைக் கட்டியது.

“மெயின் அயிட்டம்னா….?”, புரியாமல் கேட்க…,

“ஒண்ணுமே தெரியாத பாப்பா…., ம்ம்ம்…, கதையாதான் இருக்கு உன் கதை. ஓ…, நீ கிராமத்துக் காரியில்ல…, உன்கிட்டே உடைச்சுதான் கேக்கணும்…, உன் அத்தான் உன்கிட்டே எப்படி நடந்துக்கறாரு…. எல்லாம் நல்லபடியா போகுதா…?”, கண்ணடித்துக் கேட்டாள் ஒருத்தி.

“அவங்களும் அப்படித்தான்…, எனக்கு கணக்குப் பாடம் எல்லாம் அவங்கதான் சொல்லித் தருவாங்க…”, அவள் பெருமையாகச் சொல்ல…

“எவடி இவ…, கணக்குப் பண்ணுறதைப் பத்திக் கேட்டா…, கணக்குப் பாடத்தைப் பத்திச் சொல்லுறா. இவ

இப்படியிருந்தால்..., இவளோட அத்தான் எப்படிடி அப்பா ஆவாரு...?", அதி முக்கியமாக ஒருத்தி சொல்ல,

"எல்லாம் சரி..., ராத்திரி ஃபுல்லா என்ன செய்வ...?", அவர்களில் ஒருத்தி இப்படிக் கேட்க..., அனைவருமே காண்டானார்கள். "ஏய்... ச்சீ...., என்ன கேக்குறதுன்னு ஒரு விவஸ்த்தை வேண்டாம்..., என்னமோ சும்மா ஓட்டுறோம், ஓகே..., அதுக்குன்னு இப்படியா...?", அனைவருமே அவளிடம் சாடினார்கள்.

அவர்களை அடக்கியவள்..., "நீ சொல்லு...", வளரிடம் அசால்ட்டாகக் கேட்க,

"இதென்னக் கேள்வி..., தூங்கத்தான் செய்வாங்க...", வளர், சொல்வது சரியா..., தவறா..., என்று புரியாத பாவனையில் சொல்ல..., சுற்றியிருந்த அனைவருமே தலையிலடித்துக் கொண்டார்கள்.

"இவளுக்கு, நீ எவ்வளவோ பரவாயில்லடி...", இப்பொழுது அனைவருமே முதலில் கேட்டவளுக்கு சப்போர்ட் செய்தார்கள்.

"நீ இந்த ஜென்மத்தில் தேற மாட்ட. முதல்ல, முழிச்சிருந்து வாழ்க்கையைப் படிக்கிற வேலையைப் பாரும்மா..., அப்புறமா பாடம் படிக்கலாம்...", அவர்கள் இன்னும் விளக்கம்  சொல்லப் போன வேளையில் பிரேமா வந்துவிட, அனைவரும் கலைந்து சென்றார்கள்.

சென்றவர்கள்..., "இவ என்னடி..., இப்படி ஞானப்பழமா இருக்கா. பாவண்டி இவ புருஷன். இவளுக்கு விளக்கம் சொல்லியே ஓஞ்சிடுவான் போல", கிளுக்கிச் சிரித்தவாறு அவர்கள் செல்ல, முதல்முறையாக அவளுக்கு, தான் தவறு செய்கிறோமோ என்று தோன்றியது.

அவர்களது பேச்சிலிருந்து..., தான் தவறாகத்தான் எதையோ சொல்லியிருக்கிறோம் என்பது புரிந்தது. அதைவிட..., தன் கணவன் பாவம் என்று அவர்கள் அனுதாபப் பட்டதைத்தான் அவளால் தாங்க முடியவில்லை.

அவருக்கு நான் ஏற்றவள் இல்லையா...? மனைவியாக என் கடமையை நான் சரியாகத்தானே செய்கிறேன்? நைட் முழிச்சிருந்து என்ன வேலையைப் பார்க்கச் சொல்கிறார்கள்? இவங்க சொல்வதை வைத்துப் பார்த்தால்..., நைட்ல முத்தம் கொடுத்தால்தான் பாப்பா பொறக்குமா...?

கேள்விகள் படையெடுக்க, மனமோ இனம் புரியாத வேதனையிலும், பயத்திலும் கசங்கியது. இந்த சந்தேகத்தை எப்படியாவது நிவர்த்தி செய்யலாம் என்றாலோ.., யாரிடம் கேட்கவென்று தெரியவில்லை. அந்த நேரம் அவள் நினைவுக்கு வந்தவள் நூர்ஜஹான் மட்டுமே.

நூர்ஜஹான் உதவுவாளா...?

# பகுதி – 13

கல்லூரியிலிருந்து வந்ததுமுதல் அமைதியின்றியே அலைந்தாள் வளர். செய்யும் வேலைகள் அனைத்தும் தவறியது. மனதுக்குள் அந்த மாணவிகள் வீசிச் சென்ற வார்த்தைகளே சுழற்றி அடித்தது. அதைவிட..., இப்பொழுது புதிதாக ஒரு குழப்பம் வேறு அவளை ஆட்டிப் படைத்தது.

அது என்னவென்றால்..., திருமண வாழ்க்கை இப்படித்தான் இருக்குமா..? இப்படித்தான் இருக்குமென்றால்..., நான் சொல்வதைக் கேட்டு அனைவரும் சிரிப்பதேன்...,

இல்லை நான் ஏதோ தப்பு செய்யிறேன்..., என்ன அது...? அதை யாரிடம் கேட்க? அவரிடம் கேட்டால் கண்டிப்பாக அவர் சொல்லமாட்டார். சும்மாவே என்னைப் பட்டிக்காடுன்னு சொல்லுவார். இதில் நான் எதையாவது கேட்கபோய்.., அவர் கோபப்பட்டுவிட்டால்....

முகில் வந்தது கூடத் தெரியாமல்...., அவள் சிந்தையிலே மூழ்கி இருந்தாள். அவளது யோசனையைப் பார்த்தவன்..., அவள் தோளைத் தொட்டு உலுக்க, கனவில் இருந்து கலைந்தாள்.

கண்ணெதிரில் அவனைக் காண..., “என்ன இன்னைக்கு சீக்கிரம் வந்துட்டீங்க...?”, அவள் ஆச்சரியமாக வினவி, அவன் லேப்டாப் பேகை வாங்கி வைக்க, அவள் கையைப் பிடித்து தடுத்து, அவள் இருந்த இருக்கையில் அமர்ந்தவன், அவளை மடியில் அமர்த்திக் கொண்டான்.

பொதுவாக அவன் செய்யும் எந்தச் செய்கையையும் மறுக்காதவள், இதுவரை அவன் மடியில் அமர மட்டும் சம்மதிக்கவே மாட்டாள். அதென்னவோ, வயது வந்த பிறகு..., அவளது தகப்பனின் அருகில் அமர்ந்தாலே அவளது தாய் கண்டிப்பாள்.

அப்படியிருக்கையில்..., திருமணத்திற்குப் பிறகு அவனோடான நெருக்கம், தவிர்க்க முடியாது என்பதை அவள் உணர்ந்துகொண்டபடியால்..., அதை இயல்பாக ஏற்க முடிந்த அவளால்..., அவன் மடியில் அமர்வதை அவ்வளவு சுலபமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை.

ஆனால் இன்று தான் அவன் மடியில் அமர்ந்திருக்கிறோம் என்பதைக் கூட உணர முடியாத அளவு..., தன் நினைவுகளில் மூழ்கி இருந்தாள். அதை அவனும் உணர்ந்துகொண்டான்.

“என்னம்மா..., அப்படியென்ன யோசனை...”, அவளைத் தன்மேல் சாய்த்துக் கொண்டு, அவள் தலையில் செல்லமாக முட்டியவாறு கேட்க, அவன் கனிவில், அவளுக்கு கண் கலங்கியது.

இவ்வளவு அக்கறை வைத்திருக்கும் அவனுக்குத் தான் ஏற்றவளாக இல்லையே...., இந்த நினைவே அவளை மேலும் கலங்க வைக்க..., தன் முகத்தை அழுத்தமாக அவன் கழுத்தில் புதைத்துக் கொண்டு, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

அவளது செய்கையில் திகைத்தவன்..., ஆதரவாக அவள் முதுகை வருடினான். அவனது செய்கைகள் ஒவ்வொன்றும் அவளை உருகவைக்க, மெல்லியதாக விசும்பத் துவங்கினாள்.

“இப்போ என்ன நடந்துச்சுன்னு இப்படி அழற...? யாராவது ஏதாவது சொல்லிட்டாங்களா...? டெஸ்டில் பெயில் ஆயிட்டியா...? யாராவது கேலி செஞ்சுட்டாங்களா...? இல்லன்னா..., இன்னைக்கு சொல்லிக்கொடுத்த கணக்கு எதுவும் புரியலையா...?”, அவன் அவளது சிறுபிள்ளைத்தனமான குணமறிந்து ஒவ்வொன்றாகக் கேட்க, அவளோ ‘இல்லை’..., என்பதுபோல் தலையை அசைத்தவண்ணம் இருந்தாள்.

“அப்போ என்னதான் பிரச்சனை...?”, அவன் அழுத்திக் கேட்டான்.

“நான்...., உங்ககிட்டே நல்ல மனைவியா நடந்துக்கறேனா...? இல்லன்னா உங்களை ரொம்பக் கஷ்டப் படுத்துறேனா...?”, விசும்பியவாறு கேட்க, அவனுக்குத்தான் குற்ற உணர்வாகப் போயிற்று.

இன்று கல்லூரியில் என்னவோ நடந்திருக்கிறது என்பதை அவன் புரிந்துகொண்டான். அதைவிட..., பழைய வளராக இருந்திருந்தால்..., அது என்ன என்பதைக்கூட அவள் ஒப்பித்திருப்பாள். ஆனால் இன்று அவள் அப்படிச் செய்யாததில் இருந்தே..., அவள் மனதளவில் கொஞ்சம் வளந்திருப்பது அவனுக்குப் புரிந்தது.

ஒரு பக்கம் சந்தோசமாக இருந்தாலும்..., தான் அவளிடம் சரியாக நடந்திருந்தால்..., அவள் இப்படி வருத்தப்பட்டிருக்க மாட்டாள், என்பதை எண்ணும் வேளையில் கவலையும் கொண்டான்.

ஒரு மனமோ..., தான்தான் அவளுக்கு நியாயம் செய்யவில்லையோ என்று வாதாடியது. தங்கள் வாழ்க்கையைப் பற்றிப் பேசி முடிவெடுத்து..., அவளுக்கு நன்மை செய்தால் பரவாயில்லை. அதை விடுத்து..., ஒன்றும் தெரியாத அவளை ஏமாற்றுகிறோமோ..., என்று மனதுக்குள் குமைந்தான்.

எதுவுமே அறியவராமல் இருக்கும்பொழுதே இவ்வளவு வருத்தப்படுகிறவள், வாழ்க்கை என்றால் என்ன

என்பதையும், தாம்பத்யத்தையும் பற்றி அறியவரும்பொழுது என்ன பாடுபடுவாள். நான் அவளை ஏமாற்றிவிட்டதாக எண்ணிக் குமுறுவாளா...?

இல்லையென்றால்..., அவள் அறியாப் பிள்ளையாக இருந்துவிட்டோமே என்று வருந்துவாளா...?

இல்லையென்றால் அவளை நான் வேண்டுமென்றே விலக்கி வைத்தேன் என்று என்மேல் குற்றம் சுமத்துவாளா? இந்த எண்ணங்களே அவனைத் தடுமாற வைக்க, அப்படி எதுவும் நேர்ந்துவிடக் கூடாது....

அவள் தன்னைவிட்டு எங்கும் சென்றுவிடக் கூடாது..., என்ற எண்ணம் வலுப்பெற..., அவளை எதற்காகவும் இழக்க முடியாது, இழக்கக் கூடாது என்னும் வேகம் பிறக்க..., அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

தான் கேட்ட கேள்விக்கு அவனிடம் பதில் இல்லாமல் போகவே.., அவன் முகம் பார்க்க எண்ணி அவனை விட்டு விலக முயல..., இம்மி கூட நகர முடியாத அளவு அவனது அணைப்பு இறுகி இருந்ததைக் கண்டு, திகைத்தாள்.

அவனது இந்த செய்கையே அவளுக்கு மிகுந்த ஆறுதல் அளிக்க..., அந்த மோன நிலையை கலைக்க விரும்பாமல்..., அவனோடு ஒண்டிக் கொண்டாள்.

அவள் அவன் அணைப்பில் ஆறுதல் தேட..., அவனது இதழ்களோ அவள் கழுத்து வளைவில் சூடாகப் புதைந்தது. அத்தோடு..., அவளுள் புதைந்துகொள்ள விரும்புபவன்போல், அவள் கழுத்தில் முகத்தைத் தேக்க..., அவன் மெல்லிய தாடி.., தாடையில் உரசி ஏற்படுத்திய எரிச்சலில் ஏற்பட்ட புதுவித உணர்வை முதல் முறையாக உணர்ந்தாள்.

அவன் அத்தோடு நிறுத்தாமல்..., தன் தேடலைத் தன் கரங்களால் அவள் மேனியில் நிகழ்த்த..., திகைப்பின் உச்சிக்குச் சென்றாள் வளர். ‘ஐயோ என்ன இது...?’, கூச்சமும், அதிர்ச்சியும் போட்டியிட..., வேகமாக அவனை விட்டு அவள் விலக முயன்றாள்.

ஆனால் அவனோ..., தன் தேடலை நிறுத்த முடியாத நிலையில்..., அவள் இதழ்களோடு, தன் சூடான இதழ்களைப் புதைத்துக் கொள்ள..., என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியாத திகைப்பில் இருந்தாள்.

“அத்தான்.., என்னமோ...., எனக்கு.....”, அவனது இதழ்களுக்குள் அவள் குரல் திக்கித் திணறி ஒலிக்க, அவள் குரலில் தன்னுணர்வுக்கு மீண்டான் முகில்.

அவளைவிட்டு விலகியவன் தன்னைத் தானே நொந்துகொண்டான். அவசரமாக, இருக்கையில் இருந்து எழுந்து நின்றவன்..., அவளை அவசரமாக விலக்கி நிறுத்தினான். தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டுவரப் போராடியவன்...

அதை அவளிடம் மறைத்தவாறு..., “எனக்குத் தண்ணி வேணும்...., ஆபீசில் இருந்து வந்தது டயர்டா இருக்கு...”, எதைச் சொன்னால் அவள் நடந்ததை மறப்பாள் என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவே..., நடந்து முடிந்ததன் தாக்கம், தனக்கு எதுவும் இல்லை, என்பதை நிரூபிப்பதற்காக அவ்வாறு சொன்னான்.

அவனது கணிப்பு பொய்க்கவில்லை...., அவனது நெருக்கத்தில் திளைத்திருந்தவள்..., அவனது அதிரடி விலகலை ஒத்துக்கொள்ள முடியாமல், ஏற்றுகொள்ள முடியாமல் தடுமாறியவள்..., நொடியில் அதிலிருந்து வெளிவந்து..., அவனுக்கு நீர் எடுக்கச் சென்றாள்.

அவள் விலகிச் செல்லவே...., தன் கையை முஷ்டியாக்கி இறுக்கி..., சுவரில் ஓங்கிக் குத்தினான். ஆழமான மூச்சுக்கள் எடுத்து, தன்னை நிலைப்படுத்த போராடினான். மனம் கட்டுக்குள் வரும் வேகத்துக்கு...., கிளர்ந்தெழுந்த உணர்வுகள் கட்டுக்குள் வர மறுத்தது.

“ஆண்டவா..., என்ன அவஸ்தை இது...”, தலையை அழுந்தக் கோதியவாறு வாய்விட்டே அவன் புலம்பியவாறு திரும்ப..., முகிலையே வெறித்தவாறு அங்கே நின்றிருந்தாள் வளர்.

# பகுதி – 14

தொடர்ச்சியாக மூன்றுநாள் நூர்ஜஹான் கல்லூரிக்கு வரவில்லை. அவளது வீடும் சென்னையில் இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தாலாவது, இருந்த மனநிலையில் அவளது வீட்டிற்கே, அவளைத் தேடிச் சென்றிருப்பாள்.

ஆனால் நூர்ஜஹானோ கல்லூரி ஹாஸ்டலில் தங்கியிருந்தாள். எனவே அவளைப் பற்றிய தகவல் எதுவும் தெரியாமல் திணறிப் போனாள். வகுப்பில் மற்ற மாணவிகளோடு பழகக் கொஞ்சம் தயக்கம் காட்டியதால், அவளுக்கு மற்ற தோழிகளும் இருக்கவில்லை.

இந்த மூன்று நாட்களில் எதிலுமே முழுமையாக ஈடுபட முடியாமல், திணறி தத்தளித்துக் கொண்டிருந்தாள். அதிலும்..., அன்று முகில் ‘ஆண்டவா..., என்ன அவஸ்தை இது...’, என புலம்பியபடி நின்ற தோற்றம்..., மனக்கண்ணில் இருந்து மறைய மறுத்தது.

அவளுக்குமே அந்த நேரம் ஏதோ பாதியில் தடைபட்ட உணர்வு எழுந்ததுதான். ஆனால் அவன் அவஸ்தைப் பட்டதை பார்த்த பொழுது..., அவளையே அவள் வெறுத்தாள். சுகமாக ஒலித்த சங்கீதத்துக்கு இடையே, அபஸ்வரம் ஒலித்ததாகத் தோன்றியது.

அதன் பிறகு அவனை நெருங்க முயன்ற வேளைகளில் எல்லாம்..., அவன் விலகிச் சென்றதை உணர்ந்தபொழுது..., கண்ணுக்குள் விழுந்த மண் துகளாக...., உறுத்திக் கொண்டே இருந்தது.

என்ன நடந்தது...? என்ன நடக்கவிருந்தது...? என்ன நடந்திருக்கும்....? ஏன் அவருக்கு இவ்வளவு தவிப்பு...? நான் இடையில் தடை செய்யாமல் இருந்திருந்தால்...! அதனால்தான் அவருக்கு என்மேல் கோபமா...? கோபமென்றால் திட்டினால் கூட பரவாயில்லை..., ஆனால் இந்த விலகல்...! மனம் வலித்தது.

எதையாவது செய்தே ஆகவேண்டும். என்ன செய்ய...? மற்றவர்கள் சொல்வதுபோல்..., என்னைக் கட்டிக்கொண்டு அவர் சந்தோசமாக இல்லையா...? எதையெதையோ எண்ணித் தன்னையே வருத்திக் கொண்டாள்.

அது அவளது செய்கையிலும் வெளிப்பட...., "இப்போ எதுக்கு, எதையோ பறிகொடுத்தவ மாதிரி, எப்போ பாத்தாலும் யோசனையாவே அலையிற...! ஒழுங்கா படிக்கிற வேலையை மட்டும் பாரு...", அவனால் தாங்க முடியாத நிலை வந்தபொழுது கண்டித்தே விட்டான்.

அதற்கு அவளோ..., அவன் சொல்வதை காதிலேயே வாங்கிக் கொள்ளாமல்..., "என்னைக் கட்டிக்கிட்டு நீங்க சந்தோசமாவே இல்லையா..? நான் என்ன செய்தா நீங்க சந்தோசமா இருப்பீங்க...? நீங்க சொல்லித்தந்தால் நான் சரியா புரிஞ்சுப்பேன்.

"அன்னைக்கு ஏதோ தப்பு பண்ணிட்டேன்னு தெரியுது. ஆனா அது என்னன்னு தெரியலை. நீங்க அன்னைக்கு வருத்தப்பட்ட மாதிரி..., என்னைக்குமே வருத்தப்பட்டு நான் பாத்ததே இல்லை. எதுவா இருந்தாலும் சொல்லுங்க...", அன்றைய அவனது தவிப்புக்குக் குறையாத வலியுடன் அவள் கேட்க..., அவனுக்கு உள்ளுக்குள் உருகிற்று.

'ஹையோ..., நான்தான் சரியில்லை. நீ சரியாத்தான் இருக்க. நான் செய்யிறது, சரியா தப்பான்னு எனக்கே தெரியாதபோது நான் என்ன செய்யட்டும்...', தனக்குள் பேசியவன்....

'இப்போகூட...., என்னை மாத்திக்கறேன்னு சொல்லுறியே தவிர..., நீங்க ஏன் என்னைத் தவிர்க்கறீங்கன்னு கேக்கவே மாட்டேங்குறியே. உன் உரிமைகளுக்காக எப்போ என்கிட்டே சண்டை போடுவ...!, நான் சொல்வதற்கெல்லாம் நீ தலையாட்டுவதற்கு பெயர் வாழ்க்கையா..?

சண்டையும்.., சமாதானமும்..., கொஞ்சலும்.., சீண்டலும்..., கருத்து மோதலும்..., விருப்பும்..., வெறுப்பும்..., கலந்து இருந்தால்தான் வாழ்க்கை சுவைக்கும்.

மனதுக்குள் அவளுக்காக அவன் சிந்தித்து, கவலைப் பட்டுக் கொண்டிருந்தான். அவனது வயதுக்கே உரிய தடுமாற்றமும்..., சில வேளைகளில் பெரிய மனிதனாக சிந்திப்பதுமாக, அவனும் வாழ்க்கையில் சற்றுத் தடுமாறவே செய்தான்.

அவளிடம் எதுவும் சொல்லாமல் அவளையே ஆழ்ந்து பார்த்தவன்..., அவ்விடத்தை விட்டு அகன்றான். அவனது மௌனம், இன்னும் அவளை வதைத்தது.

நான்காம் நாள் காலையில் அவள் கல்லூரிக்கு வந்த பொழுது..., வாழ்க்கையே சூனியமாகிப் போனதைபோல், துக்கமாக அமர்ந்திருந்தாள். அந்த நேரம் சரியாக நூர்ஜஹான் வரவே..., “நூர்..., வந்துட்டியா...? ஏன் நாலு நாளா காலேஜ் வரலை...? உன் போன் நம்பராவது எனக்குத் தந்துட்டுப் போயிருக்கலாம்ல...!

“ஊருக்குப் போறேன்னு கூட சொல்லவே இல்லை... நீ இல்லாமல் ரொம்ப கஷ்டமா இருந்துது. இப்போ நீ வந்துட்டல்ல..., எல்லாம் சரியாப் போய்டும்...”, கலங்கிய கண்களைத் துடைத்தவாறே..., தோழியின் கரங்களைப் பற்றி அருகில் அமர்ந்தவள்...., நான்குநாளின் மன அழுத்தம் தாங்க முடியாமல்...., அவளைக் கட்டிக்கொண்டு அழுகையில் குலுங்கிவிட்டாள்.

திகைத்துப் போனாள் நூர்ஜகான். கண்டிப்பாக வளர் தன்னை தேடியிருப்பாள் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் இப்படி அழும் அளவுக்கு தன்னைத் தேடியிருக்கிறாள் என்பதை அறிந்தபொழுது, அவள் தன்மேல் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறாள் என்பதை அறிந்து நெகிழ்ந்தாள்.

“இப்போ எதுக்கு இவ்வளவு அழுகை வளர்..., அதான் நான் வந்துட்டேனே. உனக்கே தெரியும்..., நான் வெளியூர்க்காரின்னு...., அப்போ நீதானே என்னோட விலாசம், போன் நம்பர் எல்லாம் வாங்கி வச்சுருந்திருக்கணும். நானே உனக்கு எல்லாம்

தருவேனா...?", அவள் கேட்க..., அப்பொழுதுதான், 'இப்படி ஒன்று இருக்கிறதோ' என்று விழித்தாள்.

அவள் விழிப்பதைப் பார்த்தவள்..., "சரி அதெல்லாம் விடு..., இப்போ என்னன்னு சொல்லு...," அவள் கரத்தை ஆதரவாகப் பற்றிக் கொண்டு கேட்டாள்.

"எல்லாம் சொல்லுறேன்..., முதல்ல உன் விலாசம், போன் நம்பர் எல்லாம் சொல்லு...", அவள் சொன்னவற்றைக் குறித்துக்கொண்ட பிறகுதான், தன் விஷயத்திற்கு வந்தாள்.

அவளிடம் சொல்லவேண்டும் என்று தவித்தவளுக்கு..., இப்பொழுது, எப்படிச் சொல்லவென்ற தயக்கம் எழுந்து அவளைத் தேக்கியது. அவளது அழுகையையும்..., தயக்கத்தையும் உணர்ந்த நூருக்கு..., விஷயம் பெரியது என்பது நொடியில் புரிந்துபோனது.

"வளர்...", அவள் முகத்தை நிமிர்த்தியவள்..., "என்ன.... சீனியர்ஸ் யாராவது கேலி செஞ்சாங்களா....?", அவள் கேட்க, 'ஆம்' என்பதுபோல் தலை ஆட்டினாள்.

"ம்ச்..., இதென்ன புதுசா..., நான்தான் அதையெல்லாம் கண்டுக்கக் கூடாதுன்னு சொல்லி இருக்கேன்ல..., விடு...", அவள் கரத்தை தட்டிக் கொடுத்தாள்.

அப்படியும் அவள் முகம் தெளியாததைக் கண்டவள்..., 'ஹையோ..., என்ன சொல்லித் தொலைச்சாளுங்கன்னு தெரியலையே....', மனதில் எண்ணியவள்.., "இன்னும் என்ன...?", அவளைத் துருவினாள்.

"நான் நல்ல மனைவியா இருக்க லாயக்கு இல்லாதவளா...? என்னைக் கட்டிக்கிட்டு அவரு கஷ்டப் படுறாரா...?", தயங்கித் தயங்கி அவள் கேட்க, "இதையெல்லாம் நீ என் அண்ணா..., அதாவது உன் புருஷன் கிட்டே கேக்கணும்..., அதை விட்டுட்டு என்கிட்டே கேட்டால்...", அவள் சொல்லவருவது புரிந்தும்..., புரியாதவளாக பாவித்து பதில் சொன்னாள்.

“நீயும், எனக்கு எதுவுமே தெரியக் கூடாதுன்னு நினைக்கிறியா நூர்...! அன்னைக்கு, முத்தம் கொடுத்தால் குழந்தை பொறக்கும்னு நான் சொன்னப்போ..., நீ முதல்ல விழுந்து விழுந்து சிரிச்ச. பிறகு என்ன நினைச்சியோ... அதைக் கண்ட்ரோல் பண்ணிட்டு என்கிட்டே பேசின.

“அதே பேச்சு ரெண்டாவது முறை வந்தப்போ..., நீ கோபப்பட்டு..., இப்படி யார்கிட்டேயும் இனிமேல் உளறக் கூடாதுன்னு சொன்ன. அப்போ எனக்குப் புரியலை..., இந்த நாலு நாளில் நான் புரிஞ்சுகிட்டேன்...., அன்னைக்கு நீயேன் சிரிச்சன்னும்..., பிறகு கோபப்பட்டன்னும்...., மத்தவங்க எல்லோரும் ஏன் என்னை கேலி செய்யிறாங்கன்னும்...”, அவள் உச்சக் கவலையில் சொல்ல...

‘ஹையோ.... எதை எப்படிப் புரிஞ்சு, நினைச்சு இப்படிக் கலங்குறான்னு புரியலையே...’, அவளைப் பற்றித் தெரிந்ததால்..., நூர்ஜஹான் குழம்பினாள். எனவே அவளிடம் எதையும் இடக்காகக் கேட்காமல்..., “சரி..., என்ன புரிஞ்சுது சொல்லு?...”, ஆதரவாகக் கேட்டாள்.

“முத்தம் கொடுத்தால் மட்டும் குழந்தை பொறக்காதுன்னு தான்...”, வெடுக்கெனச் சொன்னாள்.

‘அதானே பாத்தேன்...’, எண்ணியவள்..., “வேற என்னன்னு நினைக்கறீங்களாம்? என்ன திடீர்ன்னு உனக்கு இப்படி ஒரு தெளிவு...! சரி இப்போ எதுக்கு இந்த ஆராய்ச்சி...?”, அவளைத் தேக்க முயன்றாள்.

“அப்போ நீயும், நான் எதுவுமே தெரிஞ்சுக்காமல் இருக்கணும்னு நினைக்கிறியா...? எனக்கு எதுவுமே தெரியலை..., அவர் ஏன் என்னை நெருங்கிட்டு, விலகும் பொழுதெல்லாம் அவ்வளவு கஷ்டப்படுறாருன்னு புரியலை.

“இப்போ ஏன் நெருங்காமல் விலகி இருக்காருன்னு புரியலை..., முன்ன மாதிரிக் கோபப்படாமல்..., எரிச்சல் படாமல்..., ஏன் மௌனமா இருக்காருன்னு புரியலை. எனக்குத் தெரிஞ்சாகணும்..., நான் வாழ்வதுதான்

வாழ்க்கையா...! இல்லன்னா இந்த வாழ்க்கைக்கு வேறு பக்கம் இருக்கா..! அது உனக்குத் தெரியும்னு எனக்குத் தெரியும்.

“இவ்வளவு நாள் நான் இருந்ததெல்லாம் சரிதான். இனிமேலும் இப்படி தத்தியா இருக்க முடியாது... எனக்கு இப்போவே தெரிஞ்சே ஆகணும்...”, அவள் குரலில் அப்படி ஒரு உறுதி.

‘உனக்குத் தெரியாது சரி..., உன் புருஷனுக்கு...’, நுனிநாக்குவரை வந்த கேள்வியை, கஷ்டப்பட்டு விழுங்கினாள்.

“இப்போமட்டும் எப்படி இந்த திடீர் தெளிவுன்னு கேட்டல்ல..., அன்னைக்கு இங்கிலீஷ் படம் போட்டு பார்த்திட்டுருந்தார்..., அதில் பாத்தேன்..., அவங்க அதில்,நிமிஷத்துக்கு ஒரு தரம் கிஸ் பண்ணிக்கிட்டாங்க. கிஸ் பண்ணுவதால் குழந்தை பிறக்கும்னா..., எல்லா ஹீரோயினும் இந்நேரம் பிள்ளை பெத்திருக்கணும்.

“அப்போதான் தெரிஞ்சுது... நான் இவ்வளவுநாள் லூசுத்தனமா நினைச்சுட்டு இருந்திருக்கேன்னு. நான் நினைச்சது மட்டுமில்லாமல்..., அதை அவர்கிட்டேயே சொல்லி...., என்னைப்பத்தி என்ன நினைச்சிருபாரு.., அவரோட முகத்தைப் பாக்கவே எனக்கு வெக்கமா இருக்கு.

“நீ மட்டும் முன்னாடியே சொல்லாமல் இருந்திருந்தால்..., அந்த சீனியர்ஸ்ட்ட கூட இப்படித்தான் உளறி வச்சிருப்பேன். எவ்வளவு அவமானமா போயிருக்கும்....,

நீ என்னை உன் தோழியா நினைப்பது உண்மை என்றால்.... இதுக்குமேல நான் அவமானப்படக் கூடாதுன்னு நீ நினைத்தால்..., தயவுசெய்து எனக்கு உண்மையைச் சொல்லு...., இதைப்பற்றி நான் வேற யார்கிட்டேயும் கேட்க முடியாது.

“என் அம்மாகிட்டே கூட....”, சொல்லிவிட்டுக் குலுங்கியழும் தோழியை, இதயம் கனக்கப் பார்த்திருந்தாள். வளரின்

கண்ணீர் அவளை மேலே எதையும் சிந்திக்க விடவில்லை. எனவே ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

# பகுதி – 15

இறுகிய முகத்தோடு சமயலறையில் வேலை செய்யும் வளரை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தான் முகில். ‘இதுவா என் வளர்…?’, அவன் உள்ளம் கேள்வி கேட்க, வாய் ஓயாமல் பேசியவாறு வேலை செய்யும் வளரை நினைத்து அவன் மனம் ஏங்கியது. அவளது சிரித்த முகத்தையே பார்த்துப் பழகியவனுக்கு.., அவளது அமைதி நெஞ்சடைக்கச் செய்தது.

வளரின் உள்ளமோ…, தான் நூரின் மூலம் அறிந்த விஷயங்களை எண்ணி, சில்லிட்டு போயிருந்தது. அதிலும், தாம்பத்யம் என்றால் என்ன என்று அறிந்த அந்த நிமிடம்…, தான் திருமண வாழ்க்கைக்கே அருகதை இல்லாதவளோ என்று எண்ணினாள்.

எனக்கு எதுவும் தெரியாது…., அப்படியென்றால் அவர்…., இதை எண்ணும் பொழுதே…, அவருக்குத் தன்னைப் பிடிக்காமல்தான் விலகியிருக்கிறாரா…, என்ற எண்ணமே அவளைக் கொன்று போட்டது.

கடந்த இரண்டு மூன்று மாதங்களாக அவளிடம் அசாத்திய மாற்றம். முதலில், செமஸ்டர் பரீட்ச்சை என்பதால் அப்படி இருக்கிறாள் என்று அவன் நினைத்திருக்க, இரண்டு நாட்களுக்கு முன்னர் சந்தித்த நூர்ஜஹானின் மூலம் அறிந்த விஷயங்கள் அவனைக் கவலைக்குள்ளாக்கியது.

நூர்ஜஹான் அவனிடம் சண்டை போட்டதை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று கூட அவனுக்குப் புரியவில்லை. மூன்றாம் மனுஷி…, அவளுக்கு இருக்கும் அக்கறை கூட…, தன் வாழ்க்கையைப் பற்றி அவளுக்கு இல்லையே என்று நினைக்கும்பொழுது வருத்தமாக இருந்தது.

அதிலும்...., தனக்கு அவளைப் பிடிக்கவில்லை என்பதாலேயே அவளைவிட்டு விலகி இருக்கிறேனோ என்ற அவளது எண்ணத்தை அறிந்தபொழுது அதிர்ந்து போனான்.

இதை ஏன் அவள் என்னிடம் கேட்கவில்லை...., என்ற அவனது கேள்விக்கு, நூரிடம் பதில் இருக்கவில்லை.

'தான் அவளை உயிராய் நேசிப்பதாகவும்..., அவள் இல்லாமல் தனக்கு வாழ்க்கையே இல்லை என்றும், அவள் கொஞ்சம் முதிர்ச்சி அடையவேண்டும் என்று மட்டுமே தான் காத்திருப்பதாகவும்' சொன்ன பிறகுதான், அவள் முகத்தில் தெளிவைக் கண்டான்.

இப்படி ஒரு நட்பு கிடைக்க வளர் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று எண்ணினான். அவளது இந்த எண்ணத்தைப் போக்க, என்ன செய்யலாம் என்பது மட்டுமே இப்பொழுது அவனது யோசனையாக  இருந்தது.

வாய் வார்த்தைகள் பலனளிக்காது என்பது அவனுக்குப் புரிந்தது. எனவே அவளுடனான தன் உறவை பலப்படுத்த முயன்றான். அவளை அழைத்துக்கொண்டு வெளியே செல்வது..., சின்னச் சின்னச் சீண்டல்கள்..., இடையில் அவளை அழைத்துக் கொண்டு கிராமத்துக்குச் சென்றது என அவளின் சந்தோசத்திற்காகப் பார்த்துப் பார்த்துச் செய்தான்.

அவனது வீட்டிற்குச் சென்ற பொழுது..., அவனது தாயும் தந்தையும்..., வளர் மாறிவிட்டதாகச் சொன்னபொழுது சங்கடப்பட்டுப் போனான். நாட்கள் வாரங்களைக் கடக்க..., குழந்தைத்தனத்தை தொலைத்துவிட்டு  அவள் அலைவதை, அவனால் சகிக்க முடியவில்லை.

அன்று அலுவலகத்தில் இருந்து அவன் வந்தவுடன்..., அவனது லேப்டாப் பேகை வாங்கிவிட்டு விலகிச் சென்றவளை, கைபிடித்து தடுத்தான். முன்பு இருந்த வளரையும், இந்த வளரையும் அவன் மனம் ஒப்பிட்டுப் பார்த்தது.

“ஏண்டா இப்படி இருக்க...? நீ சிரிச்சே ரொம்ப நாள் ஆன மாதிரி இருக்குடா. நீ சந்தோசமா இருக்கணும்..., எனக்கு அதுதான் வேணும்...”, அவள் கூந்தல் சுருளை விரல்களால் நீவியவாறு அவன் சொல்ல...,

“நீங்க சந்தோசமா இருக்கீங்களா...? நான் உங்களுக்கு ஏத்தவளா இல்லையா...? நீங்க வேண்ணா உங்களுக்குப் புடிச்ச பொண்ணா பாத்து...”, அவள் சொல்லி முடிக்கும் முன்னர்..., அவன் கரம் அவள் கன்னத்தில் இறங்கியது.

அவள் அதிர்ந்து விழிக்கும்பொழுதே....., “ஏன்..., ஏன்..., இன்னும் இப்படியே இருக்க..! பெரிய தியாகி இவ..., விட்டுக் கொடுக்குறாளாம்..., எங்கே போய் முட்டிக்கிறதுன்னு தெரியலை..., வாழ்க்கை இது இல்லை...., உன் நினைப்பு முழுக்க நான் மட்டும் தான் இருக்கேனா...?

“அப்போ நீ..., உன் வாழ்க்கை..., உனக்கு எப்போ புரியும்..., உனக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்குன்னு..., இப்படியே, என் முதுகுக்குப் பின்னால் ஒளிஞ்சுகிட்டால் போதுமா...? கல்யாணத்துக்கு முன்னாடி உன் அப்பா அம்மா..., இப்போ நான்...,

“நீ எப்போதான் உன் காலில் நிக்கப்போற..., சரியான களிமண்ணு..., எப்படி செய்யிறோமோ அப்படி மாறிடணும்..., நீயா எதுவும் செஞ்சுடக் கூடாது என்ன...”, ஆத்திரம் கண்ணை மறைக்க..., அவளைக் கடிந்துகொண்டவன், அவள் அதிர்ந்து விழிப்பதைப் பொருட்படுத்தாமல்..., அங்கிருந்து வெளியேறினான்.

இவ ஏன் இப்படி இருக்கா...? ‘உனக்கு ஏண்டா என்னைப் பிடிக்கலை..., உனக்கு நான் பொண்டாட்டி.., அது ஞாபகம் இருக்கா..., உன் மனசில் வேற எவளையாவது நினைச்சுட்டு இருக்குறியா என்ன...?’, இப்படியாக அவள் சண்டை போட்டிருந்தால்..., அப்பொழுதே அவளது சந்தேகங்களைத் தீர்த்து வைத்திருப்பான்.

ஆனால் அவளோ... குற்றவுணர்வில் தவிப்பதை அவனால் தாங்க முடியவில்லை. எவ்வளவு நேரம்தான் வெளியே

சுற்றினானோ..., ‘சரி அவளுக்குத்தான் வாழ்க்கை என்னவென்று புரியலை, உனக்குப் புரிகிறது தானே..., அவளோடு வாழ வேண்டியது தானே.

‘வாழ்க்கையை வாழத் துவங்கிவிட்டால்..., வாழ்க்கை என்னவென்று அவளுக்குப் புரிந்துவிட்டுப் போகிறது. அதைவிட்டு..., அவளைபோல் நீயும் வீம்பு பிடிக்க வேண்டுமா....? போடா..., போய் முதல்ல வாழ்க்கையை வாழும் வேலையைப் பாரு.

‘மத்ததெல்லாம் தானாகவே நடக்கும். அதை விட்டுட்டு..., அவளுக்கு உரிமையை நிலைநாட்ட சொல்லிக் கொடுக்கப் போறானாம்...’, அவன் மனசாட்சி சொல்ல, அதற்குக் கட்டுப்பட்டு, உற்சாகமாக வீட்டுக்குச் சென்றான்.

அங்கே வீட்டிலோ..., அழுது ஓய்ந்தவள்...., வேறு முடிவிற்கு வந்திருந்தாள். உற்சாகமாக, மல்லிகைப் பூ வாங்கிக் கொண்டு வீட்டிற்குச் சென்றவன்..., அதைக் கிச்சனில் வைத்துவிட்டு..., அவளைத் தேடிச் சென்றான்.

எப்படியும் அவள் அழுதுக்கொண்டிருப்பாள்..., அவளைச் சமாதானம் செய்துவிட்டு வாழ்க்கையைத் துவங்கலாம் என்று நினைத்தவாறு அறைக்குச் செல்ல...., அங்கே அவள் இல்லாதது கண்டு திகைத்தான். வீடு முழுவதும் அலசியும்..., அவள் இல்லாமல் போக..., மனதுக்குள் பயம் பிடித்துக் கொண்டது.

‘எங்கே சென்றிருப்பாள்..., அவளுக்கு எங்கேயும் தனியாகச் சென்று பழக்கமிலையே. எதுக்குடா அவளைக் கை நீட்டி அடிச்ச. அவ உன்னை உயிரா நினைப்பதாலா..., இப்போ நல்லா அவஸ்தைப்படு...’, தன்னைத் தானே திட்டிக் கொண்டவன்..., வண்டியை எடுத்துக் கொண்டு வெளியே சென்று தேடலாம் என கிளம்பப் போன வேளையில்..., எதேச்சையாக அண்ணாந்து பார்க்க..., மாடித் திண்டில் அவள் அமர்ந்திருப்பது, இருளில் வரி வடிவமாகத் தெரிய, நிம்மதிப் பெருமூச்சு அவனிடமிருந்து கிளம்பியது.

வேகமாக மாடியேறியவன்..., “வளர்...”, என அழைக்க, விலுக்கென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். பார்த்தவள் அவசரமாக கீழே இறங்க முயல..., திண்டில் இருந்து கீழே விழப் போனாள். ஓடிச் சென்று அவளைத் தாங்கிக் கொண்டான்.

அவனிடமிருந்து விலகியவள்..., “சாப்பிட வாங்க...”, என்றுவிட்டு கீழே சென்றாள்.

சரி கொஞ்ச நேரம்தானே..., விட்டுப் பிடிப்போம்.., என எண்ணியவாறு அவளைப் பின் தொடர்ந்தான். அமைதியாகவே இருவரும் உண்டு முடிக்க, அவளது அமைதியைப் பார்த்து, தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அவள் படுக்கையறைக்குச் செல்லும்வரை டிவி பார்த்தவாறு நேரத்தைக் கடத்தியவன்..., தான் வாங்கி வைத்திருந்த மல்லிகைப் பூவை எடுத்தவாறு அறைக்குச் சென்றான். அங்கே வளரோ.., படுக்கையில் அமர்ந்து..., நகம் கடித்தவாறு எதையோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

அவன் அருகில் அமரவே..., அவனை நிமிர்ந்து பார்த்தவள்..., படுக்கையைப் பார்த்தவாறே..., “நான் ஹாஸ்டல்ல தங்கிக்கலாம்னு இருக்கேன்...”, தகவலா..., அனுமதியா..., இன்னதென்று புரியாத குரலில் கேட்க, அவளை அழுத்தமாகப் பார்த்தவன்...,

“அப்படியா ...அப்போ சரி...”, சொல்லிவிட்டு..., பூவைப் படுக்கைக்கு அடியில் வைத்துவிட்டு, சரிந்து படுத்துக் கொண்டான்.

அவனது பதில் அவளைத் திகைக்க வைக்க, சிலையென அமர்ந்திருந்தாள். அவனோ..., அவளிடம் இப்படி ஒரு முடிவை எதிர் பார்க்காமல் திகைத்திருந்தான்.

இருவருமே ஒருவர் மீது ஒருவர் உரிமை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று எண்ணினார்களே தவிர..., முதல்படியை இருவரும் எடுத்து வைக்கத் தெரியாமல் விழித்தார்கள்.

# பகுதி – 16

ஆயிற்று..., விளையாட்டுப் போக்கில் சில மாதங்களும்..., குழப்பத்தில் சில மாதங்களும்...., தவிப்பில் சில மாதங்களும்..., கோபத்தில் சில மாதங்களும் கடந்திருக்க..., வளர் மூன்றாம் வருடத்தில் அடியெடுத்து வைத்தாள்.

ஹாஸ்டலுக்குச் செல்ல இன்னும் ஒரு வாரமே இருந்தது. இரண்டாம் வருடத்தின் பாதியிலேயே அவள் ஹாஸ்டல் செல்ல முடிவெடுத்தாலும்..., ஹாஸ்டல் ரூல்ஸ் அதை அனுமதிக்காததால்..., வீட்டிலேயே இருந்துகொண்டாள்.

அவள் ஹாஸ்டலுக்கு வருவதாக நூரிடம் சொன்னபொழுது..., திகைத்துப் போனாள். என்னதான் நடக்கிறது..., அன்று தன்னிடம் அவ்வளவு சொன்னவன்..., இன்று அவளை ஹாஸ்டலுக்கு அனுப்புவதன் காரணம் என்ன...? அவளால் கணிக்கவே முடியவில்லை.

வளரோ, என்னவோ யோகியைப் போல் நடந்துகொண்டாள். அனைத்தின் மீது இருந்த பற்றுக்களையும் துறந்தவள்போல் நடந்துகொண்டாலும்..., உள்ளுக்குள் உருகுவது, அவளது உடல் மெலிவிலேயே தெரிய வந்தது.

முகிலோ..., ‘என்னைத் தேடி உன்னை வர வைக்காமல் விட மாட்டேன்... அத்தோடு..., என் சட்டையைப் பிடித்து,நீ கேள்வி கேக்க வைக்காமலும் விட மாட்டேன்’ என சூளுரைத்துக் கொண்டான்.

வளர் ஹாஸ்டல் போவதை அறிந்த நாயகம் கொந்தளித்துப் போய்விட்டார். “முதலில் அவளை டுட்டோரியல் அனுப்பினான்..., பிறகு கல்லூரி..., அதன் பிறகு நம்மை விட்டுப் பிரித்து அழைத்துச் சென்றான். இப்போ என்னன்னா..., அவளை ஹாஸ்டல்ல சேக்கப் போறானாம்..., என்ன நினைச்சுட்டு இருக்கான்.

“அப்படியே அவளைத் தள்ளி வச்சுடலாம்னு பாக்குறானா…? அதுக்கு நான் விட்டுடுவேனா…? இப்போவே போய் என்னன்னு கேக்குறேன்… ஒரு புள்ளையைக் கல்யாணம் செஞ்சு…, மூணு வருஷம் வாழ்ந்த பிறகு அவளைத் தள்ளி வைக்கணும்னா…., நான் உயிரோட இருக்குற வரைக்கும் அது நடக்காது…”, கொந்தளித்துபோய் அவன் வீட்டுக்கு வந்தார்.

அவர் வந்த நேரம் முகில் வீட்டில் இருக்கவில்லை. வந்தவரின் வேகத்தைப் பார்த்து மிரண்ட வளர்…, அவர் வந்த காரணத்தை அறிந்த பொழுது…, அதிர்ந்துபோனாள்.

போகவேண்டும் என்று முடிவெடுத்தது நான்….,
அப்படியிருக்க…, இவர் தன் கணவனைத் தவறாக நினைப்பதை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அவள் எவ்வளவோ மறுத்துக் கூறியும்…, அதை அவர் நம்பத் தயாராக இருக்கவில்லை. முகில் வீட்டுக்குள் நுழைந்த அடுத்த நொடியே…, அவனைப் பிலு பிலுவெனப் பிடித்துக் கொண்டார். அவனை ஒரு வார்த்தை கூடப் பேச அனுமதிக்கவில்லை.

இறுதியில் வார்த்தைகள் தடித்து முற்றும் வேளையில்…, வளர் தன் மாமாவிடம் கும்பிட்டுக் கேட்க…, “என்னடா…, இவனால் என்ன செய்ய முடியும்னு பாக்குறியா…? செய்யிறேண்டா…, கல்யாணம் ஆகி, மூணு வருஷம் இவளோட வாழ்ந்துட்டு…, இப்போ ஹாஸ்டலுக்கு அனுப்பிட்டு…, அப்படியே வெட்டி விடலாம்னு பாக்குறியா….”, வெளியேறியவர் திரும்பி வந்து சத்தம் போட…, அவர் காலிலேயே விழப் போனாள்.

“என்ன ஆனாலும் நீதான் என் மருமக…, அதை யாரும் மாத்த முடியாது. நீ கவலைப்படாமல் இரும்மா…, உனக்கு நாங்க இருக்கோம்…”, அவளுக்கு நம்பிக்கை அளித்தவர், அதன் பிறகும் மனமில்லாமல்தான் வெளியேறினார்.

அவர் வெளியேறவே..., கோபமாக அறைக்குச் சென்றவன்..., தன் லேப்டாப் பேகை தூக்கி தூர வீசினான். வளர் கலவரமாக அறைக்குள் வரவே..., அவளிடம் எதையோ சொல்லப் போனவன்..., தலையை உதறிவிட்டு..., குளிக்கச் சென்றான்.

அவன் கோபமாக இருக்கிறானோ என்று அவள்தான் தவித்துப் போனாள். இந்த ஒரு வாரமும் அவனுடன் இணக்கமாக.., ஒவ்வொரு நொடியும் ஆழ்ந்து அனுபவிக்க வேண்டுமென்று அவள் நினைத்திருக்க..., நடந்து முடிந்த சம்பவத்தை நினைத்து அழுவதா சிரிப்பதா என்பதே தெரியவில்லை.

அறையின் தனிமையில் ஒலித்த கடிகாரத்தின் டிக்... டிக்... ஒலி மட்டுமே அங்கு நிறைந்திருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு..., அவள் பிரண்டு பிரண்டு படுக்க..., அவனுக்கு முதல் இரவில் நடந்த நிகழ்வு நினைவுக்கு வந்தது.

“ம்ச்..., இப்போ எதுக்கு இப்படி உருண்டுட்டே வாற...”, எழுந்து அமர்ந்து கேட்க...,

“இல்ல..., ஒண்ணு கேக்கணும்....”, அவள் தயங்கித் தயங்கி இழுக்க..., அவள் செய்கையில் மயங்கியவன்..., “எனக்குக் கூட ஒண்ணு கேக்கணும்...”, அவன் சீரியசாகச் சொல்ல..., தான் கேட்கவந்ததை விட்டுவிட்டு..., “என்னன்னு சொல்லுங்க...”, வேகமாகக் கேட்டாள்.

“ம்..., முத்தம் கொடுத்தாலே குழந்தை பொறக்குமான்னு எனக்கு ரொம்ப நாளா சந்தேகம்...., அதை எப்படித் தீக்குறது?...”, சீரியசாகக் கேட்டவன்.., அவள் அதிர்ந்திருப்பதைப் பொருட்படுத்தாமல்..., அவளை இழுத்து அணைத்து..., அவள் இதழ்களில் தன் இதழ்களைப் பொருத்தினான்.

அவளால் நடப்பதை நம்ப முடியவில்லை. அவன் கரங்களும்.., இதழ்களும் அவளை உருக்க..., அவன் அளிக்கும் வெம்மையில் உருகிக் கரைந்து, குழைந்து, அவனுக்குள் தொலைந்து போனாள்.

அவனும், அவளின் அதிர்வையும் தயக்கத்தையும் மனதில் கொண்டு , மென்மையாகவே அவளைக் கையாண்டான் .

விடியல் வந்த பிறகே அவளைவிட்டு அவன் விலக..., முழுதாகக் களைத்துப் போனாள் வளர். தொடர்ந்த ஒரு வாரமும் அவளைவிட்டு அவன் விலகாமல் இருக்க..., தேனிலவு கொண்டாடும் புதுமணத் தம்பதிகளாயினர் அவர்கள்.

ஒரு வார இறுதியில்,அவனைவிட்டு விலகவே முடியாது என்ற நிலையிலிருந்தாள் வளர். ஆனால் அவனுக்கு அப்படி எந்த பாதிப்பும் இருந்ததாகத் தெரியவில்லை. சாதாரணமாக அவன் உலாவ..., அவள் என்ன முடிவெடுத்திருக்கிறாள் என்பதை அறிய வேண்டி...,

“இன்னைக்கு ஹாஸ்டல்....”, அவன் வார்த்தையை முடிக்கும் முன்பே..., “உங்களுக்கு ஏன் சிரமம்...., நானே சாயங்காலம் போய்க்கிறேன்...”, அவன் முகம் பார்க்காமல் அவள் சொல்ல..., அவனுக்கு சுள்ளென்ற கோபம் கிளர்ந்தது.

“அதென்ன சாயங்காலம்....., அதுவரைக்கும் இங்கே என்ன செய்யப் போறியாம்...”, நக்கலாகக் கேட்க..., உடனடியாக வீம்பாகக் கிளம்பினாள்.

அவள் செய்கையைக் கண்டு தலையிலேயே அடித்துக் கொண்டான். ‘என்னை அனுப்பணும்னு முடிவு செஞ்ச பிறகு..., ஏன் என்னைத் தொட்டியாம்னு கேக்குதா பாரு..., இவளுக்குத் தனியா இருந்து  அவஸ்தை பட்டால்தான் புத்திவரும்...’, எண்ணியவன்..., அவளை அழைத்துச் சென்று ஹாஸ்டலில் விட்டு வந்தான்.

வளருக்கு முதல் முறையாகக் கோபம் என்னும் உணர்வு அப்பொழுதுதான் எட்டிப் பார்த்தது. ஆனால் அதை அவனிடம் வெளிப்படுத்தும் வகையறியாமல்..., பதுமையென அவனது சொல்படி நடந்தாள்.

அப்பொழுதும் நூரின் கண்காணிப்பில், அவள் அருகிலேயே அவளை வைத்திருக்கச் சொல்லிவிட்டே வந்தான். கல்லூரித் துவங்க இன்னும் மூன்று நாட்கள்

இருக்கவே..., அந்த மூன்று நாளும்..., வளர் விரதம் இருந்தாள் என்றுதான் சொல்லவேண்டும்.

நினைவுகளும்..., நிகழ்ந்தவையும் அவளைக் கொன்றது. எவ்வளவு முயன்றும் நினைவுகள் அவளைச் சுற்றி வந்ததைத் தடுக்கவே முடியவில்லை. அந்த மூன்று நாட்களுக்கே, அவளின் நிலையைக் காண  முடியாமல்..., நூர்ஜஹான் ,முகிலுக்கு அழைத்துவிட்டாள்.

“இன்னும் கொஞ்சநாள்தான் தங்கச்சி...., அவளே என்னைத் தேடி வந்துடுவா...”, நம்பிக்கையாகச் சொல்லிவிட்டு வைத்துவிட்டான்.

அவனுக்கு, எப்படியும்..., எதற்காகவும்...., எந்தச் சூழலிலும் அவளை விட்டுக்கொடுக்க முடியாது என்று அவள் நினைக்கவேண்டும் என்று எண்ணினான். உரிமையாகத் தன்னிடம் சண்டை போடவேண்டும்..., தன் அன்பில் கரையவேண்டும்..., அவள் அக்கறையில் தான் நனையவேண்டும் என்று எண்ணினான்.

அடுத்த நாட்களும் வளர் இதையே தொடர..., கோபத்தில் அவளை அடிக்கும் அளவு சென்றுவிட்டாள் நூர். “என்னதாண்டி நினைச்சுட்டு இருக்க...? அவர் கூட வாழ்ந்துட்டேன்னு ஒரு நிமிஷம் சந்தோசப்படுற.., அடுத்த நிமிஷமே... அவரை விட்டு வந்துட்டேன்னு தவிக்கிற...., சாப்பிடாமல் உன்னையே வருத்திக்கிற.

“அவர் நினைப்புக் கொல்லுதுன்னு புலம்புற..., இவ்வளவு சொல்லுறவ..., அவர் உன்னை ஹாஸ்டல்ல விட வந்தப்போ..., போக முடியாது..., இதுதான் என்னோட வீடுன்னு சொல்ல வேண்டியதுதானே. அப்போ வாயில என்ன கொழுக்கட்டையா வச்சிருந்த...அதான் அம்மணி அவரை வேண்டாம்னு முடிவு பண்ணிட்டு வந்துட்டல்ல..., அப்போ எதுக்கு இந்தத் தவிப்பு.

“முதல்ல எழுந்து குளிச்சுட்டு சாப்பிடுற ஆமா...”, அவளை வலுக்கட்டாயமாக எழுப்பிச் சாப்பிட வைத்தாள்.

இதுவே தொடர்கதையானது..., கிட்டத்தட்ட ஒரு மாதம் வரைக்கும் அவளை வந்துப் பார்க்கவில்லை அவன். அவனது முகத்தையாவது பார்க்கலாம் என்ற அவளது எண்ணம் ஒவ்வொரு வாரமும் ஆட்டம் கண்டது.

தொலைப்பேசியில் பேச எண்ணினாலோ..., தயக்கம் தடுத்தது. அவளது தயக்கத்தையும் தகர்த்தெறிந்தது அன்றைய விடியல். காலையில் பிரஷ் செய்யும்போதே குமட்டிக்கொண்டு வாந்தி வர..., அவளுக்கு நொடியில் விஷயம் விளங்கியது.

நைட்டிக்கு மேலாக அவள் அடிவயிற்றைத் தடவ..., உள்ளுக்குள் ஒரு சிலிர்ப்பு ஓடியது. 'அவரோட குழந்தை...', தேகம் சிலிர்த்து அடங்கியது. இதை அவனிடம் சொல்லியே ஆகவேண்டும்..., உள்ளம் துடிக்க..., நூரிடம் கூடச்சொல்லாமல்..., ஹாஸ்டல் வரவேற்புக்குச் சென்றவள், அவனுக்கு அழைத்தாள்.

அவனது குரலுக்காகத் தவிப்புடன் இங்கே காத்திருந்தாள். "ஹல்லோ...", அவன் குரல் தூக்கக் கலக்கத்தில் சோர்ந்து ஒலித்தது.

அதைக் கண்டுகொள்ளாமல்..., "அத்தான்...., அத்தான்....", அவள் திக்கித் திணற..., அவனது தூக்கம் பறந்து போனது.

போர்வையை தூக்கி வீசிவிட்டு எழுந்து அமர..., "என்னம்மா...", நீண்ட நாள் கழித்து அவள் குரல் கேட்பதால்..., அவன் குரலும் கனிவுடனே வெளிவந்தது.

"என்னங்க... நான்... நீங்க... நமக்குப் பாப்பா வரப் போகுதுங்க...", அதைச் சொல்லும் முன்பே கண்ணீர் வழிந்தது.

ஒரு நிமிடம் உறைந்து போனான். மனைவி, தான் தந்தையாகப் போகும் செய்தியை..., இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இருந்தும் கூட..., அலைபேசியில் அறியும் அவலம்..., கண்களை மூடி அந்த நிமிடத்தின் இனிமையையும்..., துயரையும் அனுபவித்தான்.

அதை அவளிடம் வெளிக்காட்டாமல்..., “அப்போ.... முத்தம் கொடுத்தால் குழந்தைப் பொறக்கும்..., உன் கண்டுபிடிப்பு பரவாயில்லையே..., சூப்பர் போ...”, அவன் குரல் நக்கலாக ஒலிக்க, சுக்கு நூறாக நொறுங்கிக் கொண்டிருந்தாள் வளர்.

தொலைப்பேசியை அதன் இடத்தில் பொருத்தியவள்..., வேகமாக அறைக்குத் திரும்பினாள். நொடியில் உடை மாற்றியவள்..., “நூர்..., இன்னைக்கு நான் காலேஜ் வரலை. கொஞ்சம் வேலை இருக்கு...”, சொன்னவள்.., அவள் உடன் வருவதாகச் சொன்னதைக் கூட கண்டுகொள்ளாமல் வெளியேறினாள்.

ஆட்டோ பிடித்து..., அவர்களது வீடு வந்து சேரும்வரை அவள் உள்ளத்தின் தகிப்பு அடங்கவில்லை. அவளது இந்தக் கோபம் ஒரே நாளில் வந்தது கிடையாது.

இந்த ஒரு மாத காலமாக..., கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்டக் கோபமிது. அவனை உயிராக நினைத்ததைத் தவிர, வேறு என்ன குற்றம் நான் செய்தேன்? என்னை ஏன் இப்படி வதைக்கிறான்.

அதிலும் இறுதியாக ஒரு வாரம் அவர் நடந்துகொண்டதற்கு என்ன விளக்கம் அவரால் சொல்ல முடியும்? என்னை ஹாஸ்டல் அனுப்பும் முடிவில் இருந்தவர்..., பிறகு ஏன் என்னைத் தொட்டார். இந்த ஒரு மாத காலமும் என் நினைப்பே இல்லாமல் எப்படி அவரால் இருக்க முடிந்தது.

அப்படி அவரால் இருக்க முடிகிறது என்றால்...., என்னை என்னவென்றுதான் அவர் நினைக்கிறார். நான் அவர்மேல் கொண்ட நேசத்துக்கு என்னதான் மதிப்பு....

இறுதியாக..., அவர் அப்பா ஆகப் போகிறார் என்று சொல்கிறேன்..., இதென்ன நக்கலாக ஒரு பதில்...., இதை இப்படியே விட்டால் நான் உணர்வுள்ள ஒரு பெண்ணாக இருக்கவே முடியாது.

என் வயிற்றில் வளரும் குழந்தைக்கு அவர்தானே அப்பா. என் உரிமையை நான் விட்டுக் கொடுக்கலாம். ஆனால்...,

என் பிள்ளையின் உரிமையையோ.., உறவையோ என்னால் விட்டுத்தர முடியாது.

அதே வேகத்தில் வந்தவள்..., கதவைப் படபடவென அடிக்க..., தூக்கக் கலக்கத்தோடு எழுந்துவந்து முகில் கதவைத் திறந்தான்.

திறந்தவனிடம்..., “ஃபோன்ல என்ன சொன்னீங்க...?”, நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்.

“என்ன சொன்னேன்...?”, அவன் அசராமல் கேட்டுவிட்டு உள்ளே செல்லப் போக..., அவன் முன்னால் வந்து நின்று, பாதையை மறித்தாள்.

அவள் கண்களில் அப்படி ஒரு கனல்..., இதுவரை இப்படி ஒரு பார்வையில் அவளை, அவன் கற்பனை செய்து கூட பார்த்தது இல்லை. திகைப்பாய்..., கண்கள் மின்னப் பார்த்தவன்..., அவளைப் பார்த்தவாறே நின்றான்.

அவனின் அசையாத பார்வை கண்டும் தடுமாறாமல்...., “ஏன்..., அன்னைக்கு எனக்கு முத்தம் கொடுக்கும்போது தெரியாதா..., குழந்தை பொறக்கும்னு..., நீங்க மனசில் என்னதான் நினைச்சுட்டு எல்லாம் செய்யிறீங்க. உங்க இஷ்டத்துக்குத் தொடுறதும்..., ரொம்ப ஈசியா போன்னு சொல்லிடுறதும்...

“எனக்குன்னு ஒரு மனசு..., அதில் ஆசை..., கனவு..., உணர்வு..., வலி..., இப்படி எல்லாம் இருக்கும்னு நீங்க புரிஞ்சுக்கவே இல்லையா...? உங்களுக்கு எப்படி மனசு வந்துது..., என்கிட்டே இப்படிக் கேக்க உங்களால் எப்படி முடிஞ்சுது?...

“அப்படியே செத்....”, அவளை, மேலே ஒரு வார்த்தைப் பேச விடாமல் தன்னோடு சேர்த்து அணைத்தவன்..., “உன்கிட்டே அந்த வார்த்தையைக் கேக்க முன்னாடி நான் செத்துட்டேண்டி...., அதை நீ எப்படி புரிஞ்சுப்ப...?

“இப்போதான் உனக்கு இந்தக் கேள்வியெல்லாம் கேக்கணும்னு தோணிச்சா? உன்னோட மலர்போன்ற

பேச்சையும் உணர்வுகளையும் மட்டுமே பார்த்த எனக்கு..., நீ என்னோட இப்படி சண்டை போட்டு..., உரிமையா பேச வைக்கணும்னு ஆசை.

“அத்தோட ஒரு சின்னப் பொண்ணை உயிரா நேசிச்சும்.., அவளைத் தொட முடியாத தயக்கம். அவளைத் தொட்ட பிறகு..., அவ என்னை விட்டுப் போறேன்னு சொன்னப்போ..., அவ தன்னையே உணரணும்னு விலகி நின்ன என்னோட தவிப்பு...

இதையெல்லாம் உனக்கு எப்படிப் புரிய வைக்க?அதான் இப்படியெல்லாம் செஞ்சேன்..., இப்போகூட நீ பேசலைன்னா..., என்ன செஞ்சிருப்பேன்னு எனக்கே தெரியாது....”, இப்பொழுதும் அவளின் அதிர்ந்த பார்வையைப் பார்த்தவன்...,

“இப்படியே பாத்துப் பாத்தே என்னைக் கொல்லு...., உன்ன...”, அவள் அதிர்வை இறக்கும் முயற்சியில் அவன் ஈடுபட்டான்.

அதன் பிறகு..., அன்று மல்லிகைப்பூ வாங்கி வந்தது முதல்...., அவளது பேச்சினால் அவன் அமைதியாகச் சென்றது, அவள் பட்டுத் தெரியவேண்டும் என்பதற்காக அவளை விட்டுவிட்டது என அனைத்தையும் சொன்னவன்..., அவளிடம் போனசாக சிணுங்கலும்...., அடிகளையும் வாங்கிக் கொண்டான்.

அதோடு இந்த சந்தோஷ விஷயத்தை, நூர், மற்றும் அவர்களது பெற்றோரிடமும் தெரிவித்து மகிழ்வை இரட்டிப்பாக்கிக் கொண்டார்கள்.

அலைபேசியில் பேசும்பொழுதே...., அவன் அவளைச் சீண்ட..., அவனைத் தடுத்தவள்..., அலைபேசியை வைத்துவிட்டு, கோபமாக அவனைப் பொரியத் துவங்கவே..., சந்தோசமாக அதைக் கேட்டபடி நின்றிருந்தான் முகில்.

அந்த மலரின் இதழ்களால்..., கோப வார்த்தையைக் கேட்ட அவனுக்கு..., இனிமேல் வாழ்க்கை சுவாரசியமாக

இருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

நன்றி.